

KALKI
24.10.2004
ரூ.6.00
கல்கி
கிரிக்கெட் கசமுசா!
"நான் சினிமா ரசிகன்!"
- ராமதாஸ்
"இனி பொறுக்க மாட்டோம்!"
-குஷ்பு ஆவேசப் பேட்டி


பட்டு நூலிழைகளின் வண்ணம்
தொட்டு சிறகடிக்கும் எண்ணம்
சாரதா'ஸ் பட்டு ரகங்கள்....
சாரதா'ஸ்
சுப முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்
45,என்.எஸ்.பி. ரோடு. திருச்சி-2. போன்:2702077.
தன்பில்டிங்,827,மவுண்ட்ரோடு,சென்னை-2,போன்:28521



யப்பா... குஷ்பு என்னமா கொதிக்கறாங்க!
4
மயங்கி விழுந்த தால சினிமா சான்ஸாம்!
20
ராமதாஸ் பேட்டி படிச்சி ஃபீல் ஆயிட்டேன்!
28
'ஸ்டெம் செல்ஸ்'... யோசிக்க வேண்டிய விஷயம்தான்!
16
கல்கி
24.10.2004



ஓசி, ஓகே, சீ3


ஏதாவது மிகச் சிறந்ததாக இருக்கிறது என்றால் ஏஒன் (A1) என்கிறோம். மிக மிக மோசமானதாக இருந்தால் சி-த்ரீ (C3) ஆக இருந்தது என்று சொல்ல வேண்டும்.

அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் தமது கோப்புகளில் ORL KORRECT என்று எழுதுவதற்குப் பதிலாக OK என்று எழுதுவாராம். இதுவே எல்லோர் பழக்கத்திலும் வந்துவிட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் ஆட்சி செய்தபோது கம்பெனியின் கடிதங்களுக்கு தபால்தலை ஒட்டுவதில்லை ON COMPANY SERVICE என்ற முத்திரையிட்டு தபால்கள் அனுப்பப்படும். இவ்வாறு இனாமாக கடிதங்கள் பட்டுவாடா செய்யப்படுவதைக் கண்ட நமது மக்கள் OC என்பதை இலவசம் என்ற பொருளில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர்.

- எஸ். விஜயலட்சுமி

* பசவராஜ்



2,3 விஷயம்

'பூத்' கவுன்சிலர்

அறந்தாங்கி நகராட்சியில் கவுன்சிலர் தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. இதில் தி.மு.க.வைச் சேர்ந்த ராமசாமி வெற்றி பெற்றார்.



* ராமசாமி

இதில் என்ன விசேஷம் என்கிறீர்களா! இவர் ஒரு எஸ்.டி.டி. பூத்தில் வேலை பார்க்கிறார். சம்பளம் 900 ரூபாய். கவுன்சிலரான பிறகும் தொடர்ந்து பணியைத் தொடர்கிறார். கவுன்சிலர் ஆனவுடனே கட்டப்பஞ்சாயத்து, கமிஷன் என்று இருக்கும் அரசியல்வாதிகளிடையே "சொந்த வாழ்க்கைக்கு எஸ்.டி.டி. பூத் பணி. சமூகப் பணிக்கு கவுன்சிலர் பதவி," என்று சொல்லும் இவர் வித்தியாசமான மனிதர்தானே!

- அறந்தை
சோ. வாசகி

சரிதானா சரத்?

கடந்த 26.9.2004 அன்று திருநெல்வேலி சூரியன் FMல் நடிகர் சரத்குமாரின் நட்சத்திர பேட்டியை நேரடியாக ஒலிபரப்பினார்கள். அப்போது ஒரு நேயர் "தியேட்டரில் டிக்கெட் கட்டணம் அதிகமாக உள்ளது. எனவே எங்களால் தியேட்டருக்கு வர இயலவில்லை" என்றார். அதற்கு சரத்குமார், "உங்களை தியேட்டர்காரர்கள் யாரும் வலுக்கட்டாயமாக அழைக்கவில்லை; உங்களால் அதிக கட்டணம் கொடுக்க முடிந்தால் போய்ப் பாருங்கள், இல்லையெனில் அதிக கட்டணம் கொடுக்குமளவிற்கு உழையுங்கள்" என்றார். இது சரிதானா சரத்?

- ரா. சாலமோன்,
ஆலங்குளம்

வாழ்க வளமுடன்!

சமீபத்தில் ஒரு திருமணத்திற்குச் சென்றிருந்

தேன். திருமணம் தமிழ் முறைப்படி நடந்தது. தமிழில் வாழ்த்துப் பாடினர். தாலிகட்டும்போது 'மணமக்கள் வாழ்க' என்று குரல் எழுப்பினர். பொதுவாக தாலி கட்டும்போது, மணமக்கள் மீது போடப்படும் அந்த அட்சதைகள் முன் வரிசையில் அமர்ந்திருப்பவர் தலையில் தான் விழும்.



* சரத்குமார்

இந்தத் திருமணத்தில் தாலி கட்டி முடிந்தவுடன் மணமக்கள் எழுந்து மண்டபம் முழுவதும்



செல்ல, அனைவரும் அட்சதை தூவி வாழ்த்த, அந்த வாழ்த்தை மணமக்கள் மனமாரப் பெற்றுக் கொண்டனர்.

எல்லாரும் இந்த ஆசீர்வாத முறையை கையாண்டால் சிறப்பாக இருக்கும் அல்லவா?

- ஜோ. ஜெயக்குமார்,
சிவகங்கை மாவட்டம்

பாட்டிலில் கலை வண்ணம்

பெங்களூரைச் சேர்ந்த முப்பது வயது பசவராஜ் கௌடா ஒரு எலெக்ட்ரீஷியன். காலி பாட்டிலின் உள்ளே அழகாகவும் நேர்த்தியாகவும் பொம்மைகளை நுழைத்து, கண்ணைக் கவரும் வகையில் படைத்து விடுகிறார். பொம்மைகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டி அந்த பாகங்களை குறுகிய பாட்டிலின் கழுத்து வழியே உள்ளே விட்டு, பிறகு அவற்றை ஒட்டுகிறார். பொம்மைகள், ஊஞ்சலாடும் இரண்டு டெடிகரடிகள், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெறும் மூன்று பொம்மைகள் அமைப்பு, எகிப்திய பிரமிட் என்று பல வகையில் இவர் கை வண்ணத்தைக் காட்டியுள்ளார்.

- ஜி. இந்திரா, பெங்களூர்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டடத்தில், கடந்த வாரம் ஒரு மாறுபட்ட பத்திரிகையாளர் சந்திப்பு. விஜய்காந்த், சத்யராஜ், குஷ்பு தலைமையில் கூடியிருந்த நடிகர், நடிகைகள், "தனிப்பட்ட முறையில் ஆதாரமற்ற கிசுகிசுச் செய்திகளை எழுத வேண்டாம்" என்று அங்கே குழுமியிருந்த சினிமா பத்திரிகையாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அந்தக் கூட்டத்தில் பேசிய குஷ்பு "நடிகைகள் என்ன, உங்கள் வீட்டு விளையாட்டு பொம்மைகளா?" என்று கேட்டு கொதித்திருக்கிறார். அவரது சூடு தணியும் முன்பே அவரைச் சந்தித்தோம்.

முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு பத்திரிகைகளைப் பார்த்து ஏன் இத்தனை அச்சப்படுகிறீர்கள்?

கிசுகிசுக்களும், அவதூறுகளும் சர்வ சாதாரணமாகிவிட்டன. தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் உண்மையிருந்து, ஒரு சதவிகிதம் கற்பனை கலந்து எழுதினால் பரவாயில்லை. இப்போது நிலைமை அப்படியாயிருக்கிறது? எப்படி வேண்டுமானாலும் எழுதலாம், யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் எழுதி கேவலப்படுத்தலாம் என்றால், இதை எத்தனை நாள் பொறுத்துக் கொண்டு போவது? கேட்க ஆள் இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. இனியும் பொறுக்க மாட்டோம்.

திரையுலக நட்சத்திரங்கள் பற்றி நாகரிகமாக கிசுகிசு எழுதுவது, நீண்ட காலமாக இருந்து வருவதுதானே?

அந்த நாகரிகம் இப்போது அறவே இல்லை என்பதுதானே பிரச்னை. பூ நடிகை என்றால் குஷ்பு என்று ஊருக்கே தெரியும். காந்த் நடிகர், உண்மை பேசும் உயரமான நடிகர், சிலம்பான நடிகை என்று எழுதினால் யாரைப் பற்றி எழுதுகிறார்கள் என்று வாசகர்களுக்குத் தெரியாதா? கிசுகிசு தாராளமாக எழுதுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் எல்லைக் கோட்டை ஏன் கடக்கிறீர்கள்? நடிகர், நடிகைகளின் தனிப்பட்ட வாழ்க்கையை ஏன் விமர்சிக்கிறீர்கள்? நாங்களும் மனிதர்கள்தானே? எங்களுக்கும் குடும்பம், குழந்தைகள், உணர்ச்சிகள் எல்லாம் உண்டு. சினிமா இன்று ஃப்ரொபெஷனல் ஆகிவிட்டது. இங்கே இருப்பவர்கள் காதலிக்கக் கூடாதா? திருமணம் செய்து கொள்ளக் கூடாதா? நண்பர்களாக இருக்கக் கூடாதா? எங்களது சொந்த விஷயங்களை விமர்சிக்கிற உரிமை, பத்திரிகைக்கோ தொலைக்காட்சிக்கோ கிடையாது.

"இனி பொறுக்க

பொது வாழ்க்கைக்கு வந்துவிட்ட பிறகு நீங்கள் செய்தியாகிவிடுகிறீர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா, இல்லையா?

சினிமாவில், தொலைக்காட்சியில் நாங்கள் நடித்துக் காட்டுகிற பாத்திரங்கள் மட்டுமே பப்ளிக் ப்ராபர்ட்டி! ஆனால் கேமராவுக்குப் பின்னால் நாங்கள் எப்படி பொதுச் சொத்தாக முடியும்? அங்கே எங்களது தனிப்பட்ட வாழ்க்கை மட்டும்தானே இருக்கிறது? எங்களது பொது வாழ்க்கையை சுதந்திரமாக நடத்தக் கூடாதென்று ஏன் கிசுகிசுக்களையும், அவதூறுகளையும் எழுதி, எங்களை





மாட்டோம்!"

வெளியே தலைகாட்ட முடியாதபடி செய்கிறீர்கள்?

கிசுகிசுக்கள் புனையப்பட்டவை என்றால், வெளியே சுதந்திரமாக நடமாட ஏன் அஞ்ச வேண்டும்?

நான் இதற்கெல்லாம் எப்போதுமே பயப்பட்டதில்லை. எனது குழந்தைகளை, கடற்கடற்கரையில் சுதந்திரமாக விளையாட விடுகிறேன். நடந்தபடி நானே அழைத்துச் செல்கிறேன். எனது தனிப்பட்ட வாழ்க்கையை நான் ஒவ்வொரு நொடியும் வாழ்ந்து தீர்க்கிறேன். ஆனால் எல்லோராலும் குஷ்புபோல் இருக்க முடியாதே. நிறையப் பேர் வீட்டை விட்டு வெளியே வரவே பயப்படுகிறார்கள். எதையாவது எழுதிவிட்டால் என்ன செய்வது என்று யோசிக்கிறார்கள்.

கிசுகிசுக்களால் தனிப்பட்ட முறையில் நீங்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டீர்கள்?

அதை வார்த்தைகளால் விவரிக்கவே முடியாது. நான் நடிக்க வந்த புதிதில் அண்ணனுடன் வெளியே போனேன். உடனே 'அழகான வாலிபருடன் குஷ்பு ஊர் சுற்றுகிறார்' என்று எழுதினார்கள். யார், என்ன என்று கூடக் கேட்கவில்லை. 1991ல் சின்னத்தம்பி படம் வெற்றி பெற்ற நேரம். இதைக் கொண்டாடும் விதமாக, எனது பிறந்த நாள் பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தேன். மிகவும் பர்செனல் பார்ட்டி என்பதால், உறவினர்கள், நண்பர்களை மட்டுமே அழைத்திருந்தோம். பிரஸ்ஸைத் தவிர்த்துவிட்டேன். அழைப்பு இல்லாமலேயே பார்ட்டிக்கு வந்த சில நிருபர்களை, ஹோட்டல் சிப்பந்திகள் தடுத்து நிறுத்திவிட்டார்கள். இதன் உடனடி விளைவாக, மறுநாள் சில காலைப் பத்திரிகைகளில் வந்த செய்தி என்னை அதிர்ச்சியடைய வைத்தது. அந்த பார்ட்டியில் நான் மது அருந்திவிட்டு கீழே விழுந்து விட்டதாகவும் எனது அண்ணனும், பிரபு சாரும் என்னை தூக்கிக் கொண்டு போனதாகவும் செய்தி வந்திருந்தது. இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இவை எல்லாவற்றையும்விட என் மனதை மிகவும் காயப்படுத்திய ஒன்று. ஒரு பிரபல வார இதழில் எனக்கும், பாலச்சந்தர் சாருக்கும் திருமணம் என்று எழுதினார்கள். கூடவே ஏப்ரல் ஃபூல் விளையாட்டு என்றார்கள். அந்த பத்திரிகைமீது ஒரு ரூபாய் மானநஷ்ட வழக்குப் போட்டோம். நாங்கள் நினைத்திருந்தால் பல லட்சம் கேட்டும் வழக்குப் போட்டிருக்க முடியும். இறுதியில் அந்தப்

–குஷ்பு ஆவேசப் பேட்டி

பத்திரிகை மன்னிப்புக் கேட்டது.

அடிப்படையில்லாமல் எழுதுவது சம்பந்தப்பட்ட நடிகர் - நடிகையரின் குடும்பத்தை எந்த வகையில் பாதிக்கிறது?

இதற்கு என்னுடைய அனுபவத்தையே சொல்கிறேன். சமீபத்தில் குடும்பப் பத்திரிகை என்று போட்டுக் கொள்கிற ஒரு வார இதழில், என்னைப் பற்றி படுகேவலமாக, ஏதோ என் படுக்கையறையில் ஒளிந்திருந்து பார்த்ததுபோல கொச்சையாக எழுதியிருந்தார்கள். இப்படி எழுதியவரின் வீட்டில் அம்மா இல்லையா? சகோதரிகள் இல்லையா? இது மாதிரி செய்திகளை எனது கணவர் படிக்கவே மாட்டார். ஆனால் எனக்கும், எனது கணவருக்கும் உறவினர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்! அவர்கள் படித்துவிட்டு போன் மூலம் கேள்வி கேட்கும்போது மனசு கொதிக்கிறது. எனது மாமியாருக்கும் எழுபது வயதாகிறது. இதய பைபாஸ் ஆபரேஷன் ஆனவர், வேதனையோடு கேட்கும்போது நமக்கு அழுகை வருகிறது. எனது சக நடிகை ஒருவரைப் பற்றி வந்த கீழ்த்தரமான கிசுகிசுவைப் பற்றி, அவரது குழந்தைகள் படிக்கும் பள்ளியில், கூடப் படிக்கும் மற்றப் பிள்ளைகள் கேலியாகப் பேசியிருக்கிறார்கள். மனம் உடைந்து போன குழந்தைகள், விரக்தியோடு வீட்டுக்கு வராமல் கடற்கரையில் போய் உட்கார்ந்து விட்டார்கள். இப்படி நிறைய. இப்போது கொடுமை என்னவென்றால், வதந்திகளை அட்டையிலேயே கவர் ஸ்டோரியாகப் போடுகிறார்கள். இப்படிப் போடுவதை தொலைக்காட்சியில் ஒரு நாளைக்கு நூற்று ஐம்பதுமுறை விளம்பரம் வேறு செய்கிறார்கள். இந்த நோய், தொலைக்காட்சிக்கும் பரவி விட்டது.

தங்களுக்கு வருகிற விளம்பர வருமானத்தை தொலைக்காட்சி நடத்துகிறவர்கள் எப்படி இழக்க நினைப்பார்கள்?

அவர்களும் நேர்மையாக இல்லை என்பதுதான் உண்மை. டாப் டென் மூவீஸ் என்று போடுகிறார்கள். போடட்டும்! ஆனால் பாக்ஸ் ஆபீஸ் கலெக்ஷனை அடிப்படையாக வைத்து எந்தப் படத்துக்கு எத்தனையாவது இடம் என்று ரேட்டிங் கொடுங்கள். உங்களது டெலிவிஷனுக்கு சாட்டிலைட் உரிமையை விற்றுவிட்டால், அந்தப் படத்துக்கு மட்டும் ஏன் டாப் டென்னில் முதலிடம் தருகிறீர்கள்? சினிமா இல்லாமல் உங்களால் நிகழ்ச்சி நடத்த முடியுமா?

கிசுகிசுக்கள், வதந்திகள் வரும் பத்திரிகை, தொலைக்காட்சி ஆசிரியர்கள், நிர்வாகிகளை தொடர்பு கொண்டு பேசியிருக்கிறீர்களா?

கிசுகிசு வரும் பத்திரிகைகளின் ஆசிரியர்களைத் தொடர்பு கொண்டு, 'இப்படி ஆதாரமில்லாமல் வந்திருக்கிறதே' என்று கேட்டால், 'நான் பார்க்கவில்லை' என்பார்கள், அல்லது 'எழுதியவர் ஒரு ப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டர்' என்று பொறுப்பில்லாமல் பதில் வரும். இப்படி பதில் சொல்லவா இவர்கள் தலைமைப் பொறுப்பில் இருக்கிறார்கள்? முக்கியமான ஒன்று, வதந்திகளை கேள்விப்பட்டு எழுதும் முன்பு இப்படி செய்தி வந்திருக்கிறதே, அது உண்மையா என்று நாம் எங்கிருந்தாலும் விளக்கம் கேட்டு, அதையும் எழுதுகிற நேர்மையான நிருபர்களும் இருக்கிறார்கள்.

சந்திப்பு : **ஜோஸ்வாபாரதி**
அட்டை, படங்கள் : **ஸ்ரீஹரி**

''எங்க தொகுதிக்கு மந்திரி வந்தார்...''
''வந்து?''
''அவருக்குள்ள குறைகளை மக்களிடம் சொல்லி அழுதுட்டுப் போனார்...!''

- ஜே. தனலட்சுமி





ஸ்ரீ ஸர்வாங்கஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வரஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501. ✆ : 04364 273900

மஹா அன்னாபிஷேகம்

அன்புடையீர்!

அன்னத்திற்கும், அன்னத்தைக் கொண்டு உயிர்வாழும் உயிரினங்கள் அனைத்திற்கும் பதியான பரமேச்வரனுக்கு உயிரினங்கள் காட்டும் நன்றிக் கடனே மஹா அன்னாபிஷேகம். கார் காலம் முடிந்து அறுவடை நடந்து எங்கும் மலை மலையாக நெற்குவியல்கள் நிறைந்து நிற்கும் செழிப்பான காலத்தில் அவனருளால் கிடைத்த அன்னத்தை பயிர்களுக்கு உயிரூட்டி வளர்க்கும் சந்திரன் பூர்ணகலையுடன் விளங்கும் பௌர்ணமி நாளில் பூரண வாழ்வு பெறும் பொருட்டு இறைவனுக்கு அன்னாபிஷேகம் செய்து மகிழ்வது முன்னோர் வகுத்த நெறி.

இந்நெறியைப் பின்பற்றி கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸற்குணேச்வரப் பெருமானுக்கு மஹா அன்னாபிஷேகம்** நடைபெற இருக்கிறது. அன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு இன்னருள் பெற வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி நிரல்:

நாள் : ஐப்பசி 11உ 27.10.2004 புதன் கிழமை
3.00 மணிக்கு மஹாந்யாஸ ருத்ரபாராயணங்களுடன் அபிஷேகம் ஆரம்பம்

மாலை : 6.00 மணிக்கு மஹா தீபாராதனை

மாலை : 6.30க்கு விசேஷ பௌர்ணமி பூஜை
ஸ்ரீ லலிதா த்ரிசதி அர்ச்சனை

இரவு : 8.00 மணிக்கு மஹா தீபாராதனை

இங்ஙனம்,

கோ. தனசேகரன்
நிர்வாக அதிகாரி (கூடுதல் பொறுப்பு)
ஸற்குணேச்வர ஆலயம்.

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை தர்மகர்த்தா

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435 / 2423297 மற்றும் **கிராமவாசிகள்**



கிரிக்கெ

பிரதாப் ராம் சந்த் - முன்னணி கிரிக்கெட் பத்திரிகையாளர். முப்பது வருட அனுபவசாலி. இந்திய கிரிக்கெட் வாரியத்தின் கசமுசாக் களை இங்கே காரசாரமாய் விளாசு கிறார்.

“1920களில், இந்திய மன்னர்கள் ஒன்று சேர்ந்து துவக்கிய அமைப்புதான் இன்று பல மடங்கு விஸ்வரூபமெடுத்து, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியமாகி உள்ளது.

'கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவரை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையும், செயலாளரை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

ஆனால் தங்களுக்கு வேண்டிய தருணத்தில் தேர்தலை நடத்தி, வேண்டியவரை பதவியில் அமர்த்தினார்கள். நம் ஊர் ஏ.சி.முத்தையாகூட தலைவர் பதவியில் மூன்றாண்டுகள் இருக்க முடியவில்லை!

கிரிக்கெட் மேட்ச்களின் ஒளிபரப்பு உரிமையை வாங்கிட, டீ.வி சேனல்கள் போட்டி போடுகின்றன. ஒளிபரப்பு உரிமை வாயிலாக, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் பல கோடி ரூபாய் சம்பாதிக்கிறது. இதற்கு வருமானவரி விலக்கு உண்டு என்பது தனி வயிற்றெரிச்சல்.

ஜக்மோகன் டால்மியா, ஏற்கெனவே வாரியத்தின் செயலாளராக இருந்தவர்; அப்புறம் தலைவர் ஆனார். அதன்பிறகும் பதவி இல்லாமல் அவரால் இருக்க முடியவில்லை. தலைமைக் காப்பாளர் (பேட்ரன் இன் சீஃப்) என்று ஒரு புது பதவியை உருவாக்கி அதில் ஒட்டிக் கொண்டு விட்டார்.

சமீபத்தில் நடந்த தேர்தலில் தலைவர் பதவிக்கு சரத்பவாரை எதிர்த்து தமது ஆதரவாளரான ரன்பீர்சிங் மகேந்திரா என்பவரை களமிறக்கினார். வெற்றியும் கண்டார். இதிலிருந்து ஜக்மோகன் டால்மியா எத்தனை பவர்புல் மனிதர் என புரிந்து கொள்ளலாம். இதற்கிடையில் இந்தத் தேர்தல் குறித்தே சர்ச்சை எழுந்து, விவகாரம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது.

கடந்த பல வருடங்களாகவே, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம், எதேச்சாதிகாரப் போக்கில் செயல்பட்டு வருகிறது. காரணம் டிக்கெட் விற்பனை, விளம்பரங்கள், எல்லாவற்றுக்கும் மேலாக, டீ.வி ஒளிபரப்பு உரிமை மூலமாகக் கொட்டும் பண மழை!

வீரர்களைத் தேர்வு செய்வதில் நடக்கும் ஊழல்கள் தனிக்கதை. அண்மையில் ஓர் இளம் கிரிக்கெட்டர், தம்மை அணியில் சேர்க்க, வாரியத்தில் பெரும் தொகை



சென்னை டெஸ்ட் சில துளிகள்...

• காஸ்பரோவிக்ஸ் பேட் செய்த போது, கும்ப்ளே வீசினார். அவரது பேட்டிலும் கால் பேடிலும் பட்டு வந்த பந்தை லக்ஷ்மண் பிடித்தார். நடுவர் அதை, ''அவுட் இல்லை'' எனக் கூறிய போதிலும் தாமாகவே வெளியேறினார் காஸ்பரோவிக்ஸ். இதற்கு முன்பாக காப்டன் கில் கிறிஸ் பெங்களூர் டெஸ்டில் இதேமாதிரிதான் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார்.

• ''30, 35 வருடங்களுக்கு முன் கும்ப்ளே விளையாடி இருந்தால் அணியிலேயே இடம் கிடைத்திருக்காது'' என காட்டமாகக் கூறி இருந்தார் முன்னாள் வீரர் எர்ரப்பள்ளி பிரசன்னா. அதை உடைப்பது



கசமுசா!



• சரத்பவார்



• டால்மியா

லஞ்சம் கேட்டதாகக் குற்றம் சாட்டியது நினைவிருக்கலாம். இது போன்ற பிரச்னைகள் இன்று நேற்றல்ல, ஐம்பது களிலேயே உண்டு. அப்போது மேற்கு இந்தியத் தீவுகளுட னான தொடரில், ஐந்து டெஸ்ட் பந்தயங்களுக்கு நாலு தடவை கேப்டன்களை மாற்றி யதை, போன தலைமுறை கிரிக்கெட் ரசிகர்கள் மறக்க மாட்டார்கள்.

சமீபத்திய ஆஸ்திரேலியாவுடனான கிரிக்கெட் தொடரில், ஒளிபரப்பு உரிமை விவகாரமும் கோர்ட்டுக்குப் போயிருப்பது விசித்திரமான விஷயம்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து, இரண்டு பேர் பொதுநல வழக்கு போட்டார்கள். சுப்ரீம் கோர்ட்டில் நடந்த அந்த வழக்கில், வாரியத்தின் சார்பில் ஆஜ ரான சட்ட நிபுணர்கள் "இப் படி ஒரு வழக்கையே பொது மக்கள் யாரும் போட முடி யாது. காரணம், கிரிக்கெட் கட் டுப்பாட்டு வாரியம் ஒரு பொது அமைப்பே இல்லை. 1860ம் வருடத்திய தமிழ்நாடு சொசை டிகள் பதிவுச் சட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனிப் பட்டவர்களின் அமைப்பு. எனவே இந்த பொதுநல வழக் கைத் தள்ளுபடி செய்ய வேண் டும்'' என்று வாதிட்டனர். ஆனால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவில்லை என்பது மட்டுமில்லை.

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தினால் தேர்ந்தெடுக் கப்படும் அணி, 'இந்திய கிரிக் கெட் அணி' இந்தியாவுக்காக ஆடுகிறது. ஆகவே வாரியம் தனது பொதுக் கடமையிலிருந்து நழுவ முடியாது' என்று 'நச்' தீர்ப்பு வழங்கியது நீதிமன்றம்.

இதிலிருந்தே வாரியத்தின் லட்சணத் தைத் தெரிந்து கொள்ளலாம்.

கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் இந்திய கிரிக்கெட் வாரியம், கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் ஸ்டேடியங் களுக்கு வாடகை தருகிறது. எவ் வளவு தெரியுமா? பெரோஸ் கோட்லா மைதானம் என் றால் ஆண்டுக்கு இருபத்தி ஏழாயிரம் ரூபாய்! பெங்களூர் சின்னசாமி ஸ்டே டியம் என்றால் வெறும் ஆயிரம் ரூபாய்.

ஆக பணமும், பாலிடிக்சும், இந்திய கிரிக்கெட் கட்டுப் பாட்டு வாரியத் தைப் பாடாய்ப் படுத்திக் கொண் டிருக்கின்றன.

சந்திப்பு: **மௌலி**

போல, ஏழு விக்கெட்டுகளைச் சாய்த்தார் அனில் கும்ப்ளே.

• அரங்கில் பாதி காலி!

• டீ ஷர்ட், கொடி விற்பனை ஸ்டேடியத்தில் குறைவுதான். ஆனால் முகத்தில் மூவர்ணம் பூசிக் கொள்வதில் ரசிகர்கள் பெரும் ஆர்வம் காட்டினர், குழந்தைகள் உட்பட!

• வார்னேவுடன் ஹர்பஜன் அடிக்கடி அளவளாவிக் கொண்டிருந்தார். என்னதான் பேசினார்களோ?

• ரசிகர்களின் அதிக ஆதரவு பெற்ற டாப் த்ரீ ஹர்பஜன், பதான், ஏழு விக்கெட்டு களை வீழ்த்திய கும்ப்ளே ஆகி யோர்தான்!

- சிக்ஸன்



ஒரே 'காரட்'டில் ஒரு வைர நெக்லஸ்!

பாய்ஸி. (BOISE)

இது ஓர் அமைதியான ஊர்.

3 லட்சத்திற்கும் குறைந்த ஜனத் தொகை. நிறைய உருளைக் கிழங்கு விளைகிற சுற்றுப்புறம். அருகில் ஒரு அணுமின் நிலையம்.

அமெரிக்காவில் உள்ள 'ஐடஹோ' (IDA HO) மாகாணத்தின் பிரதான நகரம்.

சிங்கப்பூரில் வேலை செய்து கொண்டிருந்த எனது மகன் கணேஷ், மாற்றலாகி அவர்களது கிளை ஒன்றில் வேலை செய்வதற்காக பாய்ஸி வந்து இருக்கிறான்.

இந்திய நேரப்படி இரவு 10 மணி. எனது கம்ப்யூட்டரின் மணி ஒலித்தது. Yahoo Messenger, Internet Chatting Roomக்கு கணேஷ் வந்திருக்கிறான்.

''அப்பா, Chatக்கு வறீங்களா?'' கணேஷ் கேட்டான்.

அதிர்ந்து போனேன்;

Internet-ல் உரையாட அழைக்கிறான்.

அவனுக்கு மதியம் 11:30 a.m. Yahoo Messengerல் Chat செய்தேன்.

கேட்டேன்:

''என்னடாது? வேலை நேரத்தில் Chat பண்ணுகிறாய்?''

''Allowed-ப்பா. எல்லாரும் பண்றாங்க...''

"Sorry da. I do not accept. ஏன் வேலை இல்லியா?''

"Free -ஆ இருந்தேன். அதனால்தான்...''

"O.K. Go to your superior. Tell him. "I am free. Give me work"என்றேன்.

''................''

''என்ன கணேஷ், பதிலே இல்லே?''

''சரிப்பா...''

''என்ன சரிப்பா? Always give more thar what you take."

''சொல்றேன்.''

"இப்ப சொல்லுமா''

''ம்''

''நான் CHATல் WAIT பண்ணறேன். Internetல் surf பண்ணிகிட்டிருப்பேன். பேசிட்டு வந்து பண்ணு.'' 20 நிமிட இடைவெளி.

''அப்பா.''

வந்திட்டான்.

''ம்...

சொல்லுப்பா...''

''Amazing-ப்பா.''

''சொல்லு.''

''சொன்னேன். Give me work. I am free அப்டினு...''

''ம்...''

''கொஞ்ச நேரம் நம்பாமல் என்னையே பார்த்தார். அப்புறம் அவருக்கு மேலே உள்ள Anderson கிட்ட போய் பேசினார். Anderson கூப்பிட்டு அனுப்பினார். "Why this?" என்றார். நான் சொன்னேன். "I believe in 'give more than what you take'. My apologies, If I am wrong", "No, No, No" என்றார். என்னுடைய Superior ஐக் கூப்பிட்டார். "He is different. Give him work... His supervisor's wook"என்று சொல்லிட்டுப் போயிட்டார்...''

"Really? Good."

''என்னுடைய supervisor என்னைப் பார்த்து "congrats" என்று சொல்லிட்டு கேட்டார்: "what did you say to him... that phrase..." நான் சொன்னேன். "give more than what you take." பெரிய புன்னகையுடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போயிட்டார்.''

"Congrats."

"Thanks-ப்பா, என்னாலேயே நம்ப முடியல.''

"Yes. In a work atmosphere, as an employee, always give more than what you take. Very soon everyone will respect you. O.K. This is our last chat during your office hours. Bye."



• சுகுமாரன்



• லலிதா

DK -ப்பா Bye."
இது நடந்து 3 மாதம்
ந்து. அவனது பாய்ஸி
சுக்கும் சிங்கப்பூர்
ஆபீசுக்கும் கடிதம்
ம் வாக்குவாதம்.
ணேஷ் உடைய
ignment முடிந்து
டது. சிங்கப்பூர்
ப்பி விடவும்.''
னிக்கவும். கணேஷ்
கேயே தொடரட்டும்.
னது பணி ரொம்
ம் உபயோகமாக
க்கிறது''- என்ற
ணியில்.



இந்த "Give more
n what you take" எல்லாவற்றிற்கும்
ாருந்தும். இதைத் தியாகராஜர் கல்லூரி
ஆங்கிலப் பேராசிரியரா இருந்த போதும்,
ாகல் பார்க் லலிதா ஜுவல்லரியில்
வாக இயக்குனராக இருந்த போதும்,
ப்போது ஸ்வர்ணாலயா ஜுவல்லரியை
ங்கட் நாராயணா ரோட்டில் பனகல் பார்க்
ருகிலேயே நடத்தும் போதும், தொழில்
ல்லாத குடும்ப, மற்ற சூழ்நிலைகளிலும்
actise பண்ணி, பல இலக்குகளை
டைந்திருக்கிறேன்.

காசை வாங்கிக் கொண்டு நகையைத்
ருகிறோம். இதில் "more than what you
ke" என்ன கொடுக்க முடியும் என்று
னைத்ததேயில்லை. வரவேற்பதும், புன்ன
கயும், உபசரிப்பும், personal உரை
டல்களும், தொடர்ந்த நட்பும், அவர்களது
டும்பப் பின்னணியில் சிறு சிறு உதவி
ளும், ஆலோசனைகளும்..... என்று அவர்கள்
லைக்கு வாங்காத எத்தனையோ விஷ
ங்களைத் தர முடியும். தந்து கொண்டி
க்கிறோம். The difference between **running**
business and **ruining** a business is the
there.

திறந்த மனதுடன் வாடிக்கையாளர்களை அணுகுவது பெரும் வெற்றியைத் தரும். திறந்த மனது, ஒரு திறந்த பர்சை விட, செல்வங்களை சேகரித்துக் கொள்ளும். விரிய விரிய வேலை செய்வது மனசும் தான்; பாரகூட் மட்டுமல்ல.

நிறைய நகை வாங்க வருபவர்களுக்கு ஒரு வரவேற்பு, சின்ன ரிப்பேர் வேலைக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு வேறு வரவேற்பு என்பதெல்லாம் வணிகக் குற்றங்கள். நான் பல முறை சொல்வது. "The customer brought in by the business is more imprtant than the business brought in by the customer." என்று

வாடிக்கையாளர்களது அபிப்பிராயங்களில் ஒரு சில தவறான யூகங்களும் ஒன்று. அதில் ஒன்று ''பல லட்சம் பெறுமான வைர நெக்லஸ்...'' என்ற தொடர். வைர நெக்லஸ் எல்லாருமே பல லட்சம் பெறுமானவை என்பது தவறு. 5% தான் அப்படி.

நாங்கள் யோசித்தோம். நடுத்தர வர்க்க மக்களுக்குப் பயன்படும் வகையில் வைர நெக்லஸை வடிவமைக்க வேண்டும். பூரிப்பும் குறையாமல், அழகான டிசைன்களில், பென்டன்ட் மாதிரியில்லாமல் முழு நெக்லஸாக **"ஒரே காரட்டில்" ரூ.42000க்கு** ஒரு டயமண்ட் நெக்லஸ் என்று தயாரித்தோம். வைரத்திற்கே உரிய 4 அம்சங்கள்: கலர், கட், க்ளாரிட்டி, காரட் என்பன. கலர்- F அல்லது G; கட்: ரவுண்ட் ப்ரில்லியன்ட்; க்ளாரிட்டி: லூப் க்ளீன் (பஜாரில் வழக்கமாகக் கிடைக்கும் VVS1ஐ விட உயர்ந்த, தோஷமே இல்லாத, certified வைரங்கள்); காரட்: 1 காரட் (ஒரே காரட்).

3 முறை தோஷங்களுக்காக Test பண்ணப்பட்ட இந்த வைர நெக்லஸ்கள் முழு விலைக்கே திரும்பப் பெற்றுக் கொள்ளும் உத்தரவாதத்துடன், **ஸ்வர்ணாலயா ஜுவல்லரியில்** கொலு இருக்கின்றன. நவராத்திரியை, தீபாவளியை முன்னிட்டு வாங்கிச் செல்லுங்கள் என வரவேற்கிறேன். ICICI credit கார்டில் வாங்கிக் கொண்டால் 5% தள்ளுபடியும் உண்டு.

சங்கீத தமிழ் வாத்தியார்!



அண்மையில் காலமான சங்கீத வித்வான் சேதலபதி பால சுப்பிர மணியம் பற்றி பாபநாசம் சிவனின் மகள் ருக்மிணி ரமணி :

"பனங்குடி அருகே உள்ள சேதலபதியில்தான் தமிழ் ஆசிரியராக இருந்தார் பாலசுப்ரமணியன். 1970ல் சென்னைக்கு வந்து சேர்ந்தவரை மணி பாகவதர்தான் அப்பாவிடம் கூட்டிக் கொண்டு வந்தார்.

சேதலபதியார் பாடியதைக் கேட்டு அப்பா மிகவும் மகிழ்ந்து போய், "எப்போதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, அப்போதெல்லாம் வந்து விடு!" என்றார்.

அவர் ராமகிருஷ்ணா மிஷன் ஆண்கள் பள்ளியில் இங்கே தமிழாசிரியராக இருந்தபோதுதான், அசோக் ரமணி அங்கே படித்தார். அவரைப் பாடச் சொல்லிப் பழக்கியவர் இவர்தான்.

அப்பாவிடம் சாகித்தியங்களைக் கிட்டே இருந்து கற்றுக் கொண்டார். உருகி உருகிப் பாடுவார். அவர் பாணியே தனி.

சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். மிமிக்ரி செய்து காண்பிப்பார். மதுரை மணி மாதிரி அப்படியே பாடிக்காட்டி அசத்துவார். கடுமையான உழைப்பாளி.

அவர் பிள்ளைகள் சிவராமன், கணபதிராமன் இரண்டு பேரும் மிருதங்கக் கலைஞர்கள். கணபதிராமன் பி.காம். முடித்ததும் வேலைக்குப் போவதா, மிருதங்க வாசிப்பையே எடுத்துக் கொள்ளுவதா என்ற பேச்சு எழுந்தபோது, முழு சுதந்தரம் கொடுத்தார் பிள்ளைகளுக்கு.

மஸ்கட் போய்விட்டு வந்தார். அடுத்து அமெரிக்கா போவதாக இருந்தது. அதற்குள் அவருடைய முடிவு வந்துவிட்டதே என்ற சோகம் எனக்கு உண்டு. போயிருந்தால் அங்கேயும் ஒரு ரசிகர் கூட்டத்தை உண்டாக்கி இருப்பார்."

- சாருகேசி

பாலிடிக்ஸ் (மினி) பஜார்


அந்த ரெண்டெழுத்து ஆளும் டி.வி.யின் காமெடி தொடருக்கான 'பஞ்ச்' லைன்கள், முன்பு சூப்பர் நடிகரால் ஆளும்கட்சியை எதிர்த்து வெளியிடப் பட்ட 'பஞ்ச்' லைன்களைப் போல இருக்கவே டென்ஷனான தலைமை சம்பந்தப்பட்டவர்களை வாட்டி எடுத்து விட்டதாம்.

கல்வித் துறையில் உச்சத்தில் இருக்கும் அதிகாரியிடம் அடிக்கடி கோரிக்கை மனு கொடுத்து தொந்தரவு செய்து வருகிறாராம் ஒரு மாணவர் அணி யின் துடிப்பான எம்.எல்.ஏ. எதிர்த் தரப்பு இதுபற்றி தலைமைக்கு புகார் தெரி விக்க உள்ளதாம்!

பாரம்பரிய தேசியக் கட்சியின் தமிழக தலைமை மாற்றம் விரைவில் நடக்குமாம். அறக்கட்டளை விவகாரங்களை மேலிடம் கையிலெடுத்துள்ளதுதான் காரணம் என்கிறார்கள்.

உடல்நலம் தேறிய தளபதி தமிழகம் முழுதும் புயல்வேகச் சுற்றுப் பயணம் செய்ய உள்ளாராம்.

- கலை



வாஸனுக்கு வந்திருக்கும் வாய்ப்பு!

மஹாராஷ்டிர தேர்தலில் காங்கிரஸ் - என்.ஸி.பி. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. அருணாச்சல் பிரதேசத்தில் நடந்தது போலவே, இங்கும் மத்திய கட்சித் தலைமையால் முதல்வர் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தத் தேர்தல்களிலும் சரி, சமீபத்திய நாடாளுமன்றத் தேர்தல்களிலும் சரி, காங்கிரஸின் வெற்றி அக்கட்சியே எதிர்பாராத அளவுக்கு அமைந்திருக்கிறது!

இதற்கு முக்கியமான காரணம், எதிர் அணியிடம் வாக்காளர்கள் கொண்டிருக்கும் அதிருப்திதான். இந்த அதிருப்தியைப் பிரதான பலமாகக் கொண்டு ஜெயித்திருக்கும் காங்கிரஸ், சட்டமன்றத் தலைமையை ஜனநாயக முறையில் தேர்வு செய்யாமல், தனது 'பாரம்பரிய'ப்படி நியமன முறையில் தேர்வு செய்திருப்பது மிகத் தவறான செயலாகும்.

சட்டமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் கட்சி பிளவுபடவும் உட்கட்சிப் பூசல் வளரவும்தான் இது வழி வகுக்கும்.

உட்கட்சி ஜனநாயகத்துக்கு என்று மதிப்பு தரப்படுகிறதோ, அன்றுதான் காங்கிரஸ் கட்சி உருப்படும்; தனது சொந்த




கல்கி



2004 அக்டோபர் 24
தாரண ஐப்பசி 8
மலர் : 63
இதழ் : 13

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




பலத்தில் ஆட்சியைப் பிடிக்கிற அளவுக்கு உயரும்.

மாநில அளவில் தலைவர்கள் உருவாவதும், இரண்டாம் நிலைத் தலைவர்கள் வளர்ச்சி அடைவதும், ஒரு கட்சியின் முன்னேற்றத்துக்கு அத்தியாவசியம். இந்தத் தலைவர்கள் தங்கள் அளவில் அதிகார மையங்களாகி, உயர்தலைமைக்குச் சவாலாகவும், அச்சுறுத்தலாகவும் மாறிவிடுவார்களோ என்கிற அனாவசிய சந்தேகம் அபத்தமானது. உட்கட்சித் தேர்தல் மூலமும் ஜனநாயக ரீதியிலும் கட்சித் தலைவர்களும் ஆட்சித் தலைவர்களும் தேர்வு செய்யப்படுகிறபோது, பரஸ்பர நம்பிக்கை பிறக்கும். கட்சி பலம் பெறுவதுடன், உயர் தலைமையும் பலமடையும். உழைப்புக்கும் சாதனைக்கும் தலைமைப் பண்புக்கும் கட்சியில் மதிப்பு உண்டு என்கிறபோது, புத்துணர்வும் ஆரோக்கியமான போட்டியும் பெருகும்.

இதற்கெல்லாம் ஒரே வீச்சில் தடைபோடும் 'நியமன அதிகாரத்தை' சோனியா மனமுவந்து கைவிடுவது அவசியம். அவருக்கு அறிவுரை கூறும் பரிவார உறுப்பினர்களும் இதனை உணர்வது அவசியம்.

நியமனத் தலைவர்களும் முழுத் திருப்தியுடன் செயல்படுவதாகச் சொல்லிவிட முடியாது. கட்சித் தலைமை தரப்பெற்றவர்கள், ஆட்சிப் பொறுப்பு தரப்படவில்லை என்று குமைவது சகஜமாய் இருக்கிறது. இந்த மனத்தாங்கலில் கட்சிப் பணி பெருமளவு பாதிக்கப்படுகிறது.

இத்தகைய பாதிப்பைத்தான் தமிழ்நாடு காங்கிரஸ், கடந்த பல ஆண்டுகளாகச் சந்தித்து, சிற்றெறும்பாகத் தேய்ந்து போயிருக்கிறது. திராவிடக் கட்சிகளின் முதுகில் சவாரி செய்யாமல், ஓர் இடத்தைக்கூட அக்கட்சி தமிழகத்தில் ஜெயிப்பது மிகக் கஷ்டம் என்கிற நிலைமை உருவாகியிருக்கிறது.



தமிழக மக்களோ, திராவிடக் கட்சிகளின் போக்கினால் அலுத்துச் சலித்துப் போய் நல்லதொரு மாற்றத்தை விழைகிறார்கள்.

மக்களுக்கும் தமிழகத்துக்கும் அந்த மாற்றத்தைக் கொடுக்க, தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாஸன்தான் முன்வர வேண்டும். ஒரு நியமனத் தலைவர் சந்திக்கக் கூடிய சவால்கள் அவருக்கு இருப்பது நேரடியாகத் தெரிகிறது. தமக்கு அமைச்சர் பதவி தரப்படாத அதிருப்தியும் மனத்தாங்கலும்கூட அவருக்கு நியாயமாய் இருக்கக் கூடும். ஆனால், அதிருப்தி, மனத் தாங்கலை அகற்றி வைத்துவிட்டு, கட்சிக்குள் ஆரோக்கியமான நெறிமுறைகளைப் புகுத்தி, கட்சியை முன்னேற்ற அவர் தீர்மானத்துடன் முற்பட்டால் யாரும் தடைபோட முடியாது.

காங்கிரஸை நம்பர் ஒன் கட்சியாக்க புதிய உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளார் வாசன். உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்தால் மட்டும் போதாது. தமிழகமெங்கும் பயணம் செய்வது, தொண்டர்களைச் சந்திப்பது, அவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவது, தமிழக காங்கிரஸுக்கென்று தனியே ஒரு செயல்திட்டமும், பல மட்டத்தினரின் கருத்தறிந்து கொள்கை ஆவணமும் உருவாக்குவது, தனித்தனி தீவுகளாக இயங்கும் காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பேசி அவர்களை ஒருங்கிணைப்பது... என ஏகப்பட்ட விதங்களில் சுறுசுறுப்பாகவும் புத்துணர்ச்சியோடும் ஜி.கே.வாசன் இயங்க வேண்டியிருக்கிறது.

தமிழக சட்டமன்றத் தேர்தல், திரும்பிப் பார்ப்பதற்குள் வந்துவிடும். மஹாராஷ்டிரா, அருணாசலப் பிரதேசம் போல் இங்கும் வாக்காளர்கள் காங்கிரஸ் கட்சியை நாடுவார்கள். நாடுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். வாஸன், வாய்ப்பைத் தவறவிட்டுவிடக் கூடாது. ●

தொப்புள்கொடி வங்கிகள்!

குழந்தை பிறந்தவுடன் என்ன செய்வார்கள்...?

தொப்புள் கொடியைத் துண்டிப்பார்கள்.

தொப்புள் கொடியை என்ன செய்வார்கள்...?

- 'இது என்ன கேள்வி!' என்று யாரும் கோபப்படக்கூடாது. ஏனெனில் தொப்புள் கொடியோடு தாயின் கர்ப்பத்திலிருந்து வெளியேறும் ரத்தத்தைச் சேமிக்கும் பரிசோதனைக்கூட வங்கிகள் தொடங்கப்பட்டுள்ளன... மேலை நாட்டில் மட்டுமல்ல... இந்தியாவிலும்தான்!

எதற்காக இந்தச் சேமிப்பு..?

டி.என்.ஏ. ஆராய்ச்சிக்கும் டி.என்.ஏ. அமைப்பின் கோளாறுகளைச் சரி செய்வதற்கும் தேவைப்படுகிற 'ஸ்டெம் செல்ஸ்' என்கிற மரபணு வகை, இந்தத் தொப்புள் கொடியில் மிஞ்சியுள்ள ரத்தத்தில் வளமாக இருக்கிறதாம். அதனால் அதை உறை நிலையில் சேமித்து வைத்து, ஆராய்ச்சிக்கும் சிகிச்சைக்கும் பயன்படுத்தலாமாம்.



இவ்வாறு சேமித்து வைக்க, சம்பந்தப்பட்ட தாயின் அனுமதியைப் பெறுகிற தார்மிகப் பொறுப்பு ஆராய்ச்சி உலகுக்கு இருக்கிறது.

அகற்றப்படும் தொப்புள் கொடியும் கழிவும், எப்படியிருந்தாலும் தூக்கியெறியப்படும்; அதற்குப் பதிலாக அது பயன்பட்டால் என்ன என்று வாதிட முடியாது. உலகின் மிகப் பிரத்யேக முதல் பந்தத்தின் உணர்வுரீதியான பிணைப்பை, சகலருக்குமாக கடைவிரிக்க எத்தனை பேர் தயாராயிருப்பார்கள் என்பது கேள்விக்குறி.

'தேவையானால், அந்தந்தக் குடும்பத்தினர் உபயோகத்துக்கு மட்டுமே பயன்படும்படி தனிமைப்படுத்தி சேமித்து வைக்கலாம். அந்தக் குழந்தைக்கோ அல்லது அதன் சகோதர / சகோதரிக்கோ பிற்காலத்தில் ஏதேனும் மரபணு சீர்திருத்தம் தேவைப்பட்டால், அந்த ஸ்டெம் செல்களைப் பயன்படுத்தி அதைச் செய்யலாம்' என்றெல்லாம் சொல்லி வருகிறார்கள் மருத்துவ விஞ்ஞானிகள்.

நம்மைப் போன்ற சராசரி மக்களின் கற்பனைக்கும் சிந்தனைக்கும் பிடிபடாத வீச்சுள்ள ஆராய்ச்சிதான்.

ஆனால் கூடவே அபாயங்கள் பற்றிய சந்தேகங்கள் எழுகின்றன.

தொப்புள் கொடியை, உரிய நேரத்துக்கு முன் அவசரப்பட்டுத் துண்டித்து விட்டால், குழந்தையின் உடலுக்குச் செல்ல வேண்டிய தாயின் ரத்தம் முழுமையாய்ச் செல்லாமல், ஆயுளுக்கும் அக்குழந்தை ரத்தச் சோகையால் அவதியுற வாய்ப்பு இருக்கிறது.

துண்டிப்பதைச் சேமிக்கிற நோக்கம் இருப்பின், அவசரமாகச் செயல்படும் அபாயமும் அதிகரிக்கிறது.

மருத்துவ உலகமோ, விஞ்ஞான உலகமோ சிந்தித்திராத வேறு கோணங்களும் உள்ளன.

டி.என்.ஏ. திருத்தங்கள் செய்யும் ஆற்றல், ஒரு மனிதனின் உடற்கூறை மட்டுமின்றி குணம், சுபாவம் போன்றவற்றையும் திருத்தியமைக்க வழி செய்யும். அவ்வாறு திருத்துவதால் மேம்படுத்துவதற்குப் பதில், ஓர் உயிரைச் சீர்குலைப்பதும் சாத்தியமாகும். விஞ்ஞான ஆராய்ச்சி எத்தனை அபாயகரமான ஆற்றலை மனிதனின் கரங்களில் வைத்திருக்கிறது! இந்த ஆற்றலைப் பெறுபவரின் மரபணுக்கள் மட்டும் விபரீத வில்லத்தனத்தைத் தூண்டும் மரபணுக்களாக இருந்துவிட்டால்.... மனித குலத்துக்கு விமோசனம் ஏது?


பெட்டி தூக்காமலே
பயணம் செய்ய...
• இலங்கைக்கு வாருங்கள் - சாருகேசி
• அள்ளிப்பருக ஒரு கொல்லி - ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு
தட்டி விட்டுச் சிந்தனையை உசுப்ப...
• பெண்ணுக்கொரு நீதி - மாண்பமை நீதிபதி பிரபா ஸ்ரீ தேவன்
• தேவை இன்னொரு பசுமைப்புரட்சி - எம்.எஸ். சுவாமிநாதன்
• மரண தண்டனை நியாயமா? - பி.எச். பாண்டியன்
• கம்யூனிஸம் நிலைப்பது ஏன்? - சங்கரய்யா
கல்கி மட்டுமே தரவல்ல தீபாவளி விருந்து!
கலையுணர்வு, இலக்கியச் செறிவு,
சமுதாயப் பார்வை அத்தனையும்
இணையும் அற்புதப் படைப்பு!
• படம்: யோகா
கல்கி
தீபாவளி மலர் -2004
விலை ரூ.80/- கூரியரில் பெற ரூ.30/- சேர்த்து அனுப்பவும். உள்ளூர் ஏஜெண்டிடமும் பதிவு செய்து கொள்ளலாம்
மானேஜர், கல்கி, ஈக்காடுதாங்கல், சென்னை-600 032

அடலசண்ட் அட்டாக்!

''என் மகன் சரியாக சாப்பிடவே மாட்டேங்கிறான்!''

''என் மகன், எதற்கெடுத்தாலும் எரிஞ்சு விழுறான்!' - என்றெல்லாம் புலம்பும், டீன்ஏஜ் பிள்ளைகளின் பெற்றோரா நீங்கள்?

சென்னை காஞ்சி காமகோடி சைல்ட் டிரஸ்ட் மருத்துவமனையில் இளைஞர் நல சிகிச்சைப் பிரிவு உங்கள் பிரச்னைக்கு தீர்வு சொல்ல வருகிறது. இந்தப் பிரிவின் தலைவர் டாக்டர் ஆண்டாள்.

எதற்காக இந்தத் தனிப்பிரிவு? டாக்டர் ஆண்டாள் விளக்கினார்.

''இந்திய மருத்துவக்குழு இளைஞர்களுக்கென்று இருக்கும் பிரச்னைகள் குறித்த தனி மருத்துவப்பிரிவு தேவை' என்று மூன்று வருடங்களுக்கு முன்பே அறிவித்தது. சுமார் பன்னிரண்டிலிருந்து பதினெட்டு வயதுவரை இருக்கக்கூடிய ''அடசலண்ட்'' எனப்படும் கட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு.

அந்த வயதில்தான் உடலில் ஹார்மோன் மாற்றங்கள் நிகழ்கின்றன. உடலிலும் மாறுதல்கள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்குகின்றன. தொடுதல் என்பதில் இன்பம் இருப்பது தெரிகிறது. கட்டுப்பாடுகளை முழுமையாக வெறுத்து 'தனித்துவம் தேவை' என்று நினைக்கிற வயது. இந்தக் காலகட்டத்தில் அவர்களை சரியான திசையில் செலுத்த வேண்டியது அவசியம்.

இப்போதைய காலகட்டத்தில் இளைஞர்களின் உடல் மற்றும் மனப் பிரச்னைகள் மிகவும் அதிகம். இப்போதெல்லாம் படிப்பில் கடும் போட்டி நிலவுகிறது. வேலை போன்றவற்றையெல்லாம் மிக இளம் வயதிலேயே தீர்மானித்துவிட வேண்டிய கட்டாயம்.

பெற்றோர் இருவருமே வேலைக்குப் போய்விட்டு, இருவருமே நேரம் கழித்து வீட்டுக்கு வருகிறார்கள். எனவே இளைஞர்களைப் புரிந்து கொண்டு வழி நடத்துவது அரிதாகிவிடுகிறது'' என்றவர் ஒரு அதிர்ச்சியான தகவலைச் சொன்னார்.

''பதினான்கு வயது இளைஞன் ஒருவன் மூன்றாவது முறையாக தற்கொலைக்கு முயன்றபோது எங்



களிடம் அழைத்து வரப்பட்டான். அவனிடம் சிறிது நேரம் மனம் விட்டுப் பேசியபோது பிரச்னை பிடிபட்டது. "பெற்றோர் அவனிடம் அதிகமாக எதிர்பார்க்கின்றனர். சக மாணவர்களுடன் அவனை ஒப்பிட்டுப் பேசுகின்றனர். இதுதான் அவன் தற்கொலை முயற்சிக்கு காரணம்" என்றார்.



அதேபோல பள்ளிச் சிறுமி ஒருத்தி என்னிடம் அழைத்து வரப்பட்டாள். அவள், "முன்பு எல்லாம் பள்ளிக்கூடத்துக்கு மகிழ்ச்சியாகப் போவேன். இப்போது பள்ளிக்குப் போவதற்கே பிடிக்கவில்லை. வாழ்க்கையே வெறுப்பாக இருக்கிறது" என்று சொல்லி என்னை அதிர வைத்தாள். அவளுக்கும் உரிய சிகிச்சை கொடுத்து அனுப்பி வைத்தோம் என்றார் டாக்டர் ஆண்டாள்.

இவர், டீனேஜ் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு சில முக்கிய டிப்ஸ்களும் கொடுத்தார்:

பெற்றோர் இருவரும் வேலைக்குப் போனாலும் டீன் ஏஜில் உள்ள பிள்ளைகளோடு செலவிட நேரம் ஒதுக்க வேண்டும்.

பெற்றோர் சொல்வது ஒன்றும், செய்வது ஒன்றுமாக இருக்கக் கூடாது. அவர்கள் நேர்மை இல்லாத வாழ்க்கை வாழும்போது, இளைஞர்கள் மனத்தில் குழப்பம் ஏற்படுகிறது. "எனக்கு மட்டும் உபதேசமா?" என்ற குமுறலில் அவர்கள் வழி தவறிப் போக வாய்ப்புண்டு.

மிகவும் அதிகமான கட்டுப்பாடுகள் வேண்டாம். ஏனென்றால் சுய சிந்தனையுள்ள தனித்துவம் கொண்ட ஒரு நபராக மலரும் பருவம் அது. ஈகோ நிறைய இருக்கும். எனவே சரியான நல்ல வழியைக் காட்டுங்கள். மற்றபடி கடுமையான வற்புறுத்தல் வேண்டாம்.

"உங்கள் குழந்தையின் செயல்திறன் (பொடென்ஷியல்) என்ன என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ஆரம்பத்திலிருந்தே படிப்பில் சிறிதும் ஆர்வமில்லையென்றால், 'படிபடி' என்று அழுத்தம் கொடுத்துக்கொண்டே இருந்தால் அவன் மனநோயாளியாக வாய்ப்புண்டு. மாறாக அவனுக்கு வேறு எந்தத் துறைகளில் ஆர்வம் இருக்கிறது என்பதைக் கண்டு ஊக்கம் கொடுங்கள்.

அவர்கள் வருங்காலத்தைப் பற்றிய பொறுப்பை உணர வைப்பது மட்டுமல்ல, வருங்காலத்தைப் பற்றிய பயங்களையும் போக்க வேண்டியது உங்கள் பொறுப்புதான்.

போதை மருந்து ஆபத்து, மதுவினால் ஏற்படும் விளைவுகள் இவற்றையெல்லாம் முன்னதாகவே சொல்லி வைக்கலாம். செக்ஸ் கல்வியைப் பள்ளியில் அறிமுகப்படுத்துவது நல்லது என்பது ஒருபுறமிருக்க, பெற்றோரே இந்தக் காரியத்தை செய்யலாம்.

டீன்ஏஜ் கட்டத்தில் நண்பர்களின் பங்கு முக்கியம். சரியான நட்புவட்டம் அமைகிறதா என்பதில் கவனம் செலுத்துங்கள். தொடக்கத்தில் அசட்டையாக இருந்தால், பின்பு சரிப்படுத்துவது கஷ்டம்.

- ஜி.எஸ்.எஸ்

சேரனின் நாயகி!



வானத்திலிருந்து ஏதோ ஒரு தேவதை வந்து 'உனக்கென்ன வரம் வேண்டும்?' எனக் கேட்டு ஆசீர்வதித்து ஒவ்வொன்றாய் வழங்கியதுபோல் அத்தனை சந்தோஷமாக இருக்கிறார் சுஜாதா. படித்தது: பிபிஏ! கனவு: போலீஸாகி விஜயசாந்தி போல், சல்டீசிங் தடியர்களின் இடுப்பெலும்பை நொறுக்க வேண்டும் என்பது! அந்தக் கனவுடன் ராஜரத்தினம் ஸ்டேடியத்திற்கு போலீஸ் செலக்ஷனுக்குச் சென்றவர், பயிற்சியின் போது மயங்கி விழ... சோடா மட்டுமல்லாமல் சினிமா வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. யெஸ்! அம்மணி இப்போது ஆட்டோகிராப் தந்த சேரனின் அடுத்த படத்தின் கதாநாயகி.

'இதென்ன கலாட்டா...?' என்றால் வெட்கம் படர புன்னகைக்கிறார்.

''நம்பவே முடியலைங்க! திடீர்னு போன் தொடர்ந்து அடிச்சிக்கிட்டே இருக்கு. டெய்லி இருபது, முப்பது லெட்டர்ஸ் வருது. ரொம்பப் பழகினவங்க கூட பிரமிப்பா பார்க்குறாங்க. தெரியாதவங்க ஓடிவந்து நீங்க தானான்னு விசாரிக்கிறாங்க. வானவில்லைக் கரைச்சி ஊற்றின மாதிரி வாழ்க்கையோட கலரே மாறிப் போச்சிங்க. தனியா இரண்டு இறக்கைகள் முளைச்ச மாதிரி இருக்குங்க. அப்படியே சந்தோஷத்திலே மிதக்குறேன். ஆனா, அதேசமயம் நெஞ்சுக்குள்ளே 'திக்...திக்' கேட்டுக்கிட்டே இருக்கு. என் வேலையை சரியா பண்ணணுமேன்னு ஒரு தவிப்பு இருந்துக்கிட்டே இருக்கு.

எங்க ரிலேஷன்லே சுத்தி, சுத்தி கணக்குப் போட்டிங்கன்னா ஏகப்பட்ட காக்கிச் சட்டைடஸ்! அப்படியே கம்பீரமா யூனிஃபார்ம்

• சுஜாதா

போட்டுக்கிட்டு அவங்க வந்து நிக்கிறப்பவே, என் கண்ணு முன்னாலே பட்டாம்பூச்சி பறக்கத் தொடங்கிடும். அத்தனை காதல் காக்கிச்சட்டை மேலே! போலீஸாகணும்ங்கிறதுக்காகவே ஸ்போர்ட்ஸ், கராத்



தேன்னு புகுந்து புறப்பட்டுக்கிட்டிருந்தேன். கிளாஸ் ரூம்லே உட்கார்ந்ததைவிட, கிரவுண்டிலே விளையாடியதுதான் அதிகம்.

அன்னைக்கு போலீஸ் செலக்ஷன்லே மயங்கி விழுந்ததுலே நான் ரொம்பவே அப்செட்! வீட்டுக்கு வந்தா மனசே சரியில்லை. அப்போதான் அந்த போன் வந்தது.

'சேரன் சார் ஆபீஸ்லே இருந்து பேசுறோம். ஒரு நிமிஷம்... சார் பேசணும்ங்கிறார்'ன்னாங்க.என்ன, ஏதுன்னு யோசிக்கிறதுக்குள்ளே சேரன் சாரே லைன்லே வந்து... 'என்னுடைய அடுத்தப்பட ஹீரோயின் நீங்கதான்... சம்மதமா?'ன்னு கேட்டார். எனக்கு ஒண்ணுமே புரியலை.

நான் சாதாரண மிடில்கிளாஸ் பொண்ணு! அப்பா பாலாஜி ரயில்வேயிலே வேலை பார்க்கிறார். அம்மா புஷ்பலதா ஹவுஸ் ஒய்ப். தங்கை ரேகா பி.காம் படிக்கிறா. ரயில்வே குவார்ட்டர்ஸிலே வீடு. ரெண்டு ரோஜாச் செடிகளை தொட்டியிலே வைச்சி வளர்த்துக்கிட்டு குறைவான ஆசைகளோட வாழ்ற ஆட்கள் நாங்க! சினிமாவுக்குன்னு சில நல்லது, கெட்டது இருக்கு. இங்கே சரியோ, தப்போ நம்ம ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பளிச் பப்ளிசிட்டி கிடைச்சிடும். இது டைம் டு டைம் ஜாப் கிடையாது. ஃபேமிலி, பிரெண்ட்ஸ்னு நிறைய மிஸ் பண்ண வேண்டியிருக்கும். ஆனா... இப்போ சினிமாவை பற்றிய அபிப்ராயங்கள் மாறியிருக்கு. இதுவும் ஒரு வேலை அவ்வளவுதானேன்னு ஏத்துக்கிற மனநிலை வந்திருக்கு. இதையெல்லாம் யோசிச்சிதான் நான் 'யெஸ்' சொன்னேன்.

இது மட்டுமல்லாமல் நெருக்கமான ப்ரெண்ட்ஸ், வெல்விஷர்ஸ் எல்லார்கிட்டேயும் கலந்து பேசினோம்.

'சினிமாவா...சே, சே'ன்னு சொன்னவங்களும் இருந்தாங்க. 'அட... இதிலே என்ன தப்பு'ன்னு கேட்டவங்களும் இருந்தாங்க. காலேஜ் படிக்கிறப்போ ஒரு மாடலிங் வாய்ப்பு வந்தது. அப்ப கூடவே கூடாதுன்னு சொன்ன எங்க பாட்டிதான், சேரன் படம்னா நீ கண்டிப்பா நடிக்கலாம்னு பச்சைக் கொடி காட்டினாங்க" என்று மலர சிரிக்கிற சுஜாதாவுக்குப் பிடித்த நடிகர்? ரஜினிகாந்த்! நடிகை?

"சிநேகாதான் என் ஃபேவரைட்! அவங்களோட அந்த ஜில் சிரிப்பும், அந்த ஹோம்லியான அப்பியரன்சும் அப்படியே மனசை அள்ளிக்கும். சிநேகா மாதிரி எல்லாருக்கும் பிடிக்கிற நடிகையாக வெல்பர்ஃபார்மிங் ஆர்டிஸ்டாக நான் வரணும். இதுதான் என் லட்சியம்" என்கிறார்.

"எனக்கு ஏகப்பட்ட பிரெண்ட்ஸ். இப்போவே 'மனசுக்குள்ளே ஆசை வந்திச்சோ...!'ன்னு கிண்டல் பண்றாங்க. எனக்கு ரொம்ப என்கரேஜிங்

‘குறுந்’தொகை



• ஜெயமோகன்



• பாரதி பாலன்



• மனுஷ்யபுத்திரன்

தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து முடித்திருக்கும் எழுத்தாளர் பாலன், ஜாதிப் பிரச்னைகளை முன்வைத்து ஒரு நாவலை எழுதி வருகிறார்.

மனுஷ்ய புத்திரன் வரலாறு தொடர்பான புத்தகங்களை விரும்பிப் படிக்கிறார். கவிதைகள் மட்டுமின்றி சில கட்டுரைத் தொகுப்புகளையும் இவர் முன்பே வெளியிட்டிருக்கிறார்.

‘இயல் விருது வெங்கட் சாமிநாதனுக்குக் கொடுக்கப்பட்டது சரிதான்’ என்றும் ‘விமர்சனத் துறையில் சாமிநாதனின் பங்களிப்பு கணிசமானது, அதனை மறுக்க இயலாது’ என்றும் குறிப்பிட்டுள்ளார் ஜெயமோகன்.

“இது போல் எழுதக் கூடாது என்று சொல்ல யாருக்கும் உரிமையில்லை எழுத்தின் தரம்தான் முக்கியமே தவிர கருப்பொருள் அல்ல” என்கிறார் தமிழச்சி. இவர் ஒரு ஆங்கிலப் பேராசிரியர்.

- மருதன்

என் பிரெண்ட்ஸ். சினிமான்னா இவங்களை எல்லாம் ஒரளவாவது மிஸ் பண்ண வேண்டியிருக்கும். அதான் எனக்கிருக்கிற சின்ன வருத்தம். சேரன் சாரைத் தொடர்ந்து, இன்னும் இரண்டு கம்பெனிகள்லே கேட்டாங்க. முதல்லே சேரன் சார் படம்தான்னு அழுத்தமாக சொல்லிட்டோம்.

இப்போ சேரன் சார் லொகேஷன் போயிருக்கார். கதை, என்னோட கேரக்டர் எதுவும் தெரியாது. கேட்டா சொல்வாரா? சேரன், ரொம்பக் கோபக்கார மனுஷராமே?'' என்று 'சேரன் நமஹ' சொல்கின்ற சுஜாதா 'ஆட்டோகிராப்' படத்தை இரண்டு முறை பார்த்திருக்கிறாராம்.

நிறைவாக, ஒரு நடிகையின் பேட்டியில் இந்தக் கேள்விகளைக் கேட்கா விட்டால் எந்த நிருபரின் தலையும் வெடித்துவிடும் என்பதால்... ''கவர்ச்சி, ஆபாசம் பற்றி என்ன நினைக்கிறீங்க?'' என்றோம். (ஹி...ஹி)

''கதைக்குத் தேவைப்பட்டால் கவர்ச்சி காட்டுவேன்னு சொல்ல மாட்டேன். 'அழகி', 'ஆட்டோகிராப்'லே எல்லாம் என்ன கவர்ச்சி இருந்தது? அதனாலே கவர்ச்சி தேவைப்படாத கதைகளாக, பார்த்துதான் நடிப்பேன்...'' என்கிறார் சுஜாதா.

''நடிக்க விரும்புகிற கேரக்டர்?''

''வேறென்ன... போலீஸாக நடிக்கணும்...'' என்கிறார் அசால்டாக!

அடி ஆத்தி!

- எஸ். பாலமுருகன்





"வாசனை எடுத்திருச்சி... ரொம்ப நேரம் தாங்காது. சட்டு புட்டுனு ஒரு முடிவுக்கு வாங்கப்பா..."

- மாயாண்டி, வெற்றிலைக் குதப் பலை, தெரு ஓரத்து தென்னம் பிள்ளை யின் தலையில் சுவாதீனமாகத் துப்பி விட்டு, சொன்னார்.

"இன்னும் அரை மணி நேரம் பார்ப்பம்..."

- திண்ணையின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டு இழுத்தான் பெருமாள். அதில் யாருக்கும் இசைவு இல்லை என்பது, கூட்டத் தின் சலசலப்பிலும் முணுமுணுப் பிலும் தெரிந்தது.

"கிழவிக்கு யார் கொள்ளி போறது?"

- கூட்டத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது.

கூட்டத்தில் ஒருவனாய் நின்று, இடையிடையே ஓடியாடி, நாலு பேர் கண்ணில் படும்படியாக வளைய வந்து கொண்டிருந்த சுப்பிரமணிக்கு, மனசு திக், திக்கென்று அடித்துக் கொண்டது. அவன் மனசுக்குள் ஒரு தவிப்பும், எதிர்பார்ப்புமிருந்தது.

'கிழவிக்கு நான் கொள்ளி வைக்கிறேன்யா. கொள்ளி வச்சவனுக்கு வீடு சொந்த மாகும். கிழவி வீட்டை எனக்குக் கொடுத்திருங்க. வயசுக்கு வந்த ரெண்டு பொம்பளைப் பிள்ளை களை வச்சுகிட்டு, சொந்த வீடு இல்லாம தவிச்சுகிட்டிருக்கேன்' என்று வாய்விட்டு ஊராரை கும்பிட்டுக் கேட்க வேணும் போல் இருந்தது அவனுக்கு. ஆனால் சுயகௌரவம் தடையாக இருந்தது. ஆசைக்கும் தேவைக்கும் இடையில் அவன் அல்லல்படுவதை பலரும் கவனிக்கத்தான் செய்தனர்.

"சுப்பிரமணி... இங்க வாடா..." என்று விளித்தார் வயதில் மூத்தவரான கந்தப்பன்....

வந்தான்.

"கிழவிக்கு நீ கொள்ளி வை" என்றார்.

பருதலம் சிதுமாறன்



சுப்ரமணிக்கு கண்களில் நீர் முட்டியது. மனசுக்குள் பரவசமாகவும் இருந்தது. மீறிக் கொண்டு வந்த சந்தோஷச் சிரிப்பை அடக்க சிரமமாக இருந்தது. தோளில் கிடந்த துண்டை, இடுப்பில் கட்டிக் கொண்டு, கிழவியிடம் ஓடினான்.

"பேச்சுக்குப் பேச்சு... நீதாண்டா என் பிள்ளைனு சொல்லுவியே ஆத்தா... அது நிசமாவே போச்சே தாயி..." என்று அவன் ஒப்பாரி வைக்க, நெகிழ்ந்து போன பெண்களும் உடன் சேர்ந்து ராகம் போட்டனர்.

சுப்பிரமணி, பம்பரமாய்ச் சுழன்றான். மொத்தப் பொறுப்பும் அவன் தோளில் விழுந்துவிட்டது போல் பாவனை பண்ணிக் கொண்டான்.

"ஆகட்டும், சீக்கிரம்.." என்று நிமிஷத்திற்கொருமுறை குரல் கொடுத்தான். பாடை தயாராயிற்று. பறை முழங்கியது. பிணம் குளித்து அலங்காரம் பண்ணிக் கொண்டது. சுப்பிரமணியின் மகன்கள், இப்போதே வீட்டுக்குள் நுழைந்து வேலைகளை எடுத்துப் போட்டுச் செய்தனர். தீச்சட்டியில் நெருப்பு மூட்டம் போடப்பட்டது. சுப்ரமணி நடுத்தெருவில் உட்கார்ந்து தலைக்கு தண்ணீர் கொட்டிக் கொண்டு ஈரம் சொட்டச் சொட்ட நின்றான். பல பேரின் பார்வைகள் தன் பேரில் நிலைகுத்தியிருப்பதை அவனால் உணர முடிந்தது.

நினைப்பதெல்லாம்...

எவன் எப்படி நினைத்தால் என்ன?

ஒரு மகன் ஸ்தானத்திலிருந்து கடமையைச் செய்கிறேன். பிரதியாய், கிழவியின்

கூரைவீடு எனக்கு பாத்யதையாகும். யாரும் பொறாமைப் படுகிற அளவுக்கு அது மச்சு வீடுமில்லை. ஓலைக்கூரை வீடுதான்.

சுப்ரமணியை யோசனைகள் பின்னிக் கொண்டன. ஒரு காலத்தில் அவனுக்கும் பஜனை கோயில் தெருவில் சொந்தமாக கல்வீடு இருந்தது.

சம்சாரத்துக்கு உடல்நலிவு ஏற்பட்ட போது சிகிச்சைக்காக வீட்டை அடமானம் வைத்தான்.

மருத்துவச் செலவு அதிகமாகவே ஒரு கட்டத்தில் வீட்டை விற்க வேண்டியதாயிற்று. ஊர் சொன்னது,

"எத்தனை ஆயிரம் செலவு பண்ணாலும், உம் பொஞ்சாதி பிழைக்கறாப்ல தெரியல. உனக்கோ வேற சொத்து சொகமில்லே. பிறந்த ரெண்டும் பொட்டப் புள்ளைகளா போச்சு. இந்த வீட்டையும் வித்துட்டு நடுத்தெருவுல நிப்பியோ..." என்று.

அவனது மனைவி தாயம்மாவும், "வீட்டை விக்காதய்யா..." என்றுதான் சொன்னாள்.

"வீடு போய், நீ இருந்தா போதும். இந்த வீடில்லேன்னா, நாலு வீடு கட்டுவேன். உனக்கு ஏதாவது ஆயிப்போச்சுன்னா..." என்றான்.

அவனது தீர்மானத்தால், மனைவியைக் காப்பாற்ற முடியவில்லை.

வீடு மட்டும் கைவிட்டுப் போனது.

அதன்பிறகு வாடகை வீடு...

ஏழெட்டு இடங்கள்... நாடோடி மாதிரி அலுப்பும் சலிப்பும் ஏற்படும்போதெல்லாம், அவன்... இதோ பிரேதமாய் கிடக்கும் அம்மணியம்மாள் வீட்டுத் திண்ணையில்தான் வந்து உட்கார்ந்து ஆசுவாசம் கொள்வான். ஒற்றைக்கு ஒரு பிள்ளையாய் பெற்று, அது ஊதாரியாய்ப் போய்விட்ட துக்கத்தை, கிழவி அவனிடம்தான் கொட்டிக் கொள்வாள்.

அவளது மகன் மணி, சிறு வயதிலேயே சகவாச தோஷத்தால், சீர் கெட்டிருந்தான். கையில் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடினால், திரும்ப எப்போ, எப்படி வருவான் என்பது கடவுளுக்குதான் வெளிச்சம். "காலா காலத்துல ஒரு கல்யாணம் காட்சி கட்டிகிட்டு, நாலுபேரப் போல பிழைப்பானா..." என்று மருகும் கிழவி,

"என் உசுறு போச்சுன்னா, கொள்ளி வைக்கவாவது அவன் பக்கத்தில இருப்பானாடா?' என்னும்போது...

"அவன் இல்லேனா என்னா... நான் போடறேன் போயேன்" என்பான் சுப்பிரமணி. அப்படி சொல்லும்போது, சுப்ரமணிக்கு மனசுக்குள் எந்த நினைப்பும் இருந்ததில்லை.

வெங்கடேசன், "கெழவிக்குக் கொள்ளி போட்டு வீட்டை எடுத்துக்கலாம்னு பாக்குறியோ..." என்று கேட்டபோதுதான், "அப்படியொன்று இருக்கோ" என்ற யோசனை விழுந்து, கிளைகள் விட்டுப் பரவியது.

சுப்ரமணிக்கு, நெஞ்சுக்குள் பலவிதமான உணர்ச்சிகள் பின்னிப் பிணைந்தன. உள்ளுக்குள், சொந்த மகன் வந்து தொலைத்துவிடக் கூடாதே என்றிருந்தது. அப்படி நினைப்பதற்காக வெட்கப்பட்டான் அவன். எத்தனை கேவலமான சிந்தனை என்று நினைத்தாலும், தனக்கு வேறு மார்க்கம் இல்லை என்பதையும் உணர்ந்தான். நான் மட்டுமென்றால், எந்த ஓட்டுத் திண்ணையிலும் ஒதுங்கி காலம் கழிக்கலாம். ரெண்டு பொண்ணுகளாச்சே. அதுகளை மானம், மருவாதையாக வைக்கணுமே... இதுபோல ஒரு வாய்ப்பு,


---

"கோலங்கள் சீரியல் டைரக்டர் திருமுருகன் என்னமா டைரக்ட் பண்றாரு."

"திருமுருகன் இல்ல... திருச்செல்வம்...!"

"இதை மட்டும் கரெக்டா சொல்லு, சாம்பார்ல உப்பு போடுறதை மட்டும் மறந்திடு...!"

- பாளை பசும்பொன்



வாழ்க்கையில் திரும்ப வருமா? ஊரே சேர்ந்து உத்தரவு கொடுத்திருக்கிறது. இரக்கப்பட்டு, பரிதாபப்பட்டு, அனுதாபப்பட்டு, எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

காரியம் முடிந்தபிறகு, யார் வந்தாலும் கவலை இல்லை. ஊர் பார்த்துக் கொள்ளும். கொள்ளி வைத்துவிட்டால் போதும்..

பொழுது இறங்க, இறங்க... சவ ஊர்வலம் துவங்கியது. ஆரவாரமான அழுகுரலும், ஓசைகளும் நீண்டன. சுப்பிரமணி தீச்சட்டி ஏந்திக் கொண்டு முன்னால் நடந்தான். அவனுக்கு ஒரு பக்கம் உண்மையான துக்கமும் உருக்கமும் குடி கொண்டிருந்தது. இறந்துபோன கிழவிக்காக அவன் கண்கலங்கவும் செய்தான்.

'என்னை மன்னிச்சுடு கிழவி. உன் மகன் ஆம்பளப் புள்ள. எப்படியும் பிழைச்சுக்கிடுவான். நான் ரெண்டு பொண்ணுகள வச்சுகிட்டு லோல்படறேன். என்னையும் உன் பிள்ளைனு நினை...' என்று வேண்டிக் கொண்டு நடக்கையில்தான் சுப்ரமணி அந்த மாற்றத்தை உணர்ந்தான்.

சவ ஊர்வலம் தேக்கமாகியிருந்தது. "என்னாச்சு" என்று நிமிர்ந்து பார்த்தவன் அதிர்ந்து போனான்.

எதிரில் கிழவியின் மகன் நின்றிருந்தான். அலைந்து திரிந்துவிட்டு, நினைவு வந்தவனாய் எங்கிருந்தோ வந்து சேர்ந்திருந்தான். தீச்சட்டியும் கையுமாய் நின்ற சுப்பிரமணியை அன்னியமாய் பார்த்துக் கொண்டு நின்றான்.

சுப்பிரமணிக்கு கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது. தலை கிறுகிறுத்தது. தனது கனவு தரைமட்டமான ஏமாற்றத்தைத் தாங்க முடியவில்லை.

நெருப்புச்சட்டியை கீழே வைத்துவிட்டு, வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு மணிவண்ணன் மீது ஆத்திரமாய்ப் பாய்ந்தான்.

"பெத்தவ செத்துக் கெடக்கா... ஊர் மேய்ஞ்சிட்டு வர்ரியாடா நாயே... நீயெல்லாம் ஒரு மனுஷனா... ஒரு மகனாடா..." என்று கேட்டுக் கொண்டே, ஆத்திரம் தீரும் மட்டும் அடித்து நொறுக்கினான். அடித்துவிட்டு, தள்ளிப் போய் அழுதான்.

பிறகு திரும்பி வந்தான்.



''ஆன்ட்டி...! அம்மா கொஞ்சம் அரிவாள் வாங்கிட்டு வரச் சொன்னாங்க!''

''இதோ தர்றேம்மா...! அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டையாம்மா...?''

- சீர்காழி வி.ரேவதி

மணிவண்ணன் உதடுகிழிந்து ரத்தம் சொட்ட, எதிர்வினை காட்டாமல் வெறித்து நின்றான்.

"என்னடா பாக்குற... யாராவது ஒரு குடம் தண்ணி கொண்டாந்து இவன் தலைல ஊத்துங்க... போடா, போய் நெருப்புச்சட்டி எடு... நீ பண்ண பாக்கியம், இப்பவாவது வந்து சேர்ந்தியே! புள்ளயா லட்சணமா உன் கடமையைச் செய்" என்றான்.

தானே இரண்டு குடம் தண்ணீரை அவன் தலையில் கொட்டி தீச்சட்டியைக் கையில் திணித்தான்.

யாரோ சொன்னார்கள்... ''அட பாவமே..சுப்பிரமணி வூடு கிடைக்கும்னு ஆசை ஆசையாய் இருந்தானேய்யா! அவ்வளுதானா அவன் அதிர்ஷ்டம்'' என்று.

சுப்பிரமணி ஓங்காரமாகக் கத்தினான்.

"யார் வீட்டுச் சொத்துக்கும் நான் பிள்ளையாய் பிறக்கலயோவ்! வேலையைப் பாருங்க...." என்று.

ஊர்வலம் தொடர்ந்தது.

சுப்பிரமணி, சேர்ந்து நடந்தாலும், அவன் கால்கள் தடுமாறச் செய்தன.

தெரு முனை திரும்பும்போது, யதேச்சையாக திரும்பிப் பார்த்தான்.

கிழவியின் வீட்டு வாசலில் அவனது இரண்டு பெண்களும் அனாதரவாக நின்று கொண்டிருந்தனர். சுப்பிரமணியின் பார்வையை மங்கச் செய்தது கண்ணீர். ●

அதிரடியான போராட்டங்கள், காட்டமான அறிக்கைகள், அனல் தெறிக்கும் பேச்சுகள் ஆகியவற்றால் ஆவேசமான அரசியல் தலைவராகவே அறியப்படுபவர் பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ். இங்கே 'கல்கி' வாசகர்களுக்காக, நண்பர்கள், பூக்கள், சிறு வயது நினைவுகள் என்று மனம் திறக்கிறார்.

சென்னை தி.நகரில் உள்ள கொங்கு தமிழ் அலுவலகம். தமது அறையில் ரிலாக்ஸ்டாக சோபாவில் அமர்ந்திருக்கும் ராமதாஸ், இயல்பாகப் பேச ஆரம்பிக்கிறார்.

"உண்மையாகவே எனக்கு மென்மையான மனசுதான். அதனாலதான் மக்கள் படும்பாட்டை நினைத்து வருந்தி அரசியலுக்கு வந்தேன்" என்று பேச்சைத் துவக்கியவர்,

"எனக்கு மரம், செடி, கொடிகள்னாலே ரொம்பப் பிரியம். என்னோட தைலாபுரம் தோட்டத்துல இருபத்தி ஐந்து வகையான பூஞ்செடிகள், இருபது வகையான காய்கள், பத்து வகையான கீரைகளும், பயிர் பண்றேன். அவற்றோடு ஆத்மார்த்தமா பேசுவேன். நண்பர்களிடம் 'நலமா'னு விசாரிக்கிற மாதிரி, செடி கொடிகளையும் மனசுக்குள்ளேயே நலம் விசாரிப்பேன்.

அதிலும் பூக்கள் என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவை மலர்ந்து காற்றிலாடுவது, குழந்தைகள் சிரிப்பதைப் போலிருக்கும்..."

சற்று இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பேச ஆரம்பிக்கிறார்... "எனக்குக் குழந்தைகள்னா ரொம்ப இஷ்டம். குழந்தைகளைப் பார்த்துட்டா உடனே தூக்கி தோள்ள போட்டுக்குவேன்; கொஞ்சுவேன். அதுவும் என் பேரப் பிள்ளைகள் பதினைந்து பேர் இருக்காங்களே... என் மேல அவங்களுக்கு ரொம்பப் பாசம்!" என்றவர், தமது குழந்தைப் பருவ நினைவுகளை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

"அது ஒரு கனாக்காலம்... நான் அம்மா செல்லம். அப்பான்னாலே அப்படி ஒரு பயபக்தி.

சுத்துப்பட்டு பசங்களோட சேர்ந்து பெரிய கிணத்துல நீச்சலடிப்போம். தரையில ஓடிப் பிடிச்சு விளையாடுறாங்களே, அதேமாதிரி தண்ணியில விளையாடுவோம். அதுக்குப் பேரு ஓரி.

மூணு நாலு மணி நேரம் விளையாடி, கண்ணெல்லாம் சிவந்து போய், உடம்பு சோர்ந்த பிறகுதான் வீட்டுக்குக் கிளம்புவோம்.

நான் வீட்டு முன் பக்கமா போக மாட்டேன். அப்பா கண்ணுல மாட்டிடக் கூடாதுன்னு பயம். 'இப்படி தண்ணியில கிடந்தா உடம்பு சுகமில்லாமப் போயிடும்'னு அப்பா திட்டுவார். நைஸா தோட்டத்து வழியா புகுந்து பின்பக்கமா போவேன். அப்படியும் அப்பா என் கண் சிவந்திருக்கான்னு பார்க்கக் கூப்பிடுவார். அம்மாதான் 'அவன் கிணத்துக் கெல்லாம்



"நான் சினிமா

போகலை. தோட்டத்துலதான் இருந்தான்'னு சொல்லி என்னைக் காப்பாத்துவாங்க. நான் அப்படியே அம்மாவுக்குப் பின்னால ஒளிஞ்சுக்குவேன்" என்பவரின் கண்கள் சட்டென்று பனிக்கின்றன.

–மனம் திறக்கிறார் ராமதாஸ்

ரசிகன்!''

"உலகத்திலே அம்மாவுக்கு இணையா வேற யாரும் கிடையாது. என் வாழ்க்கையிலேயே மிகப் பெரிய இழப்பு அவங்க மறைவுதான்'' என்கிறார் கம்மிய குரலில்.

அவரை திசை மாற்ற, "இள வயதில் உங்களுக்குப் பிடித்த விளையாட்டு எது?'' என்கிறோம்.

"அப்போ என் செட்டு பசங்க எல்லாம், கில்லி, கோலி, சடுகுடு எல்லாம் விளையாடுவோம். அதேபோல பந்து விளையாட்டு. பழைய துணிகளைச் சுருட்டி அதை கயிற்றால கட்டுவோம். அதுதான் பந்து.

கபடி நல்லா விளையாடுவேன். மூச்சுப் பிடிச்சு எதிரணி பகுதிக்குப் போகும்போது, அவங்க வியூகத்தை நொடியில கணிச்சு அதுக்கேத்த மாதிரி ஆடுவேன்'' என்கிறார் பழைய நினைவுகளில் லயித்தபடி.



பேச்சு திரைப்படம் பக்கம் திரும்புகிறது. "பல பேர் திரைப்படமே எனக்குப் பிடிக்காதுன்னு நினைக்கிறாங்க. ஆனா உண்மையில் நானொரு நல்ல சினிமா ரசிகன். சினிமா என்பது சக்தி மிக்க ஊடகம். அதன் மூலம் மக்களுக்கு நல்ல கருத்தைச் சொல்லணும். அப்படித்தான் முன்பு இருந்தது. ஆனா இப்போ வேற மாதிரி இருக்குது'' என்று கொட்டியவர், சில நிமிட இடைவெளியில் மீண்டும் பேசுகிறார்.

''நான் சிவாஜி படங்களை ரொம்ப விரும்பிப் பார்ப்பேன். இந்தியாவிலேயே, ஏன்... உலகத்திலேயே அவரை மாதிரி ஒரு நடிகர் இதற்கு முன்பும் கிடையாது. இனியும் வரப் போவதில்லை.

ஆத்திரமோ, சந்தோஷமோ... எந்த உணர்ச்சியையும் அவர் அளவுக்கு வேறு யாராலும் செய்ய முடியாது.

அவர் நடித்த 'பாசமலர்' படம் வெளிவந்தபோதே பலமுறை பார்த்தேன். அதற்குப் பிறகு தொலைக்காட்சிகளில் அந்தப் படம் ஒளிபரப்பும்போதெல்லாம் பார்க்கத் தவறியதில்லை. அதே மாதிரி சாவித்திரி, பத்மினி படங்களும் எனக்கு ரொம்பப் பிடிக்கும்'' என்றார்.

"இந்தக் கால சினிமாவுக்கு நிறைய பிள்ளைகள் நடிக்க வந்திருக்காங்க. இது..... வரவேற்க வேண்டிய விஷயம்தான். சிவாஜிக்குப் பிறகு கமல் நடிப்பு எனக்குப் பிடிக்கும். சமீபத்துல பொம்பளை வேஷம் போட்டு நடிச்சாரே... ஆங்... 'அவ்வை சண்முகி'. அது பார்த்தேன். நல்லா இருந்துச்சு... அந்தப் படத்தோட ஆங்கில மூலத்தையும் பார்த்திருக்கேன்!'' என்றவர் சட்டென்று சீரியஸாகிறார்.

" கமல் ஒரு நல்ல நடிகர். வித்தியாசமான படங்களைத் தருகிறார். இன்னும் நல்ல படங்களைத் தரும் தகுதி அவருக்கு இருக்கு. தரணும்.

அவர் தமிழ் பாதி

ஆங்கிலம் பாதினு தலைப்பு வைக்கப் போறதா செய்தி வந்துச்சு. அவர் அப்படிச் சொன்னாரான்னு தெரியலை. அப்படிச் சொல்லியிருந்தா, அது பாதிக் கிணறு தாண்டுற மாதிரி ஆபத்தான விஷயம். பாதி மீசை வச்சுக்கிற மாதிரித்தான்'' என்றவரின் பேச்சு இசையின் பக்கம் திரும்புகிறது.

''இசைன்னா மென்மையா, மனசை வருடிக் கொடுக்கற மாதிரி இருக்கணும். ஆனா இப்போ நேர்த்திக் கடன் மாதிரி ஆயிரத்தெட்டு டிரம்ஸ்களை வச்சுக்கிட்டு அடிக்கறாங்க. காது ஜவ்வு கிழியுது.

அந்தக் காலத்துல எம்.எஸ்.வி, கே.வி. மகாதேவன் இசை அமைத்த பாடல்கள் எல்லாம் இன்னமும் ரசிக்க முடியுதே!'' என்றார். ''இசை எனது தினசரி வாழ்க்கையின் அங்கம்'' என்று சிரிக்கிறார்.

''காரில் பழைய திரைப்படப் பாடல்களைக் கேட்டபடியேதான் பயணிப்பேன். இப்ப அரிதா ஒரு சில நல்ல பாடல்கள் வருதே, அதை ரசிப்பேன். தினமும் வாக்கிங் போகும்போது சமீபத்தில் வந்த திரைப்பாடல்களான 'மார்கழிப் பூவே', அப்புறம் 'பாரதி' படப் பாடல்களை ரசிச்சுக் கேட்டுக்கிட்டே நடைப் பயிற்சி செய்வேன். அதேபோல யோகா, தியானம் செய்யும்போது, வாத்திய இசை கேட்பேன்.

நாட்டுப்புறப் பாடல்கள்னா எனக்கு உயிர். புஷ்பவனம் குப்புசாமி, பிரபல நவநீதகிருஷ்ணன் பாடல்களைக் கேட்டால் லயிச்சுப் போயி நின்னுடுவேன்'' என்றவரிடம் ''உங்களுடைய நிறைவேறாத ஆசை என்ன?'' என்றோம்.

கண்களை மூடி லயித்துப் போய்ச் சொல்கிறார்: ''மறுபடி குழந்தையாகணும்! நண்பர்களோட கில்லி விளையாடணும்... ஓரி விளையாடிட்டு, அப்பாகிட்ட பயந்து அம்மா பின்னால ஒளிஞ்சுக்கணும்...!''

- டி.வி.எஸ்

படங்கள்: ராஜன்

காதலிக்க நேரமுண்டு!

ஒய்.ஜி. மகேந்திராவின் 'காதலிக்க நேரமுண்டு' மேடை நாடகத்திலிருந்து சில ஜோக்ஸ்.



வெங்கட்டின் அப்பா: சார், நான் எல்.ஐ.சி.லே படிப்படியா முன்னேறினேன், தெரியுமா?

வெங்கட்: ஆமா, படிப்படியா முன்னேறி, பதினாலாவது மாடியிலே கிளார்க்காவே ரிட்டயராயிட்டார்.

பங்கஜம்: (மகாவிஷ்ணு வேடம் போட்ட கிரீஷிடம்) சுவாமி, மோட்சத்தை அடைவது எப்படி?

மகாவிஷ்ணு (கிரீஷ்) : பூந்தமல்லி ஹைரோட்டில் போய், ஒரு லெஃப்ட் திரும்பி அடுத்த ரைட் திரும்பினா மோட்சம், மினி மோட்சம் இரண்டுமே கிடைக்கும்.

வெங்கட் (நண்பனைக் காட்டி): இவன் பேரு 'கைமாத்து' அனந்து. கடன் வாங்கினா திருப்பித் தரவே மாட்டான். பக்கத்துல இருக்கற ஏடிஎம் மெஷினுக்கே முன்னூறு ரூபா பாக்கின்னா பார்த்துக்குங்க!

வெங்கட்: (காயத்ரியிடம்) நம்ம காதலுக்காகத் தண்டவாளத்துல தலை வைக்கணுமா... சொல்லு வைக்கறேன்.

நண்பன் அனந்து: ஆமா, ட்ரெயின் போனப்புறம்!

- சாரு



"ஶ்ரீக்காடுதாங்கல் போறேளா?"

உள்ளேயிருந்து ருக்மிணியின் குரல் கேட்கிறது. மீசையைத் தடவிக் கொண்டு பல்லக்கில் ஏறப் போனவர் நிற்கிறார். "என்னடா, இன்னும் காணோமேன்னு பார்த்தேன்" முணுமுணுத்துக் கொண்டே,

"ஆமா, அங்கயிருக்கற சொத்தை நம்ம பேருக்குன்னா எழுதி வெச்சிட்டுப் போயிருக்கான்! சொத்துன்னு இருந்தாலே அப்பப்போ போய் பார்த்துட்டு வரணுமில்லையா? போயிட்டு இதோ வந்துடறேன்"

"மயிலாப்பூர் வழியாதானே போறேள்?"

"ஆமா."

"அங்க நம்ம சொத்து ஒண்ணு இருக்கே. சொத்துன்னா இருந்தா அப்பப்போ பார்க்கணும்னேளே, பார்த்துட்டு வாங்கோ, இல்ல... அதையாச்கும் வந்து பார்த்துட்டுப் போகச் சொல்லுங்கோ."

"என்ன சொல்றே நீ?"

"அட நாராயணா, மறந்து போச்சா? நம்ம கொழந்த ஒத்தன்...பேயன்னு இருக்கானே. அந்த சொத்தைச் சொல்றேன். ஏதோ, போறாத காலம்... நாற்பது வருஷமா போக்குவரத்து இல்லாமப் போச்சு. இங்கேயும் அங்கேயும் இருக்கறவா பண்ணின தகராறுக்கு இவனை வர விடாமப் பண்ணிட்டா. இப்போதான் மூணு வருஷமா வந்து போறானில்லையா, இப்பவும் ஒரு நடை வந்து போகச் சொல்லுங்கோ."

மயிலாப்பூர். பார்த்தஸாரதி வரும்போதே தயாராய் வெளியே வந்து நிற்கிறார் பேயாழ்வார். மாலை மரியாதை எல்லாம் ஆகிறது. திரும்பி வரும்போதும் அப்படியே, "கொழந்தே, ஒரு நடை வந்திட்டுப் போடா."

ஒரே பாசுரத்துக்கு...



ஞாயிறு அக்.10. பேயாழ்வார் புறப்பட்டு அல்லிக்கேணிக்கு வருகிறார். 'மலர்க்கரிய நெய்தல்'தனில் வந்துதித்தோன் வாழியே!' நெருக்கிடவே இடைகழியில் நின்ற செல்வன் வாழியே!' வேத கோஷ்டி எல்லையிலேயே பூரண கும்பத்தோடு வரவேற்கிறது. புறப்பட்டு நேரே நம்மாழ்வார் சன்னிதியில் வந்து இறங்குகிறார். பல்லக்கிலிருந்து கைப் பலகைக்கு மாறி, நேரே பார்த்தஸாரதி சன்னிதி.

"வாடாப்பா, வா. நன்னாயிருக்கியா...ம் ராமன், ரங்கநாதன், வரதன், நரசிம்மன், ஆண்டாள் எல்லாம் இங்க நித்திய வாசம்தான். அப்படியிருந்தாத்தானே மங்களா சாஸனம் பண்ணுவே, இருக்கோம். ஆகட்டும்... உன் மங்களா சாஸனத்தைக் காது குளிரக் கேட்போம்."

கன கம்பீரமாய், உச்சத்வனியில் "விற்பெரு விழவும்... வந்துதித்த வெண்டிரைகள்..." மங்களா சாஸனம் ஆகிறது. அங்கிருந்து தாயார் சன்னிதி, வரதர், நரசிம்மர், ஆண்டாள் என்று முடிந்து திரும்பும்போது, உற்சவர் தயாராக இருக்கிறார். பேயாழ்வாரை அழைத்துக் கொண்டு நான்கு மாட வீதிகளிலும் உலா.

மறுபடி உள்ளே நுழைந்து ஸாரதி சன்னிதியில் அவர் அணிந்திருந்த மாலையும், பொன்னாடையும் பெற்றுக் கொண்டு, 'பிரியா விடை' வாங்கிக் கொள்கிறார்.

எந்த மன்னாதி மன்னனுக்குக் கிடைக்கும் இந்த பூரண கும்பம், மாலை மரியாதை, அன்பு எல்லாம்! அதுவும் அல்லிக்கேணி ஸாரதியைப் பாடிய ஒரே ஒரு பாசுரத்துக்கு!

- விஷ்வக்



கண்ணகி வந்த ஊர்-2

கண்ணாடிக் கல்வெட்டுகள் 20

பா. விஜய்

கடவுளால்
படைக்கப்பட்ட மனிதரைவிட
மனிதரால்
படைக்கப்பட்ட கடவுள்கள் மிகுதி!

கோயிலுக்குக் கோயில்
கோபுர விமானம் இருக்கின்றதோ
இல்லையோ!
கோடிகோடியாய் வருமானம்
இருக்கின்றது!

பந்திக்குக் கதவு திறந்த
ஆலயங்கள் குறைவு!
பதவிக்குக் கதவு திறக்கும்
ஆலயங்களே அதிகம்!

கோயிலுக்குள் படுத்திருந்த
கோதை செல்லி
பொங்கி நின்றாள்!

செல்லியின் விழியில் சூலாயுதம்!
பார்வையில் வாளாயுதம்!

மாந்திரீகன் காளிங்கனே
மனமரண்டு போனான்!

துயிலும் போது
கொடியாய் இருந்தவள்
இப்போது இடியாய் இருக்கிறாளே!

சபலம் என்ற புதைகுழி
கால் வைத்தவனை எல்லாம்
கழுத்து புதைய இழுத்துக் கொள்ளும்!

காளிங்கன் - செல்லியிடம்
காமார்ச்சனை செய்தான்!

"பெண்ணே! ஏன் கோபம்!
நான் காளியின் பக்தன்!
பக்தனுக்கு ஒரு படையலின் மீது
பற்றாசை!

வா!

உலகமே கண்ணில்லாத,
செவியில்லாத முடம்!
பெரியோர்கள் தவறிழைத்தால்
பார்க்காது - கேட்காது!

வா!

இளமையின் பேரழகை தினம்
கற்பூரம் காட்டுவதிலேயே
கரைய விடுவாயா?

உன்னை இறைவனுக்கு
அர்ப்பணித்தது போல எண்ணி
அமைதி பெறுவாய்" என்று
காளிங்கன் நெருங்கினான்!

சூரியப் பொட்டுடைய
சுடர் எரிக்கும் செல்லி
பட்டெனப் பற்றினாள்!

"சீ! மூடனே!
கோயில் புறாவை சிறைப்பிடிக்கும்
கல்நெஞ்சு வேடனே!

ஓடிவிடு!
உன் இருண்ட கண்களை
இப்போதே மூடிவிடு!

இது கோயிலடா கோயில்,
நான் பக்தையடா பக்தை"

செல்லியின் வாசகங்கள்
செல்லாமல் போயின!...

"அதனால் என்ன?
இது கோயில் என்பதுதான்
உன் அச்சமாக இருந்தால்...

கோயிலை - மன்மதன்
கோட்டையாக்கி விடுகிறேன்!

காமமும் ஒருவகை
தவகுதான் கன்னிகையே!

இருவர் - ஒருவராய்
இறுகும் தவம்!

மோகமும் - ஒரு வகை
முக்திதான் பூமுகையே!

முத்த ஓசைகளே இங்கு
அர்ச்சனைப் பூக்கள்!

கடவுள்கள் நடத்தாத
காமார்ப்பண லீலைகளா?
பக்தர்கள் நாமென்னம்மா
பாவங்கள் செய்தோம்?


இதோ இரவுப் போர்வை
அதோ தீபவெளிச்சம்
இங்கே நந்தவன மணம்!
அதில் ஊறிய உடல்!"


காளிங்கன் மேலே மேலே
காமநாடகம் நடத்த
செல்லியின் உயிர் வெளியே
சென்றுவிடத் துடித்தது!

பொழுது மெல்ல மெல்ல
புலர...!
மொட்டுக்கள் விட்டு விட்டு
மலர...
சேவல்கள் தொண்டை ஏற்றி
அலற...

காளிங்கன் கருக்கலில் ஒரு
வேட்டை நாயின் பற்களை
வெளிக்காட்டியபடி நகர்ந்தான்!

செல்லியின் மனதுள்
துன்பக் காய்ச்சல்!





அவள் விழியில் நீராராதனை!
உள்ளத்தில் ஏராளமான
ஊமை ரணங்கள்!

அன்று பகல் ஓடியது!
செல்லியின் முகமலர்
நாள்முழுக்க வாடியது!

காளிங்கன் மாந்திரீக தர்பார்
ஊருக்குள் நடந்தது
உற்சாகப் பெருவிழாவாய்

நொடியில் குங்குமம் கொடுப்பதும்
குழந்தைப் பேறு கொடுப்பதும்
குபேர பலன் கொடுப்பதுமாய்
காளிங்க ராஜாங்கம் பெருத்தது!

சாமியார்கள் பலர்
சர்வாதிகாரிகளாக
அன்றே
உலா வந்திருக்கின்றனர் உல்லாசமாய்!

தினசரி விண்ணில்
இரவு வரும்! - பிறகு
நிலவு வரும் - பிறகு
காளிங்கன் வருவான் கோயிலுக்கு...
செல்லியை அழைப்பான் காதலுக்கு...

போராட்டமே வாழ்க்கையானால்
பூந்தோட்டம் பொறுக்குமா?
வெந்நீரில் நனைந்த வேரில்
பச்சை இலை துளிர்க்குமா?

புண்ணான மனசுடன்
காளிங்கனிடமிருந்து தினசரி
கற்பைக் காப்பாற்றி நின்றாள்
பக்தை செல்லி!

ஓர் இரவு வந்தது!
அமாவாசை என்ற கூடாரத்தில்
நிலா அடைந்த நேரம்

திருக்கோயிலின் வாயிற்கதவு
திறக்கப்படுகின்ற சிற்றோசை
திடுக்கிட்டெழுந்தாள் செல்லி!

ஒன்றிரண்டு தீபங்கள்
ஒளியூட்டின பாதைக்கு...!
கோயில் வாசலில் ஓர் உருவம்!

காளிங்கனா?
கழுத்து வியர்த்தது செல்லிக்கு!
உருவம் உள்ளே வந்தது
உறைந்தாள் செல்லி!

காளிங்கனில்லை!
காளி! ஆம் காளியேதான்!

கோபமும்-குரூர விழியுமாய்
ஆங்கார ரூபிணி!

"அம்மா! காளியம்மா!" என்றவள்
அடிசாய்ந்து வீழ்ந்தாள்!

"காப்பாற்றம்மா! காப்பாற்று!
கைப்பிள்ளையைக் காப்பாற்று
காளிதேவியே காப்பாற்று!" என
மூச்சிறைத்த செல்லியைப் பார்த்து
அந்த உருவம் பேசியது!

"பெண்ணே! கேள்!
நான் காளியல்ல!"

"காளியில்லையா?- பிறகு யார்?"
"கண்ணகி!"

"கண்ணகியா?"

"ஆம்! மதுரையை எரித்த
அதே கண்ணகிதான்!"

(தொடரும்)



M.குமரன் சன் ஆஃப் மகாலட்சுமி

படத்தின் இயக்குனர் எம். ராஜாவுக்கு அசாத்திய துணிச்சல். சின்னத்திரைக்கு, சினிமா மொத்தமாய் தத்துக் கொடுத்துவிட்ட தாய்ப்பாசம், தந்தைப்பாசம், தங்கைப் பாசம் மூன்றையும் கொஞ்சம் கூட பயப்படாமல் சினிமாவுக்கு மீட்டு வந்திருக்கிறார். ஆனால் பி.வாக அளவுக்கு மாவு பிசையாமல் சென்டிமெண்ட் காட்சிகளை யதார்த்தத்துக்கு அருகில் கொண்டு வந்து திறமையாக ஃபிலிம் காட்டுவதால் படத்தின் தலை தப்பிக்கிறது.

சாதனை புரிய திருமண வாழ்க்கை தடையாக இருக்கிறது என தவறாக கற்பித்துக் கொண்டு, மனைவி மகன் இருவரையும் கைவிட்டு விடுகிறார் சர்வதேச பாக்ஸிங் சாம்பியன் பிரகாஷ் ராஜ். தனியொரு மனுஷியாக மகனை வளர்த்து ஆளாக்குகிறார் நதியா. இறுதியில் நாம் எதிர்பார்த்தது போலவே, மகனுக்கே பாக்ஸிங் பயிற்சியாளராக வருகிறார் புறக்கணித்த தந்தை. பிறகு? 'மகன் தந்தைக்காற்றும் உதவி...' என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக ஹீரோ ஜெயம் ரவி என்ன செய்கிறார் என்பது மோதிப்பார்க்கும் மீதிக் கதை.


வழக்கமான வீச்சரிவாள், வேல் கம்பு இல்லாமல் தொழில் முறை குத்துச் சண்டையை ஆக்ஷன் களமாகத் தேர்வு செய்திருக்கும் இயக்குனர், அதைத் திரைக்கதையோடு பேக்அப் செய்திருக்கும் நேர்த்தியால் படம் சூப்பர் பிக்அப்.

பாக்ஸிங் அமர்க்களம் போதாதென்று, ரவி-அசின் கூட்டணியின் இளமைக் காதலில் ஏகத்துக்கும் நிரம்பி வழிகிறது. துள்ளலும் துடிப்பும். தோழிகளோடு திருட்டுத்தனமாக மலபார் பீடியை குடிக்க முயலும் நாயகியை, தமது செல்போன் கேமராவில் படம் பிடித்து மிரட்டும் நாயகன், காட்டிக் கொடுக்காமலிருக்க கட்டிப்பிடித்து மன்னிப்புக் கேட்கச் சொல்வது, ஜப்பான் ஸ்டைல் விப்பாலஜி ஜோசியம் பார்ப்பதெல்லாம் இளம் ரசிகர்களை ஏகத்துக்கும் முதுகு சொறிந்து விடும் அசல் சினிமாத் தனம்.

புத்திசாலி நகைச்சுவை என்ற போர்வையில் கண்ணகி, பாரதியார் போன்ற பெருமைமிக்க தமிழ் அடையாளங்களை, தமது வில்லங்க நகைச்சுவையின் வட்டத்திற்குள் அடக்கும் விவேக் தம்மைத் திருத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

கொஞ்சம் இடைவெளிவிட்டாலும், நடிக்கவும், அடிக்கவும் வாய்ப்புள்ள கதையில் கடுமையாக உழைத்திருக்கிறார் ஜெயம் ரவி. கதாநாயகி அசினை விடவும் துறுதுறுப்பாக நடித்திருக்கிறார் அம்மா நதியா. வழக்கமான பிரகாஷ்ராஜ் என்றாலும், விறுவிறுப்புராஜ். தேவாவின் இளவல் ஸ்ரீகாந்த் தேவாவின் இசையும், பிதாமகன் ஒளிப்பதிவாளர் பால சுப்ரமண்யமின் கேமராவும் கலக்கல் ரகம். எம்.குமரன் சன் ஆஃப் மகா லாலட்கமி.

- விஷுவல்தாசன்



உங்கள் மனங்கவர் 'கல்கி' தீபாவளி மலரை இலவசமாகப் பெற இனிய வாய்ப்பு!

'கல்கி'க்கு ஒன்றரை ஆண்டு சந்தா ரூ.495/- கட்டுங்க. ரூ.80/- பெறுமானமுள்ள 'கல்கி' தீபாவளி மலர் அன்பளிப்பாகப் பெறுங்க. இந்த அறிவிப்புக்குப் பிறகு வரும், அல்லது நீட்டிக்கப்படும் முதல் 500 சந்தாக்களுக்கு மட்டுமே இந்த அரிய சலுகை!

முந்துங்க! முந்துங்க!

கடைசித் தேதி : 30.10.04

சந்தாத் தொகையை டி.டி/ எம்.ஓ/ காசோலை மூலம் 'கல்கி' என்ற பெயருக்கு அனுப்ப வேண்டும். வெளியூர் காசோலைகளுக்கு ரூ.30/-சேர்த்து அனுப்ப வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு :

சர்க்குலேஷன் மேனேஜர்,
கல்கி,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

கல்கி
தீபாவளி மலர்-2004

இந்த இருள் மாளிகையும் அதில் இந்தப் பொக்கிஷ நிலவறையும் இருப்பதில் வியப்பில்லையல்லவா? அம்மம்மா! இந்த நிலவறைக்குள் நாம் வந்து சேர்ந்தோமே? இது நம்முடைய பாக்கியமே யல்லவா? பாக்கியலக்ஷ்மியும் அதிர்ஷ்ட தேவதையும் சேர்ந்தல்லவா நம்மை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்? எப்படிப்பட்ட அதிசயமான, அபூர்வமான இரகசியத்தை, நம்முடைய முயற்சி ஒன்றும் இல்லாமலே நாம் தெரிந்து கொண்டோம்! இதை எப்படிப் பயன்படுத்துவது? பயன்படுத்துவது அப்புறம் இருக்கட்டும்; இங்கிருந்து போவதற்கே மனம் வராது போலிருக்கிறதே! இங்கேயே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கலாம் போலத் தோன்றுகிறதே! இங்கேயே இருந்தால் பசி, தாகம் தெரியாது. உறக்கம் அருகிலும் அணுகாது! நூறு வருஷ காலமாகச் சோழ நாட்டு வீரச் சைன்யங்கள் அடைந்த வெற்றிகளின் பலன்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன. நவநிதி என்று சொல்வார்களே; அவ்வளவும் இங்கே இருக்கிறது! குபேரனுடைய பொக்கிஷத்தையும் தோற்கடிக்கும் செல்வக் களஞ்சியம் இங்கே இருக்கிறது. இதைவிட்டு எதற்காகப் போக வேண்டும்.



வந்தியத்தேவன் அந்த நிலவறை

சிலந்தி

யைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு மூலையில் கிடந்த மணி மகுடங்களைத் தொட்டுப் பார்த்தான். இன்னொரு பக்கத்தில் கிடந்த ரத்தின ஹாரங்களைக் கையில் எடுத்துப் பார்த்தான். அவற்றைப் போட்டுவிட்டு இன்னொரு பக்கம் சென்று செப்புப்பானையில் நிறைந்திருந்த முத்துக்களில் கைகளை விட்டு அளைந்தான். வேறொரு பானையில் கையை விட்டுப் பொற்காசுகளை அள்ளிச் சொரிந்தான். ஒரு மூலையில் தரையில் பளபள வென்று ஏதோ பரவலாக ஜொலிப்பதைக் கண்டு அங்கே சென்றான். முதலில் என்னவென்று தெரியவில்லை. பிறகு, குனிந்து உற்றுப் பார்த்தான். ஐயோ! ஆண்டவனே! அது ஓர் எலும்புக் கூடு! ஒரு காலத்தில் சதையும் இரத்தமும் தோலும் ரோமமும் மூக்கும் முகமும் கண்ணும் காதுமாக

வலை!

அமரர் கல்கி

இருந்த மனித உடலின் எலும்புக் கூடு!

ஆ! இந்த எலும்புக்கூடு அசைகிறதே! உயிர்பெற்று எழுகிறதே! பொற்காசுகளைப் போலவே சத்தமிடுகிறதே! நமக்கு ஏதோ சேதி சொல்ல எழுந்திருப்பதாய்க் காண்கிறதே! வல்லவரையனுடைய உடம்பிலிருந்த ஒவ்வொரு ரோமமும் குத்திட்டு நின்றது. சீச்சீ! எலும்புக்கூடு எழுந்திருக்கவில்லை! அதற்குள்ளேயிருந்து ஒரு பெருச்சாளி ஓடி வருகிறது! நம் கால் மீது விழுந்து ஓடுகிறது! ஆம்; இப்போது பார்த்தால் எலும்புக் கூடு தரையிலேதான் விழுந்து கிடக்கிறது! ஆனால் அது நமக்கு ஒரு சேதி சொல்லுகிறது என்பது உண்மை. "ஓடிப்போ! இங்கே தாமதியாதே! நானும் உன்னைப்போல் உடல் படைத்த மனிதனாயிருந்தேன். இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேன். இங்கேயே மாண்டு மடிந்தேன்! இப்போது எலும்புக் கூடாகக் கிடக்கிறேன்! ஓடிப் போ!" என்று அது நம்மை எச்சரிக்கிறது. இங்கிருந்து உடனே தப்பிச் சென்றோமோ, பிழைத்தோம். இல்லாவிட்டால் அதோகதிதான்; அந்த மனிதனுக்கு ஏற்பட்ட கதிதான்.

வந்தியத்தேவன் அந்த நிலவறையிலிருந்து வெளியேற எண்ணினான். ஆனால் வெளியேறும் வழிதான் தெரியவில்லை. வந்த வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நிலவறையின் ஓரமாக எங்கே போனாலும் இருள் என்னும் பூதம் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. கீழே பார்த்தால் அதல பாதாளப் படுகுழியாகத் தோன்றியது. ஏறி வந்த படிக்கட்டு எங்கேயோ ஓரிடத்தில் இருக்கத்தான் வேண்டும். அதைக் கண்டுபிடிக்க வந்தியத்தேவன் மேலும் முயன்றான். தேடித்தேடி அலைந்தான். அப்படி அலையும்போது ஓரிடத்தில் சுவர் ஓரமாக ஒரு குப்பல் தங்கக் காசுகள் கிடப்பதைக் கண்டான். அந்தக் குப்பலின்மீது ஏதோ வலை பின்னியது போலிருந்தது. உற்றுப் பார்த்த போது, அக்குவியலின் பேரில் சிலந்தி வலை கட்டியிருப்பது தெரிந்தது. அது அவனுடைய சிந்தனையைத் தூண்டியது.

பெரியோர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளைச் சிலந்தி வலைக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். சிலந்தி, வலையை விரித்துக் கொண்டு காத்திருக்கிறது. எங்கிருந்தோ பறந்து வந்து ஈ அதில் அகப்பட்டு கொள்கிறது. பிறகு சிறிது சிறிதாகச் சிலந்தி ஈயை இழுத்து விழுங்குகிறது. மூன்றுவித ஆசைகளும் அப்படித்தான். மனிதன் வழி தவறிச் சென்று அந்த ஆசை வலைகளில் விழுந்து அகப்பட்டுக் கொள்கிறான். அப்புறம் மீளுவதில்லை.

(பொன்னியின் செல்வன் - முதல் பாகம். வானதி பதிப்பகம்)



ஆபாசப் பாடல்கள்...

‘எவ்வளவுதான் திறமை இருந்தாலும் ஆபாசமும் ஆங்கிலமும் கலந்து எழுதாமல் நிலைக்க முடியாது என்பதுதான் இன்றைய தமிழ்த் திரையுலகப் பாடலாசிரியர்களின் யதார்த்த நிலை.

இதற்கு விதிவிலக்கு மிகச் சிலரே. அவர்களில் ஒருவரான கவிஞர் தாமரையைச் சந்தித்தோம்.

திரைப்படங்களில் பாடல்கள் அவசியம்தானா?

கலைகள் யாவும் வாழ்க்கையின் அழகிய பிரதிபலிப்புகளே. இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பது திரைப்படங்களுக்கும் பொருந்தும். மனித வாழ்க்கையில், குறிப்பாக நம் தமிழ்ச்சூழலில், வாழ்க்கையின் எல்லாப் பருவங்களிலும், எல்லா நிகழ்வுகளிலும் இசைக்கும் பாட்டுக்கும் இடமுண்டு - தாலாட்டு முதல் ஒப்பாரி வரை! அதற்காக வாழ்க்கையில் எங்கெங்கு எப்படியெப்படி பாடல் வருமோ, அங்கு மட்டுமே, அப்படி மட்டுமே திரைப்படத்திலும் வரவேண்டும் என்று கேட்க முடியாது. அப்படிக் கேட்பது கலைநோக்கற்ற அணுகுமுறை. நிஜத்தின் அடிப்படையில்தான் நிழல் என்றாலும், நிஜமும் நிழலும் ஒன்றாகாது. கலைக்கண்ணாடி ஒன்றும் நிலைக்கண்ணாடி அல்ல! அது நிலைக் கண்ணாடிக்கும் மேலே சுழற்கண்ணாடியாக, நிறம் பிரித்துக் காட்டும் நிறப்பிரிகையாகவும் கூட இருக்கலாம்.

பாடல்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துவது, திரைப்படக் கலைக்குப் பலவாறு துணை செய்யும். பாடல்கள் இல்லாத படம் விதிவிலக்கு.

சமுதாயச் சீரழிவே



இன்றைய திரையிசைப் பாடல்களில் ஆங்கிலமும் ஆபாசமும் மிகுதியாகக் கலந்திருக்க, யார் காரணம்?

நேரடிக் காரணம் திரைத்துறையினரே என்றாலும், அடிப்படைக் காரணம் ஒட்டுமொத்தப் பண்பாட்டுச் சீரழிவுதான். தாய்மொழியே தேவையில்லை என்ற போக்கு, சமூக அக்கறையின்மை, பிறர் நலம் கெடுத்துத் தன்னலம் நாடுவதையே ‘சரி’ என்று கருதுதல், அயல்நாட்டு மோகம், வெகுமக்களை வெறுத் தொதுக்கி அவர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொள்ளும் மேட்டிமைத்தனம், ஆணாதிக்கம், பெண்ணை போகப் பொருளாகக் கருதுவது... இவையெல்லாம் இன்றையப் பண்பாட்டுச் சீரழிவுகளில் சில!

இந்தச் சீரழிவை எதிர்த்து நின்று முறியடிக்கும் பொறுப்பை உணராமல், திரைத்துறையினரும் மற்றவர்களைப் போலவே நடந்து கொள்வதால்தான் இந்த நிலை!

இதைத் தவிர்க்க முடியும். முதலாவதாக, திரைத்துறையினர் ‘ஆங்கிலமும் ஆபாசம் கூடாது’ என உறுதியாக முடிவெடுக்க உந்து

நலாக, மக்கள் இயக்கம் வேண்டும். இப்படியொரு மக்கள் இயக்கம் வளர்வதற்கு அரசும், ஏடுகளும், கலையிலக்கிய அமைப்புகளும், ஏன், அரசியல் கட்சிகளும் கூடத் துணை செய்யலாம். ஆனால் அவர்கள் தாங்கள் சீரழிவுகளை வளர்த்துக் கொண்டே திரைத் துறையில் மட்டும் பண்பாட்டுச் சீரழிவை எதிர்த்துப் போராடுவது எந்தப் பயனையும் தராது.

'நான் ஆபாசமாக எழுத மாட்டேன்'எனும் லட்சியத்துடன் ஒரு பாடலாசிரியர், இன்றைய தமிழ்த் திரைப்பட உலகில் தொடர்ந்து இயங்க முடியுமா?

முடியும். திறமையுடன் பொறுமையும், உறுதியும் இருந்தால் நிச்சயம் முடியும். இப்படிப் பட்டவர்களை ஊக்கப்படுத்தி வாய்ப்புக் கொடுக்கும் இயக்குநர்களும், இசையமைப்பாளர்களும் இருக்கிறார்களே!

காரணம்!

நீங்கள் திரைப்பட உலகில் எவ்வகையான தடைகளைச் சந்தித்தீர்கள்?

திரைப்படத் துறை போட்டி நிறைந்த துறை! இத்துறையில் நுழைவதும், நுழைந்தபின் நிலைப்பதும், நிலைத்தபின் வளர்வதும் எளிதல்ல! நான் அறிமுகமானபோது பெண்கள் எவருமே பாடல் துறையில் இல்லை. ஒரு பெண்ணால் பாடல் எழுத முடியும் என்று பலர் நம்பவேயில்லை. அந்த அவநம்பிக்கைதான் நான் சந்தித்த முதல் தடை! அதை வெற்றி கண்ட பிறகு மற்றதெல்லாம் பெரிதாகத் தெரியவில்லை.

இன்றைய புதுக் கவிதைப் படைப்புகள் உங்களுக்கு நிறைவளிக்கின்றனவா?

நிறையப் படிக்க வேண்டும், குறைவாக எழுத வேண்டும் என்பதே என் விருப்பம்; முந்தைய கால கட்டக் கவிதைகளில், பொதுப் பிரச்னைகள் மேலோங்கி இருக்கும். கவிதை வடிவம் எளிமைப் பட எளிமைப்பட, பரவலாக, தனிமனித உணர்வுகள் கவிதைக் கருவாவதைக் காண முடிகிறது. அலுப்பும் சலிப்பும் ஏற்படுத்தும் கவிதைகள் ஒரு புறம் என்றாலும். நினைத்தே பார்த்திருக்க முடியாத கருக்களைக் கொண்ட கவிதைகளைக் காண முடிகிறது. பெண் கவிஞர்களின் வரவும், புது முயற்சிகளும், ஆச்சர்யம் ஏற்படுத்தும் வகையில் உள்ளன! ஆனால் சமூக நோக்கம் அறவே இல்லாத படைப்பாளிகளை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

கவிதையில் பெண்மொழி என்று தனியாக ஒன்று உண்டா? பெண் எழுத்தாளர்கள், பெண் கவிஞர்கள் போன்ற அடையாளங்கள் சரிதானா?



நியாயமாகப் படைப்பாளி என்றால் படைப்பாளிதான்! ஆண் பெண் வேறுபாடு இருத்தல் கூடாது. ஆனால் நம் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்குமான இடம் ஒன்றாக இல்லையே! ஆண் மலையில் நிற்கிறான் என்றால், பெண் இப்போதுதான் பூமியைப் பிளந்து வெளிவர முயல்கிறாள். பொதுப் பிரச்னைகள் தவிர்த்து, இருவருக்குமான தளம், சிக்கல்கள், தீர்வுகள் வேறாக உள்ளதால், படைப்புகளில் ஆண்-பெண் பிரிவு ஏற்படவே செய்கிறது.

சமூகத்தில் ஆண் பெண் இருபாலாரையும் ஒன்றாகப் பாவிக்கும் நிலை வரும் வரை, இதைத் தவிர்க்க முடியாது. இதில் அவமானம் எதுவுமில்லை.

- மருதன்



1 வாங்கினால் 25 இலவசம்!

மனிதர்கள்

ஒரிசாவிலிருந்து புறப்பட்டு சைக்கிளிலேயே நம் நாட்டை வலம் வந்து கொண்டிருக்கிறார்கள் சுதீர் குமாரும், ஜாடேஸ்வரும். ஆங்காங்கே சைக்கிளை நிறுத்திவிட்டு, "ஒன்றை வாங்குங்கள்; இருபத்தி ஐந்தை இலவசமாகப் பெறுங்கள்" என்று கை மைக்கில் அறிவிப்பு செய்கிறார்கள். இலவசம் என்றவுடன் கூட்டம் கூடி விடுகிறது.

மெதுவாக, சைக்கிளில் வைத்திருக்கும் பெட்டியிலிருந்து, சில போஸ்டர்களை எடுக்கிறார்கள் இளைஞர்கள். துண்டுப் பிரசுரங்களை எடுத்து விநியோகிக்கிறார்கள். அதிலுள்ள 'இலவசம்' விஷயம் நம்மைப் பெரும் அதிர்ச்சியடைய வைக்கிறது.

சிகரெட்டை வாங்கினால், மாரடைப்பு, மன அழுத்தம், அஜீரணம், வாய் துர்நாற்றம், தூக்கமின்மை, பல்வேறு விதமான கேன்ஸர்கள் உட்பட, இருபத்தி ஐந்து விதமான வியாதிகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

புகையிலை மற்றும் புற்றுநோய்க்கு எதிரான பிரசாரம்தான், இவர்களது மெகா சைக்கிள் பயணத்தின் நோக்கம்.

கடந்த வருடம் ஜனவரியில் ஒரிசாவிலிருந்து புறப்பட்ட இந்த இளைஞர்கள், பல மாநிலங்கள் வழியே தமிழ்நாட்டுக்கு வந்திருந்தனர். அடுத்த கட்டமாக சைக்கிளிலேயே வெளிநாடுகளுக்கும் செல்லப் போகிறார்களாம்.

நாலு செட் வெள்ளை உடை, சமையல் பாத்திரம், மினி கேஸ் சிலிண்டர், அடுப்பு சகிதம் பயணம் செய்யும் இவர்கள், பெரும்பாலும் தாங்களாகவே சமைத்து சாப்பிடுகிறார்கள்.

மறக்க முடியாத அனுபவம்?

எங்கள் பிரசாரத்தைக் கேட்ட ஆந்திராவில் போலீஸ் அதிகாரி ஒருவர், நாங்கள் விடைபெற்ற சமயம், திடீரென்று எங்கள் கால்களைத் தொட்டு வணங்கினார். எங்களுக்கு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

"தினமும் ஏராளமான சிகரெட் பிடிப்பவன். என் கண்களைத் திறந்தீர்கள். இனி நான் சிகரெட்டைக் கையால் தொட மாட்டேன்" என்று சொன்னதை நினைத்தால் இப்போதும் உடல் சிலிர்க்கிறது" என்கிறார்கள்.

- மௌலி

படம்: கௌதம்

உறங்கா

தேய்த்து வைத்த மாதிரி எகிப்து சுத்தமாய்த் தெரிகிறது. எகிப்தியர்கள் - தென்பகுதியிலுள்ள நூபியர் (Nubiar) களைத் தவிர - நல்ல சிவப்பாக, தீர்க்க மான மூக்கு, நீலக்கண்கள், கறுத்த தலை முடியுடன் பார்க்க அழகாக இருக்கிறார்கள். அதுவும் எகிப்தியப் பெண்கள் மெல்லிய உடம்புடனும் நளினமான அங்க அசைவுகளுடனும், ஆண்களில் பலர் குட்டையாகவும், பருமனாகவும் இருக்கிறார்கள். மேற்கத்திய நாட்டின் தாக்கம் இருப்பதில் பல பெண்கள் பாண்ட், ஜிப்பா மாதிரியான டாப்ஸுடன், தலைமுடி வெளியே தெரியாமல் ஸ்கார்ஃப் மட்டும் அணிந்துகொண்டு, பர்தா இல்லாமல் வளைய வருகிறார்கள்.



அரபு ஆண்களுக்கே உரித்தான வெள்ளை அங்கி, கறுப்புக் கயிறு சுற்றப் பட்ட தலைப்பாகையுடன் மனிதர்களைக் காண்பது அரிதாகத்தான் உள்ளது.

இங்கு பதினெட்டு வயது முடிந்து விட்ட ஆண்களுக்கு, ராணுவத்தில் சேர்ந்து பணிபுரிவது (drafting) கட்டாயச் சட்டமாக இருக்கிறது. "ஏழையோ பணக்காரரோ, படித்தவரோ படிக்காதவரோ, பதினெட்டு வயது பூர்த்தியாகிவிட்டால், அவர்கள் ராணுவத்தில் சேர்வதற்கான கடிதம் வீடு தேடி வந்துவிடும். ஒரு குழந்தை பிறந்த உடனேயே அரசாங்கத்தில் அது பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்படுவதால், டாணென்று லெட்டர் வந்துவிடும். ஏமாற்றி ஒளியப் பார்க்கலாம் என்பதெல்லாம் நடக்காத விஷயம். குடும்பத்துக்கு ஒரே பிள்ளை அல்லது சீக்காளி என்றால், ராணுவச் சேவையிலிருந்து விலக்கு அளிக்கப்படும். மற்றபடி அவரவர் படிப்புக்கு ஏற்றவாறு ராணுவத்தில் வேலை ஒதுக்கப்படும். ஏதேனும் காரணத்துக்காக ஒருவர் வெளி நாட்டுக்குப் போய் சில வருஷங்கள் கழித்துத் தாய்நாட்டுக்குத் திரும்பினால்கூட, கட்டாய ராணுவப் பணியை ஏற்க வேண்டும். முப்பது வயதுக்கு மேற்பட்டவர் என்றால், மாஜிஸ்ட்ரேட்டிடம் சர்டிஃபிகேட் வாங்கி விலக்கிக் கொள்வது சாத்தியம். ராணுவச் சேவைக்குச் செல்லாமல் 'டிமிக்கி' கொடுப்பதாகத் தெரியவந்தால், அவருக்கு வண்டியோட்டும் உரிமம், தொலைபேசித் தொடர்பு போன்ற அத்தியாவசியமான விஷயங்கள் ரத்து செய்யப்படுவதோடு, வேலை, வீடு கிடைப்பதுகூட ரொம்பக் கஷ்டமாகிவிடும், அரசை ஏமாற்ற யாரும் முனைவதில்லை" என்றார் பாப் நீளமாக!

அமெரிக்க டாலருக்கு எகிப்தில் மதிப்பு அதிகம் என்பதால், கள்ளச்சந்தையில் மாற்றி சில டூரிஸ்டுகள் கூடுதலாய் பவுண்டுகளைப் பெற முயற்சிப்பார்களாம். ஆனால் அப்படிச் செய்யும்போது மாட்டிக் கொண்டுவிட்டால், விற்பவர், வாங்குபவர் இரு சாராருமே கம்பி எண்ணுவது உறுதி!

எகிப்தில் பெட்ரோல் விலை லிட்டருக்கு ஒரு பவுண்டுதான். அதாவது,

பிரமிட் தேசம்-7

நகரம்!

நம்மூர்க் கணக்குக்கு ஏழு ரூபாய்! பலர் கார் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் புதிய வண்டிகள் அடிக்கடி வாங்கும் அளவுக்குப் பொருளாதார வசதி இல்லை என்பதால், சாலைகளில் நசுங்கி, வர்ணமிழந்து, புழுதி படர்ந்த பழைய வண்டிகளையே அதிகம் காண முடிகிறது.

ஒரு சில தனியார் கல்லூரிகளைத் தவிர, அரசாங்கமே பல தொழில்நுட்ப, மருத்துவக் கல்லூரிகளை நடத்துவதால், அவற்றில் இலவசமாய்ப் பட்டம் பெற்று வெளி வருபவர்கள், அரசிடமே வேலைக்குச் சேர்ந்து



பணி புரிய வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு அரசாங்கத்துக்கு இருக்கிறது. அதனால் டாக்டர், என்ஜினியர் போன்றவர்களுக்கு மாதச் சம்பளம் அதிகபட்சம் அமெரிக்க டாலர் 200 (ரூ.9,000)தானாம்! "பல சந்தர்ப்பங்களில் வண்டி ஓட்டுனருக்கும் டாக்டருக்கும் ஒரே மாதிரியான வருமானம்தான் என்பதால், இங்கு புதிதாய் கார் வாங்குவது, ஆடம்பரமாய் இருப்பது என்பதெல்லாம் நடக்காது" என்று பாப் கூறியதை நம்ப கஷ்டமாக இருந்தது.

கெய்ரோவை 'உறங்காத நகரம்' என்று சொல்வது உண்மை என்பதுபோல, கடைகளெல்லாம் இருபத்தி நான்கு மணி நேரமும் திறந்திருந்தன. எல்லாத் தெருக்களும் ஜகஜ்ஜோதியாய் விளக்கு வெளிச்சத்தில் மின்னுவதையும், திருவிழா போலக் கூட்டம் கூட்டமாய் மக்கள் சென்று கொண்டிருப்பதையும், பார்க்க முடிந்தது! "கெய்ரோ, டூரிஸ்டுகள் அதிகம் வந்துபோகும் நகரம் என்பதால் கடைகளை மூடும் பழக்கமே கிடையாது. இங்கு எந்த நாட்டைச் சார்ந்த பெண்ணும் தனியாய் இரவில் வெளியே சென்றுவரலாம், வெரி வெரி ஸேஃப்" என்றார் பாப், தாய்நாட்டுப் பெருமை குரலில் வெளிப்பட!

மூன்றாம் நாள் காலை ஐந்தரை மணிக்குத் தயாராகி பெட்டிகளுடன் கெய்ரோ விமானக்கூடத்துக்கு வந்த எங்கள் குழு, அங்கிருந்து 'எகிப்து ஏர்' விமானம் மூலம் 'லூக்சர்' (Luxor) என்ற நகர் வழியாக, தென்கோடியிலுள்ள அஸ்வான் நகரத்தை வந்தடைந்ததும், நான்கு நாட்கள் 'நைல் நதி உலா' தொடங்கியது.

'நைல் நதி தந்த பரிசு' என்று அழைக்கப்படும் எகிப்து, கடந்த ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாய், அந்த நதியை ஒட்டியே தன் வரலாற்றை வளர்த்துக் கொண்டிருப்பது உலகமறிந்த விவரம்! உலகிலேயே நீளமான - 6,695 கி.மீ - நைல், விக்டோரியா ஏரியுள்ள உகாண்டாவிலும், எதியோப்பியாவிலும் வெள்ளை, நீல நைல் நதிகள் என்று அறியப்பட்டு, சூடானிலுள்ள கார்டூம் (khartoum) அருகே இணைந்து, நூபியன் பாலைவனத்தைத் தாண்டி தன் பயணத்தை எகிப்தில் தொடர்ந்து, வடக்கே மத்திய தரைக்

சிவசங்கரி

கடலில் கலக்கிறது. பழைய நாட்களிலிருந்தே வடக்கே மெம்ஃபிஸ் நகரத்திற்கும், தெற்கே அஸ்வானுக்கும் இடைப்பட்ட பகுதி நைல் பள்ளத்தாக்கு என்று அறியப்படுகிறது. டெல்டா, பள்ளத்தாக்குப் பகுதிகள் எகிப்து நாட்டின் நிலப்பரப்பில் வெறும் நான்கு விழுக்காடுதான் என்றாலும், மொத்த ஜனத்தொகையில் தொண்ணூற்றைந்து விழுக்காடு, நைல் நதியைச் சார்ந்துள்ள இப் பகுதிகளில்தான் அன்றும் இன்றும் வசித்து வருகிறது.

நைல் நதியில் வெள்ளம் வடிந்த பிறகு அதில் அடித்து வரப்படும் வண்டல் மண்ணில் பயிர் செய்யும் அவசியம் காரணமாய், கரைகளை ஒட்டியே ஆதி நாட்களில் துவங்கி குடியிருப்புக்களும், எகிப்தியக் கலாசாரமும் தோன்றி வளர்ந்தன. நைல் நதிப் பள்ளத்தாக்கு பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வெவ்வேறு அரசபரம்பரையினரால் ஆளப்பட்டபோது, ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியே தெய்வங்கள் தோற்றுவிக்கப்பட்டு, வழிபாட்டுக்கு உரியனவாயின. காலப் போக்கில் பிரதேசங்கள் சில ஃபெரோக்களின் ஆளுமையின்கீழ் ஒருங்கிணைந்தபோது, அரசரின் விருப்பத்திற்கேற்ப சில தெய்வங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன; வேறு சில, தங்கள் தனி அந்தஸ்தை இழந்து இன்னொரு தெய்வத்தோடு இணைக்கப்பட்டதும் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது! உதாரணத்திற்குப் பழைய அரச பரம்பரையினரால் முக்கியக் கடவுளாக வழிபடப்பட்ட 'ரா' - சூரியக் கடவுள் - புதிய அரச பரம்பரையில் 'அமுன்' வழிபாட்டில் சேர்க்கப்பட்டு 'அமுன்-ரா' ஆனதைச் சொல்லலாம்.

சூடான் எல்லையை ஒட்டியுள்ள நூபியா பாலைவனம், ஆதியில் தனி நாடாகத் திகழ்ந்துள்ளது. 'நூபியாவின் தொன்மை பத்தாயிரம் வருஷங்களுக்கும் முந்தையது என்பதால், எகிப்தின் கலாசார வரலாறு அங்கிருந்துதான் துவங்கி வளர்ந்தது'' என்று கூறும் ஆய்வாளர்களும் இருக்கிறார்கள். நூபியா பாலைவனத்தில் கண்டெடுக்கப்பட்ட சூரிய நாட்காட்டி (Solar Calendar) உலகிலேயே பழைமையானது என்பது, அவர்கள் கருத்து. ஆப்ரிக்காவிலிருந்து எகிப்துக்கு அடிமைகள், தந்தம், மசாலாக்கள், இத்தியாதிகளைக் கொண்டுவரும் பாதையாக (Corridor to Africa) அந் நாட்களில் எகிப்தியர்கள் நூபியாவைப் பயன்படுத்தியுள்ளனர். ''உலகப் பேரழகி கிளியோபாட்ரா, பிறப்பில் நூபியர், இங்குள்ள வாடி ஹய்ஃபா (Wadi Haifa) என்ற கிராமத்தினருகில் பிறந்தவர் என்று ஒரு கருத்து உண்டு'' என்றார் பாப்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் நைல் நதியில் 1902-ம் ஆண்டு ஒரு அணை உருவானபோது, அப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த நூபியர்களின் பல ஆயிர வருஷ வாழ்க்கைமுறை மாறிப் போனது. மீண்டும் ஜனாதிபதி நாஸரால் இன்னொரு பிரம்மாண்டமான 'ஹை டாம்' (1960-71) கட்டப்பட்டபோது, நாஸர் ஏரி உண்டான இடத்தில் வசித்துவந்த சுமார் எட்டு லட்சம் நூபியர்களில் பலர், அஸ்வானைச் சுற்றி தங்கள் குடியிருப்பை மாற்றிக் கொள்ள, மற்றவர்கள் சூடானில் குடியேறியதாகச் சொல்லப்படுகிறது.

அஸ்வான் அணை கட்ட நாஸர் துணிந்து போராடியது ஒரு சுவையான வரலாறு.

(தொடரும்)

''அவரு ஒரு நிரபராதின்னு எப்படி அவ்வளவு சரியா சொல்றீங்க?''

''பின்ன... போலீஸ் கைது பண்ணி கோர்ட்டுக்கு அழைச்சிக்கிட்டு போகும்போது சிரிக்காம தலை குனிஞ்சிக்கிட்டே போறாரு பாருங்க!''

- யு. அரசு



புத்தகம்தான் சொத்து!



மனிதர்கள்

"அசோக்குமார் படத்தில் நடித்த எம்.கே. தியாகராஜ பாகவதர் ஃபோட்டோவில் இருந்து அந்நியன் விக்ரம் ஃபோட்டோவரை அனைத்தும் என்னிடம் இருக்கின்றது" என்று விளம்பர பாணியில் சொல்கிறார் ஜெயபாபு. இவர் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பழைய புத்தகங்கள், வார இதழ்கள், பழம் பெரும் தலைவர்கள், நடிகர்களின் அரிய புகைப் படங்கள், போஸ்டர்கள்... என தேடித்தேடி சேகரித்து பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகின்றார்.

"இது என்ன புதுவிதமான கலெக்ஷன்...?" என விசாரித்தோம்.

"அந்தக் காலத்திலே குண்டூசி பத்திரிகை படுபிரபலம்! அப்பா சீனிவாசன் அந்த பத்திரிகையிலே தொடர்ந்து எழுதிக்கிட்டிருந்தார். ஸ்டேஷனரி கடையிலே வேலை பார்த்த நேரம் போக எப்பவும் குண்டூசி ஆஃபிசில்தான் இருப்பார். அப்போதான் அவருக்கு இதுமாதிரி கலெக்ஷன் பண்ற ஐடியா வந்திருக்கணும். குண்டூசி உள்பட பேசும் படம், கலை, பொம்மை, சினிமா கதிர், எம்.ஜி. ஆர். நடிகர் சங்கத் தலைவராக இருந்த போது நடத்திய 'நடிகன் குரல்', டைரக்டர் ஸ்ரீதர் நடத்திய 'சித்ராலயா' போன்ற தமிழ்ப் பத்திரிகைகளையும், 'ஃபிலிம் புல்லட்டின்' உள்பட பல்வேறு ஆங்கிலப் பத்திரிகைகளையும் சேகரித்தார்.

அப்பாவைத் தொடர்ந்து எனக்கும் இதில் ஆர்வம் ஏற்பட்டது. அப்பா பொழுதுபோக்காகச் செய்ததை, நான் இலட்சியமாகவே தொடர்ந்தேன். தியாகராஜ பாகவதருடன் எம்.ஜி.ஆர். இரண்டு படங்களில்தான் நடித்துள்ளார். இந்த படங்களின் ஸ்டில் யாரிடமும் கிடையாது. என்னிடம் மட்டும்தான் இருக்கிறது. இதுபோன்ற விஷயங்களைச் சேகரிக்க நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இதுபோல நிறைய அரிய படங்கள் என்னிடம் உள்ளன.

ஒரு முறை திருச்செந்தூரில் உள்ள ஒருவரிடம் எம்.ஜி.ஆரின் அரிய புகைப் படங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டு ஓடினேன். கடைசியில் பார்த்தால் இரண்டு, மூன்று பாட்டுப் புத்தகங்கள் மட்டுமே வைத்திருந்தார். இதுபோல காசைச் செலவழித்து எதிர்கொண்ட ஏமாற்றங்கள் நிறைய.

கலைவாணர், தியாகராஜ பாகவதர், கே.பி. சுந்தரம்பாள் போன்றவர்களை பற்றி நூல் எழுதியபோது, நான்தான் பல வகைப் படங்களையும் அதற்காகக் கொடுத்தேன். வார இதழ்களில் வருகின்ற சிவாஜி, எம்.ஜி.ஆர். பற்றிய கட்டுரைகளுக்கும் நான் புகைப்படங்கள் கொடுக்கிறேன். என்னிடம் இப்போதைய இதழ்களும், திரைப்பட ஸ்டில்களும் உள்ளன. இன்னமும் என் சேகரிப்புப் பணி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

என் பிள்ளைகளுக்கு நான் சேர்த்து வைக்கிற மிக பெரிய சொத்து என்னுடைய இந்த கலெக்ஷன்தான்!" என்கிறார் பெருமையுடன்.

- பாலா



'சந்திரமுகி' ஹீரோயின் சிம்ரன் என்றாகிவிட, இளமைக்காக மும்பை ஹீரோயின்களுக்கு வலை வீசப்படுகிறது. ஐஸ்வர்யா ராய் (அ) கரீனா கபூர் போன்ற 'பள பள' மீன்கள் சிக்கலாம் எனத் தெரிகிறது.

எப்பொழுதும் சோர்வாகவே காணப்படும் கண்களை 'பளிச்' ஆக்க தினமும் மருத்துவர்கள் ஆலோசனைப்படி பயிற்சிகளை மேற்கொள்கிறார் சோனியா அகர்வால்.

"எந்தச் செய்தியானாலும் தயவு செய்து என்னையோ என்



தந்தையையோ கேட்டு விட்டுப் போடுங்கள்" என உருக்கமான வேண்டுகோளை பத்திரிகையாளர் முன் வைத்திருக்கிறார் ஸ்னேகா.

கமலின் அடுத்த படத்தில் அபிராமிக்கு மீண்டுமொரு வாய்ப்பு கிடைக்கவிருக்கிறது.

தற்போது மும்பையில் பிரபலமாகயிருக்கும் அத்தனை நடிகைகளும் கோலிவுட் பார்வையில் பட்டாலும், துரதிர்ஷ்டம் காரணமாக இஷா கோபிகரை யாரும் சீண்டவில்லையாம். இதை இஷாவே தமது திரையுலக நண்பர்களிடம் சொல்லி வேதனைப் பட்டிருக்கிறார்.



மும்பையிலுள்ள ஆசிரியை ஒருவர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கினையடுத்து, இனி 'A' சான்றிதழ் வாங்கிய படங்களின் காட்சிகளோ அல்லது பாடல்களோ, டீ.வியில் ஒளிபரப்ப தடைவிதிக்கப்படுவதற்கான வழிமுறைகள் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

தங்களுக்கு சினிமாவில் வாய்ப்புகள் மறுக்கப்படுகிறது என்று சின்னத்திரை நடிகர் நடிகைகள் குமுறும் நேரத்தில், வெள்ளித்திரைக்கு ப்ரமோஷன் ஆகியிருக்கும் டீ.வி இயக்குனர்களும் இவர்களைக் கண்டுகொள்வதில்லை. பிரபல ஹீரோ, ஹீரோயின்களைத் தேடித்தான் இவர்களும் செல்கின்றனர்.



இஷாமீது இஷ்டமில்லை!



பிரசாந்துடன் எந்தப் படத்திலும் நடிக்காமலே அவருடன் தனியாக போட்டோசெஷன் நடத்தி, பத்திரிகைகளுக்கு விநியோகித்து விளம்பரம் தேடியிருக்கிறார் நமீதா! தமிழ் சினிமாவில் இதுபோன்ற அணுகுமுறை முற்றிலுமே புதுசு.

- கண்



மனிதர்கள்

வாடிய பயிரை...

''அறுபது வயதுக்கு
மேற்பட்டவர்களே
ஆறு வயதுக்கு உட்பட்டவர்களே
உங்கள் தேவைக்கு அணுகவும்.''

''உழை - உழைத்தும்
உணவில்லையேல் வா!''

சென்னை எல்லிஸ் ரோட்டில் ராமாண்டியின் பிளாட்பாரக் கடையில்தான் இந்த வாசகம்.

வித்தியாசமாகப் படவே, அவரை விசாரித்தோம். அதாவது, அறுபது வயதினை எட்டிய ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கப்பெற வேண்டிய அன்போ, ஆதரவோ பெரும்பாலானோர்க்குக் கிட்டுவதே இல்லை. இந்த விரக்தியில் வீட்டை விட்டு வெளியேறிய, உழைத்துக் களைத்த வயதானவர்களுக்கு இங்கு உணவு உண்டாம். அதே போன்று ஆறு வயதுக்குட்பட்ட ஏழை மற்றும் அனாதைக் குழந்தைகளுக்கு உணவளித்து ஆதரவளித்து வருகிறார் ராமாண்டி.

''பசியால யாரும் முகம் வாடினா எனக்குப் பொறுக்காது'' என்று பேச ஆரம்பித்த ராமாண்டி, ''இதே மெட்ராஸ்ல ஒரு ஏழைப்பட்ட குடும்பத்துலதான் பொறந்தேன். பத்தாவது படிச்சிட்டு இருந்தப்போ, ஏதோ ஒரு வேகத்துல வீட்டை விட்டு வெளியே வந்துட்டேன். ஒரு வேளை சோத்துக்கு நான் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமில்லீங்க. வறுமை என் வாழ்க்கையில் கோரத்தாண்டவமே ஆடிச்சி. அப்போ ஒரு கம்பெனில டர்னர் வேலை கிடைச்சது'' என்றார் சற்று நிதானித்தார். பிறகு ''திடீர்னு எங்கப்பா செத்துப் போயிட்டதா சேதி வந்துச்சு. ஆனா பிணத்தை எடுக்கக் கூட கையில பைசா இல்ல. அன்னைக்கு தெருத் தெருவா போயி பிச்சை எடுத்துத்தான் காரியமெல்லாம் செஞ்சேன். அன்னிக்கு என் மனசு பட்டபாடு.... அப்போ முடிவு செஞ்சேன் - என்னை மாதிரி ஏழை பாழைங்களுக்கு உதவணும்னு!''

ராமாண்டி ஒரு நாளைக்கு குறைந்தது எட்டுப் பேருக்காவது இலவசமாக சாப்பாடு போடுகிறார்.

''என்னோட நண்பர்கள் சொன்னதால இந்த சோத்துக்கடையை ஆரம்பிச்சேன். இந்த மாதிரி உதவ ஆரம்பிச்சேன். பண நஷ்டம் வந்தாலும் கவலைப்படுறது இல்ல. ஆனா ஆரம்பத்துல என் மனைவி - குழந்தைங்க இதை ரொம்ப ஆதரிச்சாங்க. பின்னால் என்னை ஊதாரின்னு சொல்லி ஒதுக்க ஆரம்பிச்சாங்க. அதனால குடும்பத்தை விட்டு வந்துட்டேன். ஆக, இன்னைக்கு நானும் ஒரு அனாதைதான்!'' சோகமாய் சிரிக்கிறார் ராமாண்டி.

- முத்து

அன்பான வேண்டுகோள்



சிவானந்த குருகுலத்தில் இருக்கும் சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளும், முதியோர்களும் இந்த வருடம் தீபாவளி திருநாளை மனமகிழ்ச்சியுடன் கொண்டாட பொது மக்களிடம் உதவிக்கரம் நீட்டுகிறோம். பொதுமக்கள் அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் இக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ அல்லது புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்பு, எண்ணெய், சீயக்காய், அரிசி, கோதுமை போன்ற தானிய வகைகளாகவோ நன்கொடை கொடுக்கலாம்.

அன்புடன் அளிக்க விரும்பும் நன்கொடைத் தொகையினை காசோலையாகவோ / டிராப்டாகவோ **"சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்"** என்ற பெயரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

பொது செயலர்,
சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,
நெ.20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம்,
சென்னை - 600 059.
Ph: 2239 1078 / 2239 2444
FAX NO.2279 1017

சென்னையில் உள்ள அன்பர்களின் வசதிக்கு:


M/S.பிரகாஷ் டிரேடிங் கம்பெனி
நெ.156, தம்பு செட்டித் தெரு,
சென்னை - 600 001.
Ph: 2534 2803

சிவானந்த குருகுலம், காட்டாங்கொளத்தூர்
தொலைபேசி எண்கள்: (உள்ளூர்)954114 252345, 251815
(வெளியூர்) 04114 252345, 251815
Email:sivanand@md2.vsnl.net.in / sivanandaseva10@hotmail.com
web:www.sivanandagurukul.org&www.buildhope.org

பின்குறிப்பு: காசோலையாகவோ / டிராப்டாகவோ "சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்" என்ற பெயரில் தான் அனுப்ப வேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறோம். நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.
I.T.EXEMP DIT (E) 2939(88)86-87 DT.17/7/2003

வீ.விஷ்ணுகுமார்

கசடற



பட்டாசு
தீக்குச்சி
வாசங்களில்
சிறார்களின்
வியர்வை வாசம்

உணவக மேசையின்
பளபளப்பில்
பிஞ்சு விரல்
ரேகைகள்

பட்டறைகளின்
சட்டைகளுக்குள்
குட்டிக்குட்டி
தேகங்கள்

தேனீர்க் கோப்பைகளில்
மிதந்தபடி
பால்வாச முகங்கள்.

செருப்புகளின்
மினுமினுப்பில்
சிறு குருத்துகளின்
களைப்பு.

உயர் கட்டடங்களின்
பின்னணியில்
பாலக முதுகெலும்புகள்.

கற்கின்றனர் கசடற
அநேகக் குழந்தைகள்
வயசுக்கு மீறிய பாடங்களை.

ஆசானாய்
வறுமை.
பள்ளிக்கூடமாய்
சமுதாயம்.



கோடுகள்

சேவையின் பெருமைக்கு
அணிலின் முதுகில்
இராமனின் கோடுகள்

பாவையர் எல்லையைப்
பறைசாற்ற வைத்திடும்
இலட்சுமணன் கோடு.

சாவையும் சிவமெனச்
சங்கல்பம் செய்திடும்
சாம்பலின் கோடுகள்.

யாவுமே மண்ணினுள்
அடங்கிடும் என்றோதும்
திருமண் கோடுகள்.

இல்லறத்தின் செம்மை
உணர்த்திச் செல்லுமிரு
இணை கோடுகள்

துணை வராது விலகி
விவகாரத்தில் முடியும்
துயரக் கோடுகள்

விடுதலையின் சின்னமாய்
இன்னமும்தான்
இந்நாட்டில் ஒளிருது
வறுமைக்கோடு.

கே.பி.பத்மநாபன்

அன்னம்

அநாதை

ஒரு பக்க கதைகள்!

அலுவலகத்திலிருந்து நான் வீடு திரும்பும்போது, தெருமுனையிலேயே எனக்காகக் காத்திருந்தாள் கமலா - என் மனைவி.

"உங்க அப்பா வந்திருக்கார்!" என்றாள் பதற்றமாய்.

எனக்குத் திகைப்பு.

எனக்கு எட்டு வயதானபோது, யாரோ ஒரு பெண்ணுடன் வீட்டைவிட்டு ஓடியவர்.

பிள்ளைகள் நால்வரையும் ஆளாக்க அம்மா பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இப்போது அனைவரும் நன்றாக செட்டிலாகி, நிம்மதியாய் இருக்கும் நேரத்தில் இருபத்திரெண்டு வருடங்கள் கழித்து வந்திருக்கிறார்.


"உங்க அம்மா அவரை உட்கார வச்சு சாப்பாடு போடறாங்க" கமலா சொல்லவும் எனக்குக் கோபம் பீறிட்டது.

குடும்பத்தை நிர்க்கதியாக விட்டுச் சென்ற மனிதன் மீது, அம்மாவுக்கு இன்னமும் பாசம் இருக்கிறதா? அம்மா மீதும் கோபம் வந்தது.

வேகுவேகு என்று நடந்து வீட்டுக்கு வந்தவன், உள்ளே நுழைய முற்பட்டபோது, அப்பாவிடம் அம்மா சொல்லிக் கொண்டிருந்தாள்.

"உங்களுக்கு ஞாபகம் இருக்கோ இல்லையோ, இன்றைக்கு என் மாமனார், உங்க அப்பாவோட திதி. சொந்தம் பந்தம் யாருமில்லாத பண்டாரம் ஒருத்தருக்கு சாப்பாடு போட்டு அனுப்புவது என் வழக்கம்!" ○





இல்லை

அந்த அநாதை ஆசிரமத்தின் நிர்வாகி குருராஜின் முன் வ அமர்ந்தான் பரகராமன். முகத்தில் பலநாள் தாடி, சோகம் கப்பிய முகம்.

குருராஜ், "சொல்லுங்க" என்றார்.

"ஐயா, உங்களுக்குத் தெரியாததில்லை. நானும் என் மனைவியும் அடிக்கடி வருவோம். ஆனா எங்களுக்குக் குழந்தை பாக்கியம் இல்லேன்னு தெரிஞ்ச பிறகும் ஏனோ தத்து எடுக்கணும்னு தோணலை..." என்று நிறுத்தினார். "ஆனா, நாங்க காதல் திருமணம் செஞ்சுகிட்டதால சொந்தபந்தங்கள் எங்களை விலக்கி பல வருஷம் ஆச்சு. விபத்துல அவ போய்ச் சேர்ந்த பிறகு, அநாதை மாதிரித்தான் ஃபீல் பண்றேன்."

சற்று நேரம் அமைதியாக இருந்த நிர்வாகி, "மன்னிக்கணும்! பெற்றோர் இருவரும் இருந்தாத்தான் தத்துக் கொடுக்கலாம்ங்கிறது விதி" என்றார்.

"ஐயா! எனக்கு வேறு திருமணம் செஞ்சுக்கிற மனநிலை இல்லை! அப்போ கடைசிவரைக்கும் நான் அனாதையாகவே இருக்க வேண்டியதுதானா?" - பதறினார் பரமசிவம்.

"யோசியுங்கள்.... எல்லாத்துக்கும் ஒரு வழி உண்டு!" என்றார் நிர்வாகி.

வீடு திரும்பிய பரமசிவத்துக்கு உறக்கம் வரவில்லை.

மறுநாள் மீண்டும் ஆசிரமத்துக்கு வந்த பரமசிவம், குருராஜை வணங்கினார். "ஐயா! வழி தெரிஞ்சாச்சு! என் வேலையை ராஜினாமா செய்திட்டு ஆசிரம ஊழியனா வந்துடறேன். இனி நான் அநாதை இல்லை. எனக்கு ஏகப்பட்ட பிள்ளைகள்!" ○

பி.மாரிமுத்து

ஹலோ, இறைவா - 13

சிப்பிக்கு வெளியே முத்து!

கடலில் முத்தெடுப்பது பற்றிப் படித்திருப்பீர்கள். ஆழ்கடலிலிருந்து சிப்பிகளை எடுத்து வந்து, அவற்றைத் திறந்து முத்தெடுப்பார்கள். அது பற்றிய கதையோடு இந்த வாரம் துவங்குவோம்.

ஒரு சிப்பி, முத்துக் குளிப்பவர்களிடம் சிக்கிக் கொள்ளக் கூடாது என்று ஓர் உபாயம் செய்தது. தன்னிடமிருந்த முத்தை எடுத்து, முத்துக்குளிப்பவரின் கண்களுக்குத் தெரியும் வகையில் ஒரு சிறு பாறையின் மீது வைத்தது. பிறகு அந்தப் பாறைக்குக் கீழே சென்று ஒளிந்து கொண்டது; வந்து வந்து பார்த்த வண்ணம் இருந்தது.

முத்துக் குளிப்பவர் ஒருவர் அந்த பாறைக்கு அருகே வந்தார். அவரது கை அந்தப் பாறையின் அடிப் பகுதியைத் துழாவியது. சிப்பி சிக்கியது.

ஆம்! அவர் கண்ணுக்கு பாறை மேலிருந்த முத்து தெரியவில்லை. முத்தில்லாத சிப்பியைத் தேடிப்பிடித்துச் சென்றார்.

ஏன் அவர் கண்ணுக்கு முத்து தெரியவில்லை? 'முத்து என்றால் அது சிப்பிக்குள்தான் இருக்கும். நம் வேலை முத்துச் சிப்பி சேகரிப்பது' என்று முத்துக் குளிப்பவரின் மனத்தில் பதிந்து விட்டது. அதை அவரால் மாற்றிக் கொள்ள முடியவில்லை.



நம்மில் பெரும்பாலோர் அப்படித்தான் இருக்கிறோம். நம் எதிரில் இருக்கும் முத்து - அதாவது நல் வாய்ப்பு - நமக்குத் தெரிவதில்லை.


எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர். ஊர் ஊராகச் சுற்றும் மார்க்கெட்டிங் வேலை. "ஓரிடத்தில் உட்கார்ந்து வேலை பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! காலையில் ஆற அமர அலுவலகம் கிளம்பிப் போகலாம். மதியம் உணவு இடைவேளையில் நிதானமாகச் சாப்பிடலாம்! மாலையில் கிளம்பி வீட்டுக்குச் சென்றால், அக்கடாவென்று குடும்பத்தினருடன் டி.வி பார்த்துக் கொண்டு பொழுதைப் போக்கலாம்!" என்றெல்லாம் புலம்பி வந்தார்.

ஒரு கட்டத்தில் மிகுந்த பிரயாசைப் பட்டு, அலுவலகப் பணிக்குத் திரும்பினார். வாழ்க்கையில் கிடைக்காத அனைத்தும் கிடைத்து விட்டதாக மகிழ்ச்சி அடைந்தார்.

ஆனால் இந்த சந்தோஷம் கொஞ்ச நாள்தான்! முகம் வாடி, சோர்ந்து காணப் பட்டார்!

காரணம் என்னவாம்?


"மார்க்கெட்டிங் பிரிவில் வெளியூர்ப் பயணங்கள் சென்றதால், நிறைய அலவன்ஸ் கிடைத்தது. கிட்டத்தட்ட தனி



சம்பளமாகவே அது இருந்தது. ஆனால் இப்போது அது நிறுத்தப்பட்டுவிட்டது. குடும்பத்தில் பணப் பற்றாக்குறை ஏற்படு கிறது" என்று புலம்பினார்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், நம்மில் பலருக்கு நம் கண் முன் இருக்கும் வாய்ப்புகள் தெரிவதில்லை. இன்னும் சிலருக்கோ தாங்கள் அனுபவிக்கும் நல்ல விஷயங்களைக் கூட உணர முடிவதில்லை!

அந்த நண்பர், அலுவலகப் பணியிலுள்ள அம்சங்களை மனத்தில் பட்டிய லிட்டிருக்கிறார். ஆனால் வெளியூர் செல்லும் மார்க்கெட்டில் பணியிலுள்ள



பாதகங்களை மட்டும் கவனத்தில் எடுத்திருக்கிறார். இந்த எண்ணம் தவறான விஷயம்.

இந்த நிலை மாற வேண்டும்.

புதுமையான சிந்தனை இல்லை; புதுமையான செயல்பாடு இல்லை. அதாவது மிஷின் மாதிரி அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதைத்தான் ஆங்கிலத்தில் 'கண்டிஷன்ட் மைண்ட்' என்பார்கள்.

இந்த கண்டிஷன்ட் மைண்டை தகர்த்தெறிந்தால்தான் வாழ்வில் சாதனை புரிய முடியும்; சரித்திரம் படைக்க முடியும்.

நம்மில் பெரும்பாலோருக்கு நம் எதிரில் இருக்கும் முத்து - அதாவது நல் வாய்ப்பு - தெரிவதில்லை.

சரி, இந்த 'கண்டிஷன்ட் மைண்டை எப்படித் தகர்ப்பது? பிரார்த்தனையும், மனப்பயிற்சியும்தான் இதற்கு வழி!

ஆம்! இவை இரண்டையும் செய்தீர்களேயானால் புத்தி சாலித்தனத்தை வளர்த்துக் கொள்ள முடியும். எந்த ஒரு விஷயத்தைக் குறித்தும் தெளிவாகச் சிந்திக்க முடியும்; வித்தியாசமாக யோசிக்க முடியும். லட்சியத்தை அடைய முடியும்!

இந்தத் தருணத்தில் சுவாமி விவேகானந்தரின், அருள்மொழி ஒன்றைக் குறிப்பிடுவது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். "ஞானத்துடன் இணைந்த பக்தியோடு இறைவனை வழிபடுங்கள். உங்கள் பக்தியோடு, எப்போதும் விவேகத்தை இணைத்துக் கொள்ளுங்கள்."

உண்மையிலேயே நாம் பெரும் துன்பத்தில் இருக்கிற கணத்தில், நம்மால் இறைவனை நினைக்க முடியுமா? அது பற்றிய உண்மைச் சம்பவம் ஒன்றை இனி பார்க்கலாம்.

(அடுத்த வாரம் சந்திக்கிறேன்)

சுவாமி போதமயானந்தா



மெர்க்குரி மைனாவே

அன்புள்ள தோழமைக்கு,

எதையும் தெளிவாக சொல்லத் தெரியாது என்று என்னைச் சிலர் சொல்கிறார்கள். தெளிவு எங்கிருந்து பிறக்கிறது? தொடக்கம் எங்கிருக்கிறதோ அங்குதான் எல்லாமே பிறக்கிறது. தொடக்கம் முதற்கொண்டு தெளிவு உட்பட. தெளிவு மூர்க்கத்தை முறியடித்து முன்னால் பாய்ந்து வருகிறது. குண்டலத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் கமண்டலத்தின் வாசம் போல நிறைந்து நிற்கிறது. அரண்டு வழிகிறது. அதுவும் ஒருவித அழகுதான்.

காதல். எது காதல்? தெளிவிலிருந்து பிறப்பதா? அழகிலிருந்து பிறப்பதா? அழகுதான் தெளிவா? யோசித்துப் பார்க்கிறேன். அல்லது வெறும் அப்பம், வடை, தயிர் சாதமா? இப்பொழுதெல்லாம் நிறைய யோசிக்கிறேன். மெர்க்குரி மைனாவே, நான் உன்னைக் காதலிக்கிறேன் என்பதையாவது நீ புரிந்து கொண்டாயா? தெரியப்படுத்தினால் குண்டலத்திலிருந்து முகத்தில் சிறிது ஜலம் தெளித்து மூர்க்கம் களைவேன்.

என்றும் காதலுடன்


பாலகுமாரன்

இவர்கள்

படிமத்திலிருந்து ஒரு அரைப் பார்வை.

கற்றாழையின் விளிம்பில் ஒற்றைக் காலில் காத்திருக்கும் என் காதலிக்கு,

ஒரு ஊடகத்திலிருந்து ஊற்றெடுத்து வந்த சிறு பிரளயம் ஒன்று, நினைவுச் சுழலில் சுழன்று போய் வட்டத்தில் சதுரமாய் விழுந்துவிட்டது. தொன்மையியலின் தத்துவார்த்த பார்வை, தடாகத்தில் தத்தி, தத்திப் போகும் மறை கழண்ட ஒரு புங்க மரக் கரண்டியின் காதை அடியொற்றி இருப்பது புலனாகிறது.



சங்க இலக்கியத்தில் நான் உன் மீது கொண்டுள்ள காதலுக்கான மரபு வழிகளும், எதிர்மறை இயக்கவியலும் (instructionalism of philophitis), புலனுணர்ச்சியைச் சார்ந்தும் வரலாற்றின் வாய்ப்பாட்டில் வாய் புதைத்து அழும் ஒரு குழவிக் கல்லின் பச்சைக் கண்களில் (green eyes) சர்பத்தின் நிழலாய் படிந்திருக்கிறது. இது சாத்தியமா என்று நீ (you) கேட்கலாம். இது வெறும் பிதற்றலல்ல. பின் தொடர்ந்து வரும் நிழலின் நடு ஜாமம்(midnight) குருட்டுக் குரல்.

என் அப்பழுக்கில்லாத காதலையும், ஓடை நீர் போன்ற தெளிவான (clear) தத்துவார்த்தப் பார்வையையும் நீ கட்டாயம் விரும்புவாய் என்று நம்பிக்கை எனக்குண்டு.


காதலுடன் **ஜெயமோகன்**

தொட்டதும் சுட்டதும்

என் இனிய இயந்திரா,

இன்று இண்டர்நெட் ப்ரௌஸ் செய்ய மாட்டேன் என்று அடம் பிடிக்கிறது எனது மௌஸ். மானிட்டரை மத்துக் கரண்டியால் இரண்டு தட்டி தட்டியவுடன் சரியாகிவிட்டது.

ஹார்மோன்கள் ஹாய் சொல்லும்பொழுது, காதல் மே ஐ கமின் என்று உள்ளே நுழைகிறது. இதற்கும் ஹிப்போ பொடமஸின் நுரையீரலில் இருக்கும் ஒருவித மோர் மிள காய் போன்ற சிலிக்கன் செல் லுக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்க வேண்டும்.



கொரியரில் வந்து சேர்ந்ததில் எனக்கு பிடித்த பெரிய கவிதையொன்று. பாதியை டெலிட் பண்ணி விட்டேன். படித்துப் பார்.

சிலிக்கான் சிட்டுகளின்
மாலை நேர
தியான்கள்.

சரி...

அந்த ஜோக்கிற்கான விடை - 'நான் உன்னைக் காதலிக் கிறேன்.'

சுஜாதா.com

காதலித்தால்...

என் பழைய பனை ஓலையிலிருந்து சில குச்சிகள்...

மினுக்கென்று மின்னும் மின்மினியே,

இதமாய் மிதந்து வருகிறது என் மின்னஞ்சல் மின்னல்.

ஆயிரம் வெட்டுக்கிளிகள் ஆர்ப்பாட்டமாய் என் ஆகாயத்தை நிரப்புகின்றன. அட, இன்று என்ன பௌர்ணமிகளுக்கு அந்தி நேர ஆப்டர்நூனா?

குடையிலிருந்து கம்பிகள் நழுவிப் போய் குப்பையில் விழுகின்றன. விழுந்த ஒவ்வொரு கம்பியும் தும்பியாக மாறி, துடிப்புடன் இறக்கை விரிக்கின்றன.

மின் விசிறி கூட இப்பொழுதெல்லாம் மின்மினி மின்மினி என்று உன் பெயரை உச்சரித்துத்தான், காற்றை உள்ளிழுத்து வெளியே கக்கிச் சுழல்கிறது.

அமிர்தாஞ்ஜன் தடவிக் கொண்டு உறங்குகிறது சிவப்பு சூரியனின் ஊதாக் கதிர்கள்.


மேகத்தில் என்ன கறுப்பாய்? என் காதலியின் சுண்டு விரல் 'மச்சத்தின் ஓரிஜனல் நகலா? தெரு விளக்குகளை யார் துடைத்து வைத்தது?

ஆரியமும் திராவிடமும் கலந்தது போதாது. கிரேக்கமும் இங்கிலாந்தும் இணைய வேண்டும். நெதர்லாந்தும் பாலஸ்தீனமும் பாசம் கொள்ள வேண்டும்.

நேசத்துடன் வைரமுத்து



13. சித்திரமேழி மல்லன்



விஷ்வக்ஸேனன்

பரம வைணவனென்று போற்றப்பட்டு, சீடனாகவே திருமங்கை மன்னனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவனும், சித்திர மேழிக் கடிகையின் மிகச் சிறந்த மல்லனும், மகாவீரன் என்று எதிரிகளாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டவனுமான பல்லவ நந்திவர்மனின் எதிர்பாராத வருகை, அங்கிருந்த சூழ்நிலையை அடியோடு ஸ்தம்பிக்கச் செய்தது.

புரவியிலிருந்து இறங்கிய நந்திவர்மன் அசாத்திய உயரத்துடனும், அதற்கேற்ற மல்லனின் திடமான உடலமைப்புடனும் தெரிந்தான். அவன் முழங்கை வரை மட்டுமே தெரிந்த வாள் வடுக்கள், அதற்கு மேல் அவனை காயப் படுத்தக் கூடிய வாள் வீரன் தமிழகத்தில் இன்னும் பிறக்கவில்லை என்பதை அறிவித்தன. ஈட்டிகளை விடக் கூர்மையாக ஜொலித்த அவன் விழிகள், ரதத்தினருகே நின்றவர்களை நோக்கிவிட்டு, ராஷ்டிர கூட வீரர் தலைவன் மீது தைத்து நிலைத்தன.

அவன் வலது கரம் உயர்ந்து பக்கவாட்டில் நின்ற பல்லவ உபதலைவனை நோக்கி நீண்டது. நீண்ட கரத்தின் சமிக்ஞையைப் புரிந்து கொண்ட உப தலைவன், வெண்ணிறப் புரவியை அணுகி, அதன் பக்கவாட்டில் தொங்கிய நீண்ட பேழையை இறக்கித் திறந்தான். அதனுள்ளிருந்தது அளவில் பெரிதான பெரும் போர் வில். கணைகளும் உடனிருந்தன. வெகு பவ்யமாக அவற்றை எடுத்த உபதலைவன், மன்னனின் நீட்டிய கரத்தில் அவற்றை வைத்தான்.

'பல்லவன் வில்லவன்' என்று பட்டம் பெறக் காரணமாயிருந்த அந்த பெரும் வில்லுடன் நின்ற நந்திவர்மனிடமிருந்து, அடுத்து நிதானமாக சொற்கள் உதிர்ந்தன.

''வீரர் தலைவனே, இன்னும் அரை நாழிகை கழித்து என் கண்ணில்படும் எந்த ராஷ்டிரகூடன் உடலிலும் உயிர் இருக்காது. அங்கே நிற்பவர்களைச் சிறை



மகுட வைரம்

செய்ய நினைப்பவர் மட்டும் நிற்கலாம்.''

அந்த வில்லைக் கண்டது முதல் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்ற வீரர் தலைவன், அடுத்த கணம் காற்றை விட வேகமாகப் பறந்தான். கீழே கிடந்தவர்கள் புரவிகளில் எறியப்பட்டு, புரவிகள் தலைதெறிக்கத் திரும்பி பிரதான சாலையை நோக்கிப் பறந்தன.

அரை நாழிகையில் சத்திரத்தின் முன் பகுதி வெற்றிடமாய் நின்றது.

போர்வில்லை உபதலைவனிடம் அளித்த நந்திவர்மன், பராந்தகனை நெருங்கினான். பராந்தகனை ஒருமுறை உற்று நோக்கிய நந்திவர்மன் முகத்தில், இனம் தெரியாத உணர்ச்சிகள் ஓடி மறைந்தன. பராந்தகன் கரத்திலிருந்த வாளையும் தன் இடையிலிருந்த வாளையும் ஒருமுறை கவனித்தவனுக்கு, அவை இரண்டும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவை என்பது கண நேரத்தில் புரிந்தது. அவன் இதழ்களில் முறுவலொன்றும் நெளிந்தது.

வலுவான தனது கரமொன்றை பராந்தகனது தோளின் மீது வைத்தவன், ''நீதான் அந்தப் பராந்தகனாயிருக்க வேண்டும். வா, நாம் உள்ளே சென்று அமர்ந்து பேசுவோம்'' என்று அவனை இலேசாக அணைத்தபடி வாயிலை நோக்கி நடந்தான்.

அனைவருமே விக்கித்துப் பேச்சின்றி நிற்க, இளவரசியை நெருங்கியதும் நந்திவர்மன் சற்று நின்றான். அவன் கூர்விழிகளில் ஓர் ஒளி பளிச்சிட்டது. அடுத்து அவன் செய்த காரியம், அனைவரையுமே ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது.

தன் வலிய கரங்களை ஒன்று சேர்த்து விழிகளை மூடிய நந்திவர்மன், மண்டியிட்டு குமுதவல்லியை வணங்கினான். மீண்டும் எழுந்தவன், ''பாண்டிய இளவரசியை முறையாக வரவேற்க சந்தர்ப்பம் இடந்தரவில்லை. மன்னித்து விடு மகளே'' என்றான் முறுவலுடன்.

திகைப்பில் உறைந்துவிட்ட குமுதவல்லியின் முகத்தில் பதற்றம் பரவியது. அவள் குரலிலும் அது ஒலித்தது. ''மன்னவா... இது முறையல்ல... முறையல்ல'' என்றாள் திணறியபடி. அவள் உடல் நடுங்கியது.

''நந்திவர்மன் முறை தவறினான் என்ற அபக்யாதி இதுவரை கிடையாது மகளே. எதை முறையல்ல என்கிறாய்?'' அவன் கேள்வி முறுவலுடன் வந்தது.

''தாங்கள் என் தந்தைக்கு இணையானவர். மகளே என்றும்

அழைக்கிறீர்கள். என்னை இப்படி மண்டியிட்டு வணங்குவது முறையா?''

நந்திவர்மன் முறுவல் இன்னும் விரிந்தது. ''மகளே! நான் வணங்கியது உன்னையல்ல'' என்றான் நிதானமாக.

''என்னையல்லவா?... பிறகு?''

''உன் பெயரை...''

''பெயரையா?'' - வியப்புடன் வந்தது இளவரசியின் கேள்வி. மற்றவர்கள் முகத்திலும் திகைப்பு பரவிக்கிடந்தது.

''ஆம் மகளே, என்னை சீடனாக ஏற்றுக் கொண்ட திருமங்கை மன்னனின் பட்டத்தரசியின் பெயரை நீ தாங்கி யிருக்கிறாய். அந்தப் பெயருக்குரியவரின் வயதையோ, உறவையோ நான் பார்க்க லாகாது. முதலில் வணங்க வேண்டியது என் கடமை.'' வெகு நிதானமான தொனியில் விளக்கினான் நந்திவர்மன்.

ஆழ்வாரையே குருவாகப் பெற்ற வனின் குருபக்தி எத்தகையதாயிருக்கும் என்பது புரிந்தது குமுதவல்லிக்கும், மற்றவர்களுக்கும்.

சத்திரத்துக் கூடத்தில் அனைவரை யும் அமரப்பணித்து தானும் அமர்ந்த நந்திவர்மனை நோக்கிய குமுதவல்லி, ''மன்னவா, நாங்கள் இங்கிருப்பதை அறிந்துதான் இங்கு வந்தீர்களா?'' என்றாள்.

''மகளே, நீ கொற்கையிலிருந்து கவர்ந்து வரப்பட்டதையும், சீன வணிகர் களை சந்திரகாந்தத்துடன் மகாராணி யிடம் அறிமுகப் படுத்தியதையும், தப்பு வதற்கு வகுத்த திட்டத்தையும் குணவர் மரது ஓலை மூலம் நேற்றுதான் அறிந் தேன்.''

''என்ன! குணவர்மர் தெரிவித்தாரா?''

''ஆம் மகளே. ஆழ்வாரின் சீடர்களுக் குள் உண்மையை மறைப்பதென்பதே கிடையாது. அவர் காஞ்சிக்கு வந்த அன்றே தாம் யாரென்பதைத் தெரிவித் தார். உங்களை மகாராணியிடமிருந்து மீட்கவே நான் உதயேந்திரபுரியிலிருந்து நேற்றிரவு புறப்பட்டேன். நான் செல்லும் பாதையில் முன்னதாக என் வீரர் இருவரை அனுப்பி வைப்பது என் வழக்கம். வீரர்கள் வந்து தெரிவித்ததும் இங்கு வந்தேன்''- விளக்கினான் நந்தி வர்மன்.

சற்று நேரம் மௌனம் நிலவியது

அருள்வாக்கு

''மக்களுக்குச் செய்வதே மஹே சனுக்குச் செய்வது'' என்று வெறும் வாய்ப் பேச்சாகச் சொல்லிக் கொண்டு, மஹே சனை மறந்து இப்போது கார்யங்களைப் பண்ணும்போது என்ன ஆயிருக்கிறது? தெய்வ ஸம்பந்தமில்லாமல் பணியைக் கத் தரித்து விட்டிருப்பதால், நல்ல குறிக்கோ ளோடு பண்ணுவதெல்லாமே அனர்த்தங் களைக் கொண்டுவந்து விடுகிறது.

பழைய நாளில் பக்தியால் தேசத்தில் கன்யாகுமாரியிலிருந்து காஷ்மீர்வரை எல்லா ஜனங்களும் ஏகோபித்திருந்ததால், வடக்கே கோயில் கட்டுகிறார்களா, தெற்கே கோயில் கட்டுகிறார்களா என்று சண்டை போடாமல், வடக்கத்திக்காரன் அங்கே.

பராந்தகன் மௌனத்தைக் கலைத் தான். ''மன்னவா, சோழ நாட்டிலும், பாண்டியர் எல்லையிலும் ராஷ்டிரகூடரின் அக்கிரமங்கள்...''

நந்திவர்மனின் கரம் உயர்ந்து பராந்த கனைத் தேக்கியது. ''நன்றாகவே அறி வேன். பராந்தகா, மகளே, சற்று கவன மாகக் கேளுங்கள். பெண்ணாகடத்துப் போர், விதிவசத்தால் நேரிட்ட சம்பவம். அதை எப்படியாகிலும் நானோ, சோழ மன்னரோ தவிர்த்திருக்க வேண்டும். தாமதமாகவே அதை உணர்ந்தேன் நான். அந்தப் போரில் மாண்டது சோழ மன்ன ரும், சோழர் பெரும்படையும் மட்டுமல்ல, முக்காலுக்கும் மேல் பல்லவர் படையும் தான். அதனால் காஞ்சி மண்டலத்தின் பாதுகாப்புக்கே நான் ராஷ்டிரகூடரை நம்பவும், அதை அவர்கள் சாதகமாக்கிக் கொள்ளவும் முற்பட நேரிட்டுவிட்டது. என் மகன் கல்வியும், பயிற்சிகளையும் முடித்து வந்து இளவலாக முடி சூடும் போது, தமிழகத்தில் அவனை எதிர்க்க மன்னர்களே இருக்கக் கூடாது என்று மகாராணி எண்ணுகிறாள். அதை ராஷ்டிர கூடர்கள் சாதகமாக்கிக் கொள்ள எண்ணு கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். தமிழகத்து மன்னர்களிடையே போர் ஏதுமின்றி, மக்கள் நிம்மதியாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன் நான்.''

''அதற்கு வழி இருக்கிறது'' என்றான்



தென்தேசத்துக் கோயில்களுக்கும், தெற்கத்திக்காரன் வடதேசக் கோயில்களுக்கும் போனான். இப்போதோ ராஜாங்கம் எந்த டாம் கட்டட்டும், எந்த ஃபாக்டரி வைக்கட்டும், உடனே அத்தனை ஸ்டேட்காரர்களும், தங்கள் தங்கள் ஸ்டேட்டில்தான் அதைக் கட்ட வேண்டும் என்று சண்டைக்கு ஆரம்பிக்கிறார்கள்.

எல்லோருக்கும் படிப்பு என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். நல்ல எண்ணத்தில்தான் செய்கிறார்கள். ஆனால், 'தெய்வ ஸம்பந்தமே இருக்கக் கூடாது; அப்படியிருந்தால் நம் ஸெக்யுலரிஸத்துக்கு (மதச்சார்பின்மைக்கு)க் களங்கமாய்விடும்' என்று நினைத்து வெறும் அறிவு வ்ருத்தியை மட்டும் படிப்பினால் உண்டாக்கித் தருகிறார்கள். இதனால் படிப்பறிவில்லாவிட்டால் ஸாது ஜனங்களாக இருக்கக் கூடியவர்களுக்கும், 'ஃபோர்ஜரி' மாதிரி அநேக தப்புத் தண்டாக்களையும், புத்திசாலித்தனத்தால் செய்யக்கூடிய அநேக ஒழுங்கீனங்களையும் கற்றுக் கொடுத்ததாகவே ஆகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

பராந்தகன்.

"என்ன வழி பராந்தகா?"

"மகாராணியை அவர்கள் போக்கிலேயே விட்டுவிடுங்கள்."

"விளக்கமாகச் சொல்."

"மன்னவா, ராஷ்டிர கூடர்கள் பலம் குறைந்தாலொழிய இங்கிருந்து அகல மாட்டார்கள். மகாராணியின் எண்ணத்தை நிறைவேற்ற, ராகுலனைப் போன்றவர்கள் பாண்டிய நாட்டிலும் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் திரும்பப் போவதில்லை. தற்போது ராஷ்டிர கூடத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்றும், போர் மூளக் கூடுமென்றும் அறிந்தேன். இங்கிருப்பவர்கள் ராஷ்டிர கூடத்திற்கு அழைக்கப்படுவார்கள். இந்த நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தினால் நம் எண்ணம் நிறைவேறும். தமிழகத்தில் ராஷ்டிரகூடர் ஆதிக்கம் மறையும்."

நந்திவர்மனது முறுவல் விரிந்திருந்தது. இளவரசியின் விழிகளில் பிரமிப்பு தெரிந்தது.

"பராந்தகா, நானும் உன் வழியிலேயே தான் திட்டமிட்டிருக்கிறேன். பாண்டிய மன்னருக்கு என் திட்டத்தை விளக்கி ஓலையனுப்புகிறேன். பராந்தகன் உண்மையில் யாரென்பதையும் தெரிவிக்கிறேன்" என்றான் நந்திவர்மன்.

பராந்தகன் எழுந்தான், "மன்னவா, நான் யார் என்பதை அறிய ஆவலோ, அவசியமோ தற்போது எனக்கில்லை. அது என் நோக்கத்தை பாதிக்கும் என்ற அச்சம் தானிருக்கிறது. நம் நோக்கம் அனைத்தும் நிறைவேறிய பின் இது பற்றிப் பேசலாம்" என்றான் தெளிவான குரலில்.

"சரி, பராந்தகா, இளவரசி, அடுத்து ராகுலனின் தாக்குதல் திருவெள்ளறையில் நிகழப் போவதாக அறிந்தேன். மன்னரிடம் எச்சரிக்கையுடன் இருக்கச் சொல்லுங்கள். இனி நீங்கள் புறப்படலாம்" என்று அனைவரையும் ரதத்தில் ஏற்றி விடை கொடுத்த மன்னன், பாண்டியர் எல்லை வரை தனது வீரர்களையும் துணையாக அனுப்பி வைத்தான்.

மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களில் வந்து இறங்கும் ரோமானியரும், யவனரும், கிரேக்க வணிகரும் தமிழகத்திற்குள் நுழையும் வழியாக அமைந்திருந்தது அந்த மலைப்பாதை. உயர்ந்து எழுந்து தொடர்ந்த மலைகளின் மீது நெளிந்தும், உயர்ந்தும், தாழ்ந்தும் சென்ற பாதையின் இருபுறங்களிலும் கானகம் அடர்ந்து கிடந்தது. திருவெள்ளறை என்றும் வெள்ளலூர் என்றும் அழைக்கப்பட்ட அந்தப் பாதையின் முடிவிலிருந்த ஊரும் கோட்டையும், அயல்நாட்டு வணிகர்கள் தமிழகத்தில் கால் பதிக்கும் முதல் இடமாக அமைந்திருந்தது.

அந்த வனாந்திரத்தில் நிறைந்து கிடந்த, பெயர்கூட அறியப்படாத மூலிகைகளின் வாசத்தையும் சேர்த்து, திடீர் திடீரெனச் சுழன்றடித்த குளிர்ந்த மலைக்காற்று, அந்தப் பாதையில் பகல் வேளைகளிலும் வணிகர்களை நடுங்க வைத்தது. போதாக் குறைக்கு அந்தக் கானகத்தின் துஷ்டமிருகங்கள் அவ்வப் போது மலைப்பாதைக்கு வந்து, தங்கள் ஏகாந்தத்தில் குறுக்கிடும் வணிகர்களை விசாரித்துச் சென்றன. சமயங்களில் தங்களுக்குப் பிடித்தவர்களை உடன் அழைத்துச் செல்லவும் முற்பட்டன. இதனால் மாலைப் பொழுதுக்குப் பின் அந்தப் பாதை வெறிச்சிட்டுக் கிடப்பதே வழக்கமாயிருந்தது.

அந்த மலைப்பாதையிலிருந்து கோபித்துக் கொண்டது போல் விலகிய ஒற்றையடிப் பாதையொன்று, கானகத்தினூடே வளைந்து வளைந்து சென்றது. வேடுவர்களைத் தவிர வேறு எவரும் பயன்படுத்தாத அந்தப் பாதையில் அவ்வப்போது சிறுத்தைகளும், மலைச் சர்ப்பங்களுமே கடந்து சென்றன.

கதிரவன் மறையத் தொடங்கிய அந்த நேரத்தில் ஓரிரு நரிகள் பாடிய கானமும், போட்டியாகக் குரல் கொடுக்க முனைந்த ஆந்தைகளும், கோட்டான்களும் அந்த இடத்தில் அச்சம் தரும் சூழ்நிலையை சிருஷ்டித்தன.

நீண்டு கொண்டே சென்ற பாதை மரங்கள் சற்று விலகியிருந்த இடத்தில் சென்று முடிந்தது. இலேசான சம வெளியாகத் தெரிந்த இடமும், அடுத்து நின்ற பாறைகளும், கானகத்து விலங்கு களைவிட துஷ்டர்களான ராகுலனுக்கும், அவன் வீரர்களுக்கும் புகலிடமாக மாறிக் கிடந்தது.

ஓரிரு பந்தங்களே எரிந்து கொண்டிருக்க, பாறையொன்றின்மீது அமர்ந்திருந்த ராகுலன், வீரர்களுக்குத் தன் திட்டத்தை விளக்கிக் கொண்டிருந்தான்.

"வீரர்களே, வெள்ளலூர்க் கோட்டை சிறியதானாலும் வலுவானது. கோட்டைத் தலைவன் இந்தள தேவன், பரம்பரையாக பாண்டிய மன்னர்களின் சேவையிலிருக்கும் பெரும் வீரன். புரவிப்படைகளுக்கும் பயிற்சியளிப்பவன். நாம் கோட்டைக்குள் நுழைவதோ, தாக்குவதோ எளிதல்ல."

"பின் எப்படி அவனை அகற்றுவது?"

"கேள். இந்தளதேவன் பெரும் வீரனென்றாலும் எளிதில் உணர்ச்சிவசப் படுபவன், முன்கோபி. அவனை கோட்டைக்கு வெளியே இழுக்க வேண்டும். அதுவும் அதிக வீரர் துணையின்றி."

"இது சாத்தியமா தலைவரே?"

"அதை சாத்தியமாக்கத்தான், இந்த மலைப்பாதையில் அயல்நாட்டு வணிகர்களின் பொதி வண்டிகள் நாம் ஏற்படுத்திய தடைகளைத் தாண்டி, தாமதமாக வந்து கொண்டிருக்கின்றன" என்ற ராகுலன் பிசாசு நகைப்பதைப் போல பெரிதாக நகைத்தான்.

(தொடரும்)



சித்ரசீதா!

உருவத்தில் சற்று பாந்தமாக இருப்பது சித்ரவீணை. நடிகை சீதா வீட்டின் பூஜையறையில் இதனை தவறாது பார்க்கலாம். இது தவிர, தன்னைக் காண வருபவர்களை சித்ர வீணையில் அழகாக இசை மீட்டி இசை வெள்ளத்தில் மூழ்கடித்து விடுகிறார் சீதா. சிறு வயதிலிருந்து சித்ரவீணையில் முறையாகப் பயின்று வந்தாராம் சீதா!

- ச.ந.

பராக்! பராக்!

புதிதாக ஒரு கலை வாரிசு கோடம்பாக்கத்தில் காலடி எடுத்து வைக்கப் போகிறது! பெயர் அஷ்வின். பி.எஸ்.சி. விஷுவல் கம்யூனிகேஷன்ஸ் முடித்திருக்கும் இந்த இருபது வயது இளமைப்புயலுக்கு டான்ஸ், ஃபைட் எல்லாம் அத்துபடி.

"பத்தாவது படிக்கும்போதே எனக்கு சினிமா ஆசை வந்துடுச்சு. ஆனா அப்பாதான், 'உன்னை முழுமையா தகுதிப்படுத்திக்கிட்டுப் போ'னு அட்வைஸ் பண்ணாரு" என்கிற இவர் பாடகரும்கூட.

"அதுசரி, ஏன் இந்த ஓவர் பில்ட் அப்? யார் அந்த அப்பா?" என்கிறீர்களா? அப்பா எஸ்.வி. சேகர்!

"அப்பாவைப் போல காமெடி ஹீரோவா?" என்றால் பதறுகிறார் அஷ்வின்.


"நோ நோ! எனக்கு சென்ஸ் ஆஃப் ஹியூமர் உண்டு! ஆனா டான்ஸ், ஆக்ஷன், காமெடினு கலக்குற ஆல் ரவுண்ட் ஹீரோவாக வரணும் என்பது தான் என் லட்சியம்!"

"நீங்க ஆர்த்தொடக்ஸ் ஃபேமிலியாச்சே! சிம்பு - தனுஷ் போல ஹீரோயின்களோட நெருங்கி நடிப்பீங்களா?" என்றோம்.




"எனக்கு சிம்புவோட ஆக்ஷன் டான்ஸ் ரெண்டுமே பிடிக்கும். அதேமாதிரி தனுஷ் பண்ற வித்தியாசமான கேரக்டர்கள் பிடிக்கும். சினிமாவுக்குன்னு வந்துட்டா எதையும் ஒதுக்கக் கூடாது என்பதுதான் என் அப்பா பாலிசி. எனக்கும் அதில உடன்பாடு தான்." ஆக இன்னொரு வாரிசு களம் இறங்குகிறார். வாழ்த்துகள்!

- இரா.முத்துக்குமார்


கொடி பறக்குது!
"நீதானே துணியையெல்லாம் கொடியில காயப்போட சொன்னே..."
USA
"வேறென்னங்க பண்றது... பயங்கர சோம்பேரியாயிடுச்சு... வாக்கிங் கூட வரமாட்டேங்குது..."
"எப்படிப்பா மூக்கு உள்ளார மோதிரம் போச்சு..?"
"கொஞ்சம் வேகமா 'மூக்குப் பொடி'யை இழுத்தேன்..."





ஜோக்ஸ் : நிலா
படங்கள் : பிள்ளை



நான் இப்போது யாரோடு போராடிக் கொண்டிருக்கிறேன்...? இல்லை எதனோடு?

நிச்சயம் மரணத்தோடுதான் போராடுகிறேன். மரணத்தோடான போராட்டத்தில் வெற்றி என்பதே தற்காலிகமானதுதானே!

என்றேனும் ஒருநாள், அதுதானே நம்மை வெல்கிறது!

நான் எங்கே இருக்கிறேன்? மருத்துவ மனைதான் என்பது தெரிகிறது. பிரக்ஞை வந்து கண் விழித்தபோது, வெள்ளை உடையில் நாலைந்து நர்சுகளும், டாக்டர்களும்தானே கண்ணுக்குத் தெரிந்தார்கள்? அப்படியானால், நான் உயிரோடுதானே இருக்கிறேன்?

எப்படி அதை உறுதி செய்து கொள்வது? உடலில் எங்கேனும் கிள்ளிப் பார்க்கலாமென்றால், கைகளை அசைக்கக் கூட முடியவில்லை.

எத்தனை நாட்களாக இப்படியே இருக்கிறேன்? நினைவு திரும்பிய மற்றொரு சமயத்தில் பிரதாப் கண் முன் தெரிந்தாரே. சோகமாய் என்னையே உற்றுப் பார்த்தவாறு.

அவருக்குப் பக்கத்தில் ரம்யா நின்று கொண்டிருந்தாள். என் மகள் கலைந்த தலையும், இடுங்கிய கண்களும், அழுக்குச் சட்டையுமாய்... என்ன ஆயிற்று என் குட்டி தேவதைக்கு... சாப்பிட்டாளா...?

அவளைப் பார்த்த மாத்திரத்தில் கண்களில் நீர் தாரையாய் வடிகிறது. யாரோ துடைத்து விடுகிறார்கள். மீண்டும் நினைவு தப்பி விடுகிறது.



இந்த உறக்கத்திலிருந்து மீள்வேன் என்று நம்பிக்கை சொல்கிறது. மீண்டு விடுவேன். பிரதாப்புக்கும் ரம்யாவுக்கும் நான் வேண்டும். அவர்களுக்காகவாவது நான் வென்றே தீர வேண்டும்.

நினைவு தப்பினாலும்கூட ஒரு குரல் மட்டும் எனக்குள் ஒலிக்கிறது.

அது அம்மாவின் குரல். அது குரல் அல்ல. சாபம்.

"ஓடுகாலி, குடும்பத்தையே நாசம் பண்ணிட்டியேடி.... நீ நல்லா இருப்பியா...?"

நன்றாகத்தானே இருந்தேன். கண்ணுக்கு நிறைவாய் நான் காதலித்த பிரதாப்... எங்களின் எட்டு வருட வாழ்க்கையில் கவிதையாய் ரம்யா... அழகான வீடு.

ரசித்து ரசித்துதானே வாழ்ந்தோம். நாங்கள் ஓடிப் போய் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம் என்பது எப்படியோ வீட்டுக்குத் தெரிந்துவிட்டது.



ப.புகழேந்தி

பதிவுத் திருமணம் முடிந்து வெளியே வந்தபோது, எதிரே அப்பா, அம்மா. எங்களை மணக்கோலத்தில் பார்த்தபின் மிரண்டு போனார்கள். அப்பாவின் கண்கள் கோபத்தில் சிவந்திருந்தன.

ஏதோ சொல்வதற்காக இரண்டடி முன்னே வந்தவர், சற்று யோசனைக்குப் பின் நின்று விட்டார்.

அம்மா எங்களை நோக்கி வந்தாள். அப்பா பிடித்து இழுக்க, உதறிக் கொண்டு வந்தாள்.

"ஓடுகாலி... குடும்பத்தையே நாசம் பண்ணிட்டியே... இன்னும் ரெண்டு பொம்பளப் பிள்ளங்களை எப்படி கரை சேர்ப்பேன்... நீ... நல்லா இருப்பியா..."

மண் வாரித் தூற்றாத குறை.

நான் அம்மா காலில் விழுந்து காலைப் பிடித்தேன். விருட்டென்று இழுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

எனக்கு அழுகையாக வந்தது.

"கொஞ்சம் பொறுமையாய் இரு. எல்லாம் சரியாகி விடும். அவர்கள் கோபம் கொஞ்சம் தணிந்தபின், நானே போய்ச் சமாதானப்படுத்துகிறேன்."

பிரதாப் கொடுத்த ஆறுதல் சற்று என்னைத் தேற்றியது.

சிறிய வீட்டில் நாங்கள் வாழ்க்கையைத் தொடங்கினோம். பிரதாப் என் அப்பா அம்மாவுக்கு நீண்ட கடிதம் எழுதி மன்னிப்புக் கேட்டார். பதில் எதுவும் வரவில்லை.

நான் கருவுற்றபோது, நேரிலேயே தகவல் சொல்லச் சென்றிருக்கிறார். உரிய மரியாதையும் இல்லை. சரியாக நடத்தப்படவுமில்லை. பிரதாப்பின் பேச்சில் அது தெரிந்தது.

பிரதாப்பின் அப்பா அம்மா நாலைந்து வருடங்களுக்கு முன் விபத்தில் இறந்துவிட்டனர். பிரதாப்பின் பெரியம்மா, பிரசவத்தின்போது கூட இருந்தார்கள்.

பிரசவம் முடிந்து எனக்கு பெண் குழந்தை. பிரதாப் சந்தோஷத்தின் எல்லையில்.

தகவல் சொல்ல என் வீட்டுக்கு பிரதாப் போனபோது, தங்கைதான் கதவைத் திறந்திருக்கிறாள். பெண் குழந்தை பிறந்ததைச் சொன்னபோது அவள் மற்றவர்களிடம் சொல்ல சந்தோஷமாய் உள்ளே ஓடியிருக்கிறாள். பாதி திறந்த கதவு அப்படியே இருக்க, உள்ளே போனவள் வெளியே வரவே இல்லையாம்.

அதற்குப் பின் பிரதாப் என் வீட்டுக்குப்

போகவில்லை.

நடுவில் ஒருமுறை அப்பாவை சேலம் பஸ் ஸ்டாண்டில் பார்த்தேன். சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தார். கொஞ்சம் மெலிந்து போயிருந்தார்.

கோபம் குறைந்து, கண்களில் பாசம் கொஞ்சம் தெரிந்தது. ஆனால் கிட்டே வரவில்லை.

என் இரண்டு தங்கைகளுக்கும் திருமணமும் முடிந்தபின்தான் எங்களுக்குத் தெரிய வந்தது.



இப்போதும் தெரிந்தவர்கள் யாராவது என் பேச்சை எடுத்தால், ''அவ கெடக்குறா ஓடுகாலி... ஏதோ நல்லா இருந்தா சரிதான்...'' என்பாளாம் அம்மா.

நான் நல்லா இருக்கட்டும் என்று அம்மா நினைப்பதே எனக்குச் சந்தோஷத்தைத் தந்தது.

அப்போதுதான் அது நடந்தது.

எது நடந்தது? எனக்கென்ன தெரியும். அலுவலகம் முடிந்து ஸ்கூட்டியில் திரும்பியபோது, ஒரு பஸ் பின்னால் இடித்ததும், நான் தூக்கி எறியப்பட்டதும்தான் தெரியும்.

ஒருமுறை வெள்ளை உடை நர்சுகளும், ஒருமுறை பிரதாப்பும் ரம்யாவும் கண்ணில் தெரிந்தார்கள்.

அதற்கப்புறம் இன்றுதான்... எத்தனை நாட்கள் கழித்து இந்த 'இன்று' புலர்ந்தது என்பது தெரியவில்லை.

முழுவதுமாய் சுயநினைவு திரும்பியிருந்தது. ஒருபக்கம் க்ளுகோஸ் இறங்கிக் கொண்டிருக்க, இரண்டு கைகளையும் கட்டியிருக்கிறார்கள்.

சுற்றும் முற்றும் பார்க்கிறேன். காட்சிகள் நன்றாகத் தெரிகின்றன. நான் உயிரோடுதான் இருக்கிறேன். ஹாஸ்பிட்டல் அருகே பிரதாப்.

"பிரதாப், வலது கால் பாதத்துல அரிக்குது. கொஞ்சம் தேய்ச்சு விடறயா...?"

விடாத லேனா!

லேனா தமிழ்வாணன் எழுத்து வேலையில் மூழ்கியிருக்கும்போது, எப்பொழுதும் பின்னணியில் மெலிதாய் வாத்திய இசை செவிகளை வருடிக் கொண்டிருக்கும். தினமும் மாலை மூன்று முதல் நான்கு மணி வரை, ரசிகர்கள் தாராளமாய் அலுவலகத்தில் லேனாவைச் சந்திக்கலாம். அதேபோல் கண்ணாடி அணியாத சமயங்களில் புகைப்படமோ வீடியோவோ எடுக்க அனுமதிக்க மாட்டார். அப்படி யாராவது எதிர்பாராத நேரத்தில் எடுத்துவிட்டால், அதன் பதிவுகளை அழிக்கும்வரை விட மாட்டார்! - ச.நா.

கேட்ட மாத்திரத்தில் பிரதாப் குழந்தை மாதிரி அழுதார்.

"என்ன பிரதாப், எனக்கு ஒன்றுமில்லையே.." உடலை அசைத்து எழுந்து பார்க்க முயன்றேன். அருகிலிருந்த நர்ஸ் என்னைப் பிடித்துக் கொண்டாள்.

''இல்லைடா... வலது முழங்காலுக்குக் கீழே காலை எடுத்துட்டாங்க... இல்லைன்னா பிழைக்கறது கஷ்டம்னு சொல்லிட்டாங்க..''

எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது. மரணத்தோடான போராட்டத்தில் ஒரு காலை இழந்து; தற்காலிகமாய் வென்று விட்டேன்.

அப்போது அம்மாவும் அப்பாவும் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்கள். அப்பாவின் முகம் வாடிப் போயிருந்தது. அம்மா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

முழு வலுவையும் திரட்டி அம்மாவிடம் பேசினேன்.

''ஓடுகாலி... ஓடுகாலின்னு திட்டினியேம்மா... இப்ப பாரு, என்னால நடக்கக்கூட முடியாது...'' ○

புக் போஸ்ட்

பிள்ளையார் வழிபாடு - க. சீனிவாசன்

தெய்வங்களைத் தேடி மனிதர்கள் கோயில்களுக்குச் செல்வதுதான் வழக்கம். மனிதர்களைத் தேடி வரும் தெய்வம் ஒன்று உண்டா? உண்டு. எந்தக் காரியமானாலும் நல்லவிதமாய்த் தொடங்கவும், நடத்தி முடிக்கவும், மனிதனுக்கு நம்பிக்கை தந்து, வீதிக்கு வீதி தும்பிக்கையோடு உட்கார்ந்திருக்கிறாரே கணபதி, அவரை விட்டால் அந்த தெய்வம் வேறு யார்? காணாபத்யம் என்னும்



விநாயகர் வழி பாட்டையும், முறைகளையும், அவரது சகல சிறப்புகளையும் கூறும் நம்பிக்கை நூல்.

அறுவகை வழிபாட்டு ஆய்வு நூலகம், 23, ராமராயர் அக்ரஹாரம், தென்னூர் 620 017, விலை ரூ.30/-

மல்டி மீடியா அடிப்படைகள் - மா. ஆண்டோபீட்டர்

கரப்பான் பூச்சியை டிராகன் போலாக்கி எதிர்வீட்டுக்காரரை தூக்கிச் செல்லலாம்; அவரது அழகான பெண்ணை தும்பியை அனுப்பி தூக்கி வரச் சொல்லலாம். எல்லாம் சாத்தியமாகும் மல்டி மீடியா கற்றால்.

இதைவிடச் சுலபமாக சொல்லித் தர இவராலேயே முடியாது என்னும் அளவுக்கு மல்டி மீடியாவை சுலபமாகப் புரிய வைக்கும் வழி காட்டி நூல்.

கற்பகம் புத்த காலயம், 50/18, ராஜாபாதர் தெரு, தி. நகர், சென்னை - 17, விலை ரூ.30/-

நவராத்திரி கதைகளும் பூஜை விரத முறைகளும் - எஸ்.எஸ். ராகவாச்சாரியார்

"பக்தா, நீ வேண்டும் வரங்களைக் கேள்" என்று காலையில் பரமசிவனே எதிரே வந்து நின்றாலும், "சார், கொஞ்சம் வழி விடுங்க. 18D பஸ் போயிடும். எதுக்கும் அப்புறமா வந்து பாருங்க" என்று ஆபீஸ் போய்விடலாம்; நீங்கள் மாலையில் வந்து நவராத்திரி பூஜையை சிரத்தையோடு செய்பவராயிருந்தால். நவராத்திரி பற்றிய கதைகளையும், உயர்ந்த பலன்களைத் தரும் பூஜை முறைகளையும் சுவாரஸ்யமாகக் கூறும் நூல்.

நர்மதா பதிப்பகம், 10. நானா தெரு, தி.நகர், சென்னை - 17, விலை ரூ. 40/-

சாதனை படைக்கும் சக்கர நாற்காலிகள் - கே.ஜே. இராமநாராயணன்

ராணுவத்தில் சேர துடிப்போடு, ஆரோக்கியமாகப் போனவர், அங்கேயே விபத்துக்குள்ளாகி, கழுத்துக்குக் கீழே உணர்வேயில்லாமல் திரும்பி வந்தால் என்ன ஆகும்? வாழ்க்கை முடிந்துதான் போகும். ஆனால் இவருக்குப் புதிதாய்த் தொடங்கியது. வினைத் திட்பம் என்பது மனத்திட்பம் என்று வாழ்வது மட்டுமின்றி, மற்ற ஊனமுற்றோருக்கெல்லாம் புது வாழ்வு தர 'அமர் சேவா சங்கம்' நடத்தும் இரு ஊனமுற்றோரின் சாதனை நூல்.

அமர்சேவா சங்கம், தென்காசி சாலை, ஆயக்குடி 627 852, நெல்லை, விலை ரூ. 59/- (விலையல்ல, சேவையில் பங்கு)

- விஷ்வக்

திடீர் நகர்! திடீர்



அன்றும் ஆயாக் கடை ஆப்பத்தையும், நாயர் கடை டீயையும், ருசித்தபடி கண் விழித்தது திடீர் நகர்., மெரினா கடற்கரையில் உள்ள மீனவக்குப்பம். காலை ஏழு மணிக்கு, திடீரென்று வந்து நின்றது ஒரு டாட்டா சபாரி கார். அதிலிருந்து தமது பிராண்டெட் மொட்டைத் தலையுடன் பட்டென்று வெளியே குதித்தார் நடிகர் அலெக்ஸ். அடுத்தநொடியே அங்கே தீப்போல பற்றிக் கொண்டது, பரபரப்பு. "டேய், அலெக்ஸ் வந்துருக்காருடோய். ஓடியாங்க! ஓடியாங்க!" ஐந்து மணித் துளிகள் நிறையும் முன்பே அந்தப் பகுதி நிறைந்து விட்டது. கூட்டத்திலிருந்து கேட்டார் ஒரு மீனவர், "அண்ணே சூட்டிங்கா?", "அட சும்மாயிருப்பா! பீச்சிலே நாம பார்க்காத சூட்டிங்கா! வேற எதுனா ஜோலியிருக்கும்" இது வேறு ஒருவரின் கமெண்ட்.



"ரொம்ப சரியாச் சொன்னீங்க!" என்று பேச ஆரம்பித்தார் அலெக்ஸ். "இந்த வருடம் பிப்ரவரி இருபத்தேழு, இருபத்தெட்டு தேதிகளில், திருச்சி பாலக்கரையில், தொடர்ந்து இருபத்து நான்கு மணி நேரம் இடைவெளி இல்லாமல் மேஜிக் செய்து காட்டி கின்னஸ் சாதனை படைச்சிருந்தேன். இதை 2005 - கின்னஸ் ரெக்கார்டு புத்தகத்தில் வெளியிட்டிருக்காங்க. இந்த மகிழ்ச்சியான செய்தியை, முதன்முதல்லே உங்களை மாதிரி பாட்டாளித் தொழிலாளர்கள் கிட்டே காட்டி சந்தோஷப்படணும்னு மனசிலே தோணுச்சு! ஏன்னா நானும் ஒரு தொழிலாளி. சினிமாவில் நடிச்சாலும் திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையில் வேலை செய்யறதை, பெரிய கௌரவமா நினைக்கிறேன்" என்றபடி, கின்னஸ் புத்தகத்தின் நூற்று எண்பத்து மூன்றாவது பக்கத்தைப் புரட்டிக் காட்ட, எல்லோரும் ஓடிவந்து கை குலுக்குகிறார்கள்.

"நான் இங்கே வந்தது இதுக்கு மட்டும் இல்லே. மேஜிக் என்ற கலையை வியாபாரமாக்கிட்டாங்க. ஐந்நூறு, ஆயிரம்னு வசதி இருக்கிறவங்க மட்டும்தான் டிக்கெட் வாங்கிப் பார்க்க முடியும்னு ஆகிப்போச்சு! இப்போ இந்த நிமிஷம் உங்களையும் சந்தோஷப் படுத்தப்போறேன்" என்றதும் அங்கே எழும்பிய விசிலும் கைதட்டலும் அலைகளோடு போட்டி போட்டன.

திடீர்நகரின் தலைவர்களில் ஒருவரான குப்புசாமி (மைக்செட் வாடகைக்கு விடுபவர்) அவசர அவசரமாக கார்டுலெஸ் மைக், ஸ்பீக்கர் பாக்ஸ் என்று அமர்க்களப்படுத்தினார்! ஆனால் மேடைக்கு எங்கே போவது? திடீர்நகர் வாசிகளுக்காகக் கப்பல் வடிவில் கட்டப்





பட்டிருந்த கழிவறையின் செப்டிக் டேங்க் தொட்டி, ஒரு சூப்பர் மேடையாகத் தென்பட, மைக்குடன் மேடையேறினார் அலெக்ஸ். அவசரமாக அவர் முன்பு ஒரு மேஜையைக் கொண்டு வந்து போட்டனர். ஒருவர் தான் போர்த்தியிருந்த சால்வையை மேஜை விரிப்பாக்கினார். அடுத்த கணம் எங்கிருந்து, எப்படி வந்தார்கள் என்றே தெரியவில்லை! அலெக்ஸின் மூன்று உதவியாளர்கள் திடீரென்று மேடையேறினார்கள். மூவரும் டீன் ஏஜ் பெண்கள். கேட்கவேண்டுமா? மறுபடியும் பொழிந்த விசில் மழைக்கிடையில் தொடங்கியது மேஜிக் மழை!

மூன்னூறு மில்லிப் பாலை நூறு மில்லிக் குவளையில் அடைத்துக் காட்டிய அலெக்ஸின் முதல் மேஜிக்கிற்கு, ஐந்து நிமிடம் தொடர்ந்தாற்போல் கைத்தட்டல்.

மணிப்புறாக்களை மாயமாய் மறைத்தது, மூன்றடி நீளமான வாளினை வாய் வழியே தொண்டைக்குள் சொருகி





வெளியே எடுத்தது, பல வண்ணக் குடையை கறுப்பு வெள்ளையாக்கியது என்று சூடு பிடித்த திடீர் மேஜிக்கில் மிரண்டு போயிருந்த திடீர் நகர் வாசிகளுக்கு, திடீர் பத்து ரூபாய் அதிர்ஷ்டம்! குப்பத்து மக்கள் கொடுத்த வெள்ளைக் காகிதங்களை வாங்கி, கையிலிருந்த ஃபையில் அடுக்கி வைத்த அலெக்ஸ், "ஒன், டூ, த்ரீ, அரிஸ்டோ!" என்று மந்திரம் போட்டு பையைத் திறந்தார். காகிதங்கள்



எல்லாம் பத்து ரூபாய் நோட்டுகளாக மாறி விட்டிருந்தன. யார் யார் காகிதம் கொடுத்தார்களோ, எல்லோருக்கும் பத்து ரூபாய் விநியோகம் ஜரூராய் நடந்தது.

அண்ணே, ரிசர்வ் பாங்க் கவர்னரா நீங்கதான் வரணும்'' என்ற ஒருவன்! ''அடுத்த பதினைந்து நிமிசத்துலே நோட்டை மாத்திடணும்! இல்லையென்றால் மறுபடியும் காகிதமா மாறிவிடும்!'' என்று அலெக்ஸ் குண்டைத் தூக்கிப் போட, பணம் வாங்கியவர்கள் ஒரே ஓட்டமாகக் கடைகளை நோக்கி ஓடினார்கள்.

கடைசியாக, டாஸ்மார்க் பிராந்தியை மினரல் வாட்டராக மாற்றிக் காட்டிய அலெக்ஸ், ''மதுவை மேஜிக்லே தண்ணியா மாத்தினேன். இது ட்ரிக். நிஜத்துலே அது முடியாது. அதனாலே உங்க உடல், மனசு, ஆயுசு, எல்லாத்தையும் கெடுக்கிற மதுவைத் தொடாதீங்க''ன்னு பிரசாரம் பண்ணிவிட்டு, திகர் மேஜிக்கை முடிக்க, ஒட்டுமொத்த மக்களும் சூழ்ந்து கொண்டு கை குலுக்கியதில், மூச்சுத் திணறிப் போனார் அலெக்ஸ்.

அடுத்த அரை மணி நேரத்தில் வளசர வாக்கத்தில் உள்ள செஸ் அமைப்பின் குழந்தைகள் காப்பகத்தில் நுழைந்தது அலெக்ஸின் கார். பிறந்த நிலையில் கைவிடப்பட்ட பச்சிளம் குழந்தையி லிருந்து, பன்னிரண்டு வயதுச் சிறுவர்கள் வரை, மொத்தம் முப்பத்தாறு குழந்தைகள். அத்தனை பேருக்கும் எச்.ஐ.வி பாசிட்டிவ். பெற்றோரிடமிருந்து கிடைக்க வேண்டிய அன்புக்கு பதிலாக, எச்.ஐ.வியைப் பெற்றுக் கொண்டிருக்கும் இவர்கள், பெற்றோரின் மரணத்துக்குப் பிறகு குடும்பத்தினரால் கைவிடப்பட்ட குழந்தைகள். தங்கள் உடலுக்குள் இருக்கும் விபரீத வைரஸ் பற்றி எதுவுமே தெரியாத பிஞ்சுகள்.

''ஏய், இந்த அங்கிளை நான் டி.வியிலே பார்த்திருக்கேன். ஜெயா டி.வியிலே மேஜிக் பண்ணி காட்டுவாங்க'' என்றபடி அலெக்ஸைக் கண்டதும் ஓடோடி வந்து சூழ்ந்து கொண்டார்கள். எல்லாக் குழந்தைகளையும் தொட்டுத் தூக்கி கை குலுக்கி, கன்னத்தை கிள்ளி விளையாடிய அலெக்ஸ் "தொட்டால் எய்ட்ஸ் வராது! அன்புதான் வரும்'' என்றவர், மேஜிக் பொருள்களை உதவியாளர்களுடன் மேஜை மீது பரப்பியபடி குழந்தைகளைப் பார்த்துக் கேட்டார். "அங்கிள், இப்போ என்ன செய்யப் போறேன்?'' "மேஜிக்!!!'' உற்சாகக் கூவல் எழுப்பிய அந்தக் குழந்தைகளின் முகத்தில் அடுத்த ஒரு மணி நேரம் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. அவர்களோடு டீ, பிஸ்கட் சாப்பிட்டு அங்கிருந்து விடைபெறும்போது "அங்கிள், மறுபடியும் எப்போ வருவீங்க?'' என்று குழந்தைகள் கேட்க, கண் கலங்கிப் போனார். ''ஆறு மாசத்துக்கு ஒருமுறை அங்கிள் கட்டாயம் வருவேன்'' சொல்லிவிட்டு நம்மைப் பார்த்த அலெக்ஸ், "மேஜிக் கலையைக் கத்துகிட்ட ஆத்ம திருப்தி இன்னைக்குத்தான் கிடைச்சுது! கல்கிக்கு ரொம்ப நன்றி'' என்று கைகூப்பிவிட்டு காரில் ஏறினார். அவரது கார் அங்கிருந்து கிளம்பி வெளியேறியபோது, ''அங்கிள் டாட்டா... பாய்'' என்ற செஸ் குழந்தைகளின் குரல் மெல்ல காற்றில் கரைந்து கொண்டிருந்தது!

- ஸ்ரீசக்கரம்

படங்கள் : சண்முகசுந்தரம்

வலைபாயுதே



வரலாறு ஈஸி டோய்!



இந்தியாவின் மொழிகள், கலைகள், நாகரிகம், கட்டடக்கலை, பண்டிகைகள், கல்வி, பண்பாடு, கோவில்கள்... என்ன மூச்சு வாங்குகிறதா? - இப்படி இந்தியா வைப்பற்றி எக்கச்சக்க விஷயங்களை நிதானமாக வாசிக்க indianchild.com எனும் 100% சுதேசி தளம் உதவுகிறது. (UPSC மாணவர்கள் கவனிக்க) உலக அமைதிக்கு சில யோசனைகள் என்ற பக்கம் பல மொழிகளில் சாந்தமாய் இருக்கிறது. அதேபோல் குழந்தைகளுக்கென வரலாற்றுப் பாடங்களைக் கொண்டுள்ள தளம் historyforkids.org. (படிக்க ஈஸியா இருக்குது டோய்!)

கோலிவுட் போலில்லாமல் பாலிவுட்டில் நடிகைகள் தங்கள் காதலைப் போட்டு உடைத்துவிடுகிறார்கள். "நான் ஜான் ஆபிரகாமை கல்யாணம் செய்வேன். இப்போதல்ல. ஐந்து வருடங்களுக்குப் பின் தான். இன்னும் நடிக்க வேண்டியது நிறைய உள்ளது. கல்யாணத்திற்கு பின் நடிப்புக்கு குட் பை" என லேட்டஸ்டாகச் செப்பியுள்ளார் பிபாஷா பாசு. (www.apunkachoice.com) நீங்க பாலிவுட் செய்திகளைத் தேடித்தேடி தேவதாஸா அலையற ஆள்னா, நோட் பண்ணிக்கோங்க இந்த முகவரியை!



ஜாலி எஸ்.எம்.எஸ்.

சர்தார்ஜி நீண்ட நேரமாக கண்களைத் மூடிக் கொண்டு கண்ணாடி முன் நின்று கொண்டிருந்தார். அவர் மனைவி "என்ன செய்நீங்க?" என்று கேட்டதற்கு, சர்தார்ஜி சொன்னாராம், "தூங்கும்போது நான் எப்படி இருக்கிறேன் என பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று.

- ப்ரௌசர்



"ஏன் அப்பச்சி நீங்க என் கலியாணத்தைத் தடுக்கவே இல்லை?" என தாமரை கேட்டாள். பழனியப்பன் சுந்தர காண்டம் படித்துக் கொண்டிருந்தார். மனம் அமைதியுறவே இல்லை.

அருணாசலம் பெரிய வீட்டுக்குக் குடிபெயர்ந்துவிட்டான். காரைக்குடி தனது முகவரியையே மாற்றிக் கொண்டு விட்டது போலிருந்தது. நவீன தொழில் நுட்பங்களும், தகவல் தொடர்புகளும், மனிதர்களை நவீனப்படுத்துவதற்குப் பதில் நுகர்வோராக மாற்றுவது ஒரு வளர்ச்சியாகத் தோன்றவில்லை. மனிதர்களால் தங்களைத் தாங்களே இனம் கண்டு கொள்ள முடியாத அளவுக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் இவ்வளவு வணிக வளாகங்கள் மனிதர்களை விளம்பரங்களுடன் கூவி அழைத்த தில்லை. காரைக்குடியின் பிரத்யேக குளிர் பானங்கள் சோபையிழக்க, எல்லாக் கடைகளிலும் பன்னாட்டு நிறுவனங்களின் குளிர் பானங்கள். தெரு வாசலில் தானும், ஆத்தாவும், சகோதரியும் அமர்ந்திருக்க, கடந்து போன மிட்டாய் வண்டியையோ, கேக் வண்டிகளையோ இனி காண முடியுமா? எல்லாரும் எல்லாவற்றையும் எளிதாக எடுத்துக் கொள்வது போலிருந்தது. பழனியப்பனுக்கு ஒரு பழங்கால இலக்கியப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிப்பது கூட, ஒரு புராதனச் செயலாக நிராகரிக்கப்படுகிறது. தமிழ், தமிழ் என முழங்கிய திராவிட இனப் பாரம்பரியத்தில், செயற்கைக் கோள் மூலம் எட்டுத் திக்கும் முழங்கிடும் தொலைக்காட்சிகள், தமிழைக் கொன்று கொண்டிருப்பதை இதே திராவிட இனங்கள்தாம் அனுமதித்துக் கொண்டிருக்கின்றன. அப்பாவும், தானும், கதிரேசனும் தமிழில் இலக்கியங்களைப் படித்தது எல்லாமே பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டதே. கதிரேசனின் நினைவு வந்துவிட்டால் திருஞானம் நினைவும் வருகிறது. உடனே இந்தக் கேள்வியும் வருகிறது.

"ஏன் அப்பச்சி நீங்க என் கலியாணத்தைத் தடுக்கவே் இல்லையா?" என்றான்.


"நடந்து முடிஞ்ச விஷயம்மா."

"எனக்கு நடந்துக்கிட்டிருக்கிற விஷயம் அப்பச்சி. ஜாதகமெல்லாம் பார்த்தீங்களா?"

"என்னை வதைக்கணும்னு கேட்கறியாம்மா?"

"இல்ல! பொதுவா பொண்ணைக் கட்டிக் குடுக்கறதுன்னா, நம்ம வழக்கத்தில் முழுசா விசாரிப்போம் இல்லியா? பையனைப் பத்தி புள்ளிகளிடம் கேட்போம். ஜாதகம் பார்ப்போம். அது கூட வேணாம் அப்பச்சி. வானத்தின் உயரத்தில் உள்ள ஒரு குடும்பத்திலிருந்து பொண்ணு கேட்டு

சத்தியப்ரியன்



வலம்புரி முத்து

வர்றப்ப, பையன் எப்படின்னு கூடவா உங்களுக்குச் சந்தேகம் வரலை?"

"ரண சிகிச்சையா?"

"இல்லைப்பா. எல்லாத்துக்கும் எனக்கு பதில் தெரியும். அருணாசலம் அவசரப்பட்டுட்டான். அவனுக்கு அப்பச்சி, ஆத்தா எல்லாத்துக்கும் மேல காசு ஒண்ணுதான் குறியாப் போயிடுச்சு. இது காலத்தின் பரிமாணம் அப்பச்சி. அவனைக் குத்தம் சொல்ல முடியுமா? ஆதிக்கம் அளிக்கக் கூடியது பணம். ஆதிக்கம் நிறைந்தவன் ஆண். இது இரண்டும் ஒண்ணாச் சேரும்பொழுது விளம்பரம், ஆடம்பரம், முகஸ்துதி இதெல்லாம் பெருகுமே தவிர, உண்மையில் நல்லதும், மென்மையானதும் பெருகாதப்பா" என்றான்.

"வாஸ்தவம் தாமரை. ஆனா ஒடுக்கப்பட்டதெல்லாம், என்னிக்குமே குரல் கொடுக்காம ஒடுங்கியே இருக்கும்னா நினைக்கிற? மேற்கொண்டு நீ என்ன செய்யப் போற?

"கொஞ்சநாள் எதுவுமே இல்லாம இருக்கப் போறேன். என் மனசு முழுக்க யோசிச்சு, விவாதம் பண்ணி சிந்தனைப் பளு அதிகமாயிருக்கு. மதுராவுடன் என் முழு நேரத்தையும் செலவிடப் போறேன். சிரிச்சுக்கிட்டு, டெலிவிஷன்ல சினிமா பார்த்துக்கிட்டு, எனக்குப் பிடிச்ச புஸ்தகங்களைப் படிச்சிக்கிட்டு சந்தோஷமா இருக்கப் போறேன். முடியுமானா எனக்கு நல்ல ஆசிரியர்களின் புத்தகங்கள் வாங்கிக் கொடுங்க."

சொன்னது போலவே இருக்கத் தொடங்கினாள். மதுராவின் ஒவ்வொரு அசைவிலும் தன்னைப் பறி கொடுத்த அவளுக்கு, ஆரம்பத்தில் யாருமே எந்தத் தடையும் விதிக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

'பாதக்கமலங்கள் காணீரே! கணைக்கால் இருந்தவா காணீரே! முழந்தாள் இருந்தவா காணீரே! முத்தம் இருந்தவா காணீரே! உந்தியிருந்தவா காணீரே! உதரம் இருந்தவா காணீரே! குருமாமணிப்பூண்

குலாவித் திகழும் திருமாரபு இருந்தவா காணீரே! வான்கொள் வளை எயிற்று ஆருயிர் வவ்வினான்! தோள்கள் இருந்தவா காணீரே!' என மதுராவின் ஒவ்வொரு அங்கத்தையும் பெரியாழ்வாரின் பாசுரங்களால் இனம் கண்டு கொண்டாள்.

விதம் விதமாக அலங்காரம் செய்து பார்த்தாள். தியாகராஜனின் மனநிலையில், சொத்து முழுவதையும் பெயர்த்தி பெயரில் எழுதி விடுவதைப் போல, மாதம் ஒரு முறை ஆட்கள் மூலம் தங்கக் கொலுசு வரும், தங்க அரைஞாண் வரும்; அழகு மோஸ்தரில் வளைவி, அங்கி, நெற்றிச் சுட்டி, ஆரம் என வந்த வண்ணம் இருக்கும். சிவகாமி கோட்டையூரில் உறவுக்காரர்களின் திருமணம் என்று வந்துவிட்டு, சக்திநகரில் இவர்கள் வீட்டில் தாமரையையும் மதுராவையும் பார்க்க வந்திருந்தார்.

''கண்ணும், மூக்கும், தலைமுடியும் பாக்குறப்ப, அச்சா திருஞானத்தைப் பார்க்குறா மாதிரி இருக்கு'' என உச்சி முகர்ந்தாள். அன்பு இரண்டு கோடு கண்ணீராய் மதுராவின் உச்சந்தலையில் உருண்டது.

மதுரா கதிரேசன் சாடையில் இருப்பதாக திருஞானம் சொன்னது நினைவுக்கு வந்தது. மரணம் ஒருவனுடைய கீழ்த்தரச் செய்கைகளை மூடி மறைத்து, அவனுக்கு சிவபதவி கொடுத்து விட முடியுமா என்ன?

''பேசாம நீயும், மதுராவும் ஆழ்வார்ப் பேட்டைக்கே வந்துடுங்களேன் தாமரை'' என்றாள் தாமரையிடம்.

''இதுவரைக்கும் அப்படி ஒரு நினைப்பு எனக்கு இல்லை அத்தை. அப்படி ஒரு நினைப்பு வாரப்ப, நானே ஓங்களுக்குத் தாக்கல் சொல்றேன். வந்து அழைச்சிக்கிட்டுப் போங்க'' என்றாள் தாமரை, எவ்வித முகதாட்சண்யமும் இல்லாமல்.

சிவகாமி பேசாமல் கிளம்பி விட்டாள்.

''மொகத்துக்கு நேரா இப்படியா பேசுவாக?'' என்றாள் சீதை.

''பின்ன எப்படிப் பேசுவாகன்னு க்ளாஸ் எடுங்க. அதுமாதிரி பேசறேன்'' என்றாள் தாமரை, இடைவெளி விடாமல்.

''அது என்ன இப்பல்லாம் ஊசி தைக்கிறா மாதிரி ஒரு பேச்சு?''

''ஆமாம். அப்படித்தான் பேசப் போறேன். பேசாம இருந்ததுக்குத்தான் ஒண்ணா சேர்ந்து மொளகா அரைச்சிங்களே.''

''நீ ஏன் தலையைக் காட்டின?''

''சினிமாவுல வாராப்புல பொடவ முந்திய விரிச்சுப் புடிச்சு, நீதான் எனக்கு தாலிப்பிச்சை போடணும்னு கெஞ்சிறப்ப தலையைக் காட்டாம இருக்க முடியுமா?''

''இப்ப எதுக்கு பழசெல்லாம்?''

''நான் சாகுற வரையில் மறக்க மாட்டேன்.''

சீதைக்குப் பயமானது. எளிய வழியில் தாமரையின் அவலத்திற்கு முடிவு கட்டியிருக்கலாம். முழுவதும் தங்கள் தவறை உணர்ந்து சரணாகதி ஆகியிருந்தால், அதன்பின் அவளை, அவளுடைய சோகத்தைத் தங்களுடையது போல் பாவித்திருந்தால், வாழ்வு எளிதாயிருக்கும். ''நான்'' என்னும் ஈகோவை விட்டுக் கொடுப்பது அவ்வளவு சுலபமில்லை. அகந்தைக்கு சூழல் வேண்டி உள்ளது. ஆள்பலம் வேண்டி உள்ளது. பேச்சு சாமர்த்தியம் வேண்டி உள்ளது. அகந்தை என்றும் பணிவதில்லை. தன் செய்கையை நியாயப்படுத்த சந்தர்ப்பம் தேடும். சீதை அப்படி ஒரு சந்தர்ப்பத்தைத் தேடினாள்.

''பாவம் ஓங்க தங்கச்சி'' என்றாள் ஒருநாள் அருணாசலத்திடம்.

''தாமரைன்னு சொல்லு! அதென்ன ஓங்க தங்கச்சி?'' என்றான் அருணாசலம்.

''சரி! தாமரை! ஏதோ அத்தையும், மாமாவும் இருக்கிற வரையில், அவளுக்கு இங்கன பொழுத கழிக்கறது பெரிய விசயமா இருக்காது. நாளைக்கு அவுகளுக்குப் பின்னாடி, தானா ஒரு சொல் சொல்ல அவளுக்கு ஏலுமா? அல்லது ஒரு தண்ணி, அது நம்ம வீடுன்னு எடுத்துக் குடிக்க முடியுமா?''

''எதுக்குஞ்ச இப்பம் அதைப் பத்திச் சொல்ல வர்ற?''

''தாமரை அவ மாமியார் வீட்டோட போயி இருக்கறதுதான் அவளுக்கும்



நல்லது..." என்று நீட்டினாள் சிதை.

"நமக்கும் நல்லது" என முடித்தான் அருணாசலம். அவனுக்கா முடிக்கத் தெரியாது? தாமரை மீண்டும் மாமனார் வீட்டுடன் போய் இருப்பது, சுப.பெரி.தியாகராஜன் குடும்பத்துடன் தனக்குள்ள தொடர்பு விட்டுப் போகாமல் இருக்கும். அந்தத் தொடர்பு மேலும், மேலும் அவனுடைய நிலையை உயர்த்தும். பல ஏஜன்ஸிகள், பல நிதி முதலீடுகள் என, அவன் கனவு கண்ணுக்குள் விரிந்தது.

அவன் சந்தர்ப்பத்திற்குக் காத்திருந்தான்.

முதல் சந்தர்ப்பம் திருஞானத்திற்கு 'தலைதிதி' செய்யும்பொழுது நேர்ந்தது. தாமரையிடமிருந்து 'கைப்புல்' எனப்படும் தர்ப்பைக் கட்டை வாங்கி, திருஞானத்தின் மூத்த அண்ணன் குமரேசன்தான் கர்த்தாவாக இருந்து திதி கொடுத்தான். மீண்டும் ஊர் திரண்டது. எல்லா தினசரிகளிலும் திருஞானத்தின் முழு உருவப்படம் அச்சாகி, பலரும் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள். ஒரு ஆண்டுக்குள் எவ்வளவு மன மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. தம்பியின் குணமறிந்த அண்ணன்மார்கள் அவன் இறப்பை, வாழ வந்த பெண்ணின் ராசியுடன் ஒப்பிட்டுப் பார்க்கவே இல்லை. பெற்றோருக்கு கல்யாணம், காட்சி எதுவும் இல்லாமல், ஒற்றையாகச் சாகாமல் கலியாணம் கட்டி, ஒரு மகனுக்குத் தகப்பனாகியே இறந்திருப்பது, ஒரு வகை சமாதானம்.

"நாலு நுனி வாழை இலை. நன்னா பெரிசா எடுத்துண்டு வாங்கோ" என பஞ்சாங்கக்காரர் விரட்டிக் கொண்டிருந்தார்.

"எப்படிப் போடறது சாமி?" என சிவகாமி விசாரித்துக் கொண்டிருந்தாள்.

"பாருங்க! வயசு காலத்தில் மாமியார்

தடுமாறிக்கிட்டு வேலை செய்யுறாங்க. இவ 'யாரு புருசனையோ யாரோ பறிகொடுத்தா மாதிரி' இருக்கா. ரொம்பத்தாங்க நெஞ்சழுத்தம் ஒங்க தங்கைக்கு."

"நீ செத்த வாயை மூடிட்டு சும்மா இருக்கியா?"

"என் வாயை அடைங்க."

பஞ்சாங்கக்காரர் விளக்கினார். "தோ பாருங்கோ! நாலு பிராமணா நாலு திசைக்கு. கிழக்கு திசையில் போடப்படும் இலைக்கு முன்னால் அமர்பவர் விஸ்வே தேவர் எனப்படுவார். வடக்குப் பக்கமா உட்காரும் பிராமணர் பிதுர்வர்ண ஸ்தானம். நாங்க பிதுர்கள் என்போம்.

நீங்க பங்காளி வம்சாவழிம்பேன். பண்ணிவைக்கிற புரோகிதரும் வடக்குப் பார்த்து உட்காருவார். அவர் மாத்ரு காருண்ய பிதுர் ஸ்தானமாகும். அம்மா வழி, பங்காளிகளின் வம்சாவழி. இன்னொரு பிராமணர் மேற்கு முகமாக வீற்றிருப்பார். அது மகாவிஷ்ணு ஸ்தானம். நாலு திசை பார்த்து இலை போடுங்கோ."

பெரிய நுனி வாழை இலைகளாக நான்கு போடப்பட்டன. நான்கு பிராமணர்கள் அந்தந்த இலையின் முன்பு அமர்ந்தார்கள். இலைகளில் பச்சை அரிசியும், பச்சைக் காய்கறிகளும், குறிப்பாக வாழைக்காய் பிரதானமாக வைக்கப்பட்டன.

புரோகிதர் சில மந்திரங்களைச் சொன்னார்.

"நன்னா வேண்டிக்குங்கோ. அல்ப ஆயுசுல போனாலும், இன்னொரு பிறப்பில் இந்த மாதிரி ஆகாம ஸம்ஸ்காரங்களையெல்லாம் பூரணமா முடிச்சிண்டு, ஆயிரம் பிறை கண்டவர்ங்கற சம்பத்தோட இருக்கணும்னு வேண்டிண்டு, பிராமணாளை எடுத்துக்கச் சொல்லுங்கோ."

தியாகராஜன் கண்களை மூடிக் கொண்டார். தாமரையின் பொட்டில்லாத முகம் நினைவில் வந்தது. மதுராவின் குறுஞ்சிரிப்பு நினைவில் வந்து போனது. இறந்து போன திருஞானத்திற்கு எவ்வளவு சிரத்தையுடன் திதி கொடுத்தாலும், வாழும் அந்த இருவருக்கும் என்ன செய்யப் போகிறோம்?

அவர்களது அக்கறையே அவளிடம் மீண்டும் அந்தக் கேள்வியைக் கேட்டது.

"வியாபாரம் செய்வது நமது தர்மம்மா. அதுக்குன்னு சில நெறிமுறைகளை

"உங்க கட்சியில கோஷ்டிப் பூசல் உண்டா?"

"அப்படின்னு பத்திரிகைக்காரங்க கதை கட்டி விட்றாங்க..."

"ரூம்ல என்ன மேஜை நாற்காலியெல்லாம் உடையற சப்தம் கேட்குது...?"

"எங்க கட்சிக்காரங்க தான்... ஆலோசனைக் கூட்டம் நடக்குது...!"

– தேவி

முன்னமே நம்ம பெரியவங்க் சொல்லி வச்சிட்டுப் போயிருக்காக. பெரிய வட்டிக்கு ஆசைப்படக்கூடாது. அடாவடி பண்ணி வியாபாரம் பண்ணக் கூடாது. கெடைக்கற லாபத்தில ஒரு பகுதியைக் கடவுளுக்கும், தருமத்துக்கும் எடுத்து வெச்சிரணும். ஒளுக்கமும், சீலமும் மூச்சுப்பிறியா இருக்கோணம். இது மாதிரி நெறைய போட்டி பொறாமை என வியாபாரம் சிக்கல் நிறைந்ததா ஆயிருச்சு. ஆனா அதையும் பார்த்து, நமக்குன்னு உள்ள நெறிமுறைகளையும் பார்த்து ஏறுவதும், இறங்குவதுமா இருந்துக்கிட்டு தான் இருக்கோம். நம்ம ஆளுன்னு அரசியலில் உட்கார வெச்சவுகன்னாம் பல புதிய திட்டங்கள் மூலமா, நம்ம முதுகிலயே குத்தினாலும் நாம விடாம முன்னேறிக்கிட்டுத்தான் இருக்கோம். அப்படி ஒரு நெறி குடும்பத்திலும் இல்லாமயாப் போயிரும்? அந்த நெறியோட கேக்கறேன். திரும்பியும் கேட்கிறேன். நீ என்ன செய்யப் போற?"

"இது பத்தி நான் இன்னும் யோசிக்கவே இல்லை மாமா."

"உன் பேரிலும், மதுரா பேரிலும் சொத்து எழுதி வைக்கிறேன். ஃபிக்ஸட் டெபாசிட்டில பணம் போட்டு கணிசமா ஒரு தொகை மாசாமாசம் கிடைக்கிறா மாதிரி ஏற்பாடு பண்றேன்."

"நஷ்ட ஈடா?" என்றாள் தாமரை.

"உன் காயம் உன்னைப் பேச வைக்குது ஆத்தா."

"இதுவரையில் நான் எந்த முடிவும் எடுக்கலை. ஆனா எனக்கென்னவோ இங்கன இருக்க மனம் ஒப்பலை. அப்பச்சி ஆத்தா முகத்தைப் பார்த்துகினு கொஞ்சநா காரைக்குடியில் இருக்கேன். ஒ... நைக்கு ஒக்காந்து யோசிச்சா திக்குன்னு தான் இருக்கு. பொட்டப்புள்ளயா பொறக்கவே கூடாதுன்னுதான் வருது. காசு சொத்து, நகைன்னு வாங்கிக்கறது என்னவோ என்னையே அடமானம் வெச்சா மாதிரித் தோணுது. ரெண்டு வருசம் அவுக இருக்கறப்பயே, நீங்கதானே என்னைப் படிக்க வெச்சீக மேல்படிப்பு. வேண்டாம்னு மறுக்கலியே? காசு, பணம்தான் மனுசங்களை அளக்குமுன்னா, என்னை ஒரு பொண்ணுன்னு சொல்லிக் கொள்வதற்குப் பதில், ஒரு சரக்குப் பொருள்ன்னு சொல்லிக்கலாம்தானே?" என்றாள்.

"பேசித் தீரும் சங்கதியில்லையேம்மா இது" என்றார் தியாகராஜன்.

"மனசு, காலம் இதெல்லாம் கூடி வரட்டும். ஒரு உதவின்னு வந்து நிக்கறப்ப, ஓங்க வீட்டுக் கதவ மூடியா வெப்பீக?" என்றாள்.

"ரெண்டு கதவும் ஒனக்காக எந்நேரமும் தெறந்தே கெடக்கும் ஆத்தா" என்ற மாமனாரின் வாக்குறுதியை ஏற்றுக் கொண்டு, மதுராவுடன் தாமரை மீண்டும் காரைக்குடிக்கே கிளம்பினாள்.

முதல் சந்தர்ப்பத்தை நழுவ விட்ட தங்கையின் புத்திகெட்டதனத்தைப் பார்த்துப் பொருமினான். இரண்டாவது சந்தர்ப்பம், மதுராவுக்கு முதல் முடியிறக்கும் பொழுது ஏற்பட்டது.

(தொடரும்)

"பத்திரமாகச் சேர்ந்திருப்போம்"

நண்பர்களுடன் ஒரு முறை டில்லி சென்றார் என்.எஸ்.கிருஷ்ணன். அன்று இரவே சென்னைக்கு விமானத்தில் புறப்படத் தீர்மானித்தார் கலைவாணர். அவரது நண்பர்களோ இன்னும் ஒரு நாள் டில்லியில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், 'இன்றைய விமானத்தில் இடமில்லையாம். மறுநாள் செல்லலாம்' என்று பொய் சொல்லி விட்டனர். ஆகவே கலைவாணரது பயணம் தடைபட்டது.




மறுநாள் காலைப் பத்திரிகையில், முதல் நாள் இரவு புறப்பட்ட விமானம், நாகபுரியில் கோர விபத்துக்குள்ளாகி எல்லோரும் மாண்டதாகச் செய்தி வந்தது. இதைப் படித்து திடுக்கிட்ட நண்பர்கள், கலைவாணரிடம் தாங்கள் செய்த தந்திரத்தைச் சொன்னதோடு, "நல்ல வேளை, நீங்கள் அந்தப் பிளேனில் போகாமல் பிழைச்சீங்க!" என்றனர்.

அதற்கு உடனே அவர், "நான் அந்த பிளேன்ல போயிருந்தா, அதுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டிருக்காது. பத்திரமா என்னையும், மத்தவங்களையும் சென்னையிலே கொண்டு போய்ச் சேர்த்திருக்கும்." என்று வருத்தத்துடன் சொன்னார்.

அங்கு சில நிமிடங்கள் மௌனம் நிலவியது.

\- ரமேஷ்





* சந்திரிகா



* ரணில்

தேவை : பலமான தேசிய இயக்கம்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, அமைதி எந்த அளவுக்குத் தேவை என்பது போர் நிறுத்தத்துக்குப் பின் காணும் இலங்கை புரிய வைத்தது. சுற்றுலாவும், வணிகமும், போக்குவரத்தும் பெருமளவுக்கு அதிகரித்திருப்பதை நேரில் காண முடிந்தது. கொழும்பில் நாம் சந்தித்த ஒரு நண்பர் சொன்னார்:

"இன்னும் இரண்டு வருடங்களுக்கு போர் நிறுத்தம் அமலில் இருக்குமானால், சிங்கப்பூர் அளவுக்கு இங்கே வளர்ச்சி காண முடியும்!"

அரசுடன் அமைதிப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்வது குறித்து விவாதிப்பதற்காக, ஜெனீவாவுக்குப் புறப்பட்டுப் போயிருக்கும் புலிகளின் அரசியல் விவகாரக் குழுத் தலைவர் சு.ப. தமிழ்ச் செல்வன் திரும்பி வரும்வரை, அமைதி தொடரும் என்று நம்பலாம்.

ரனில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த போது புலிகளுடனான பேச்சு வார்த்தைகளில் அக்கறையும் ஆர்வமும் காட்டினார் . இப்போது அவர் எதிர்கட்சித் தலைவர். இவரை அமைதி குறித்த தேசிய ஆலோசனைக் குழுவுக்கு பிரதமர் மகிந்தா ராஜபக்ஷேயுடன் கூட்டுத் தலைமை வகிக்க, அதிபர் சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்தார். அதை ரனில் விக்கிரமசிங்க நிராகரித்து விட்டார்.

இதைக் குறை கூறி, 'அமைதிப் பேச்சு வார்த்தைகளைத் தொடருவதில் ஒரு நல்ல வாய்ப்பை ரனில் நழுவவிட்டுவிட்டார்' என்று ஆங்கில நாளேடு 'சண்டே அப்சர்வர்' தலையங்கத்தில் எழுதியிருந்தது.

பொதுமக்களிடம் 'ரனில் இப்படிச் செய்திருக்கக் கூடாது' என்ற கருத்தே வெளிப்பட்டது.

ஸ்ரீலங்கா லிபரல் பார்ட்டி செயலர் கமல் நிஸ்ஸங்க, "போர்ச்சுக்கீசியர்கள் 16ஆம் நூற்றாண்டில் நம்மைப் பாடாய்ப் படுத்தினார்கள். இப்போது புலிகளிடம் மாட்டிக் கொண்டு விழிக்கிறோம். அவர்களின் உத்திகள் உண்மையான அமைதிப் பணிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன. இடைக்காலத் தன்னாட்சி சபை அமைக்கச் சம்மதித்துவிட்டால், முதலில் பிற தமிழ்க் கட்சி உறுப்பினர்களை எல்லாம் ஒழித்துக் கட்டிவிட்டுவார்கள். நார்வேக்காரர்கள், பர்மிய கொரில்லாக்களுக்கு ரேடியோ, டீ.வி. கருவிகளை எல்லாம் கொடுக்கிறார்கள். அது தவறில்லை. ஏனென்றால் அங்கு நடப்பது சர்வாதிகார ஆட்சி. இலங்கையில் ஜனநாயக ஆட்சியல்லவா நடக்கிறது!'' என்கிறார்.

'நார்வே நாட்டின் எரிக் சோல்ஹீம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே பேசுகிறார்' என்ற குற்றச்சாட்டும் ஒரு சாராரிடம் வெளிப்படுகிறது. அதைச் சுட்டிக் காட்டுகிற மாதிரி, பி.பி.சியில் அவர் அளித்த பேட்டியில், "ராணுவம் விடுதலைப் புலிகளை அநாவசியமாகச் சீண்டுகிறது'' என்று சொன்னதைக்

குறிப்பிடுகிறார்கள். ஆனால் அதே பேட்டியில், அவர் விடுதலைப்புலிகள் தங்கள் எதிரிகளைக் கொல்லுவதையும் அவர் கண்டித்திருக்கிறார். கருணாவின் சகோதரர் ரெஜி புலிகளால் கொல்லப்பட்ட செய்தியை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் மிதவாதியான சம்பந்தன், ''விடுதலைப்புலிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை மிரட்டுகிறார்கள். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை உருவாகாமல், அவர்களுடைய பிடிவாதமான போக்கைக் கடைப்பிடிப்பதால்தான், அமைதிப் பணிகள் தேக்கம் அடைந்திருக்கின்றன'' என்று ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

பதினான்கு வருடங்களுக்குப் பிறகு, யாழ்ப்பாணத்தில் பள்ளிகள் - கல்லூரிகள் திறந்திருக்கின்றன. மாவட்ட மருத்துவமனையில் உள் நோயாளிகளும், புற நோயாளிகளும் சிகிச்சை பெற ஆரம்பித்திருக்கிறார்கள்.

நிலத்தின் விலை ஏறிக் கொண்டிருந்தாலும், யாழ்ப்பாணத்திலும், கொழும்புவிலும் பலர் நிலம் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்களாம். எல்லோரும் பயமின்றி நடமாட முடிகிறது. "நீங்கள் கூட சமயம் இருந்தால் யாழ்ப்பாணம் போய் வரலாம்!" என்றார். கதிர்காமத்தில் நாங்கள் சந்தித்த ரங்கராஜன் என்ற யாழ்ப்பாணத்துக்காரர். நுவரஎலியா சீதையம்மன் கோயில் குருக்கள் கோமகன் சர்மாவும் ''யாழ்ப்பாணத்தில் ஒரு பிரச்னையும் இல்லை. நான் போய் வந்து கொண்டுதான் இருக்கிறேன்'' என்றார். விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும், யாழ்ப்பாண ராணுவ கமாண்டர் சுனில் தென்னகூனும், முதல்முறையாக இப்போது சந்தித்துப் பேசினார்கள். இதனால் சுமுகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இருவரும் பேச்சு வார்த்தைகளில் திருப்தியும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் அரசியல் பிரமுகர்கள் பேச்சு வேறு மாதிரி இருக்கிறது. ஈ.பி.டி.பி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா மதனராஜா, "நான் என் கிராமத்துக்குள்ளேயே பாதுகாப்பாளரோடுதான் நடமாட முடிகிறது?" என்கிறார்.



• கொழும்பு...



• எரிச் சோல்ஹீம்

பத்திரிகை சுதந்தரமும், பேச்சு சுதந்தரமும் இருக்கின்றன. தமிழ்த் தினசரிகளில் விடுதலைப் புலிகள் சம்பந்தமான செய்திகளைப் படிக்கிற போதும், ஆங்கில தினசரிகளில் அரசு சம்பந்தமான செய்திகளைப் படிக்கிற போதும் இதை நன்றாக உணர முடிகிறது.

"தமிழர்களில் புலிகளை ஆதரித்துப் பேசுபவர்கள் ஐம்பது சதவிகிதம் பேர் இருந்தால், ஆதரிக்காதவர்கள் அதே போல ஐம்பது சதவிகிதம் இருப்பார்கள்" என்றார் ஒரு நண்பர். புலிகளை ஆதரிப்பவர்கள்கூட, 83ல் நடந்த இனக் கலவரம் போல் இன்னொரு முறை நடக்காதிருக்க வேண்டும் என்றால், புலிகளின் கை ஓங்கியிருக்க வேண்டும் என்று கருதுபவர்களாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

ஜாதிக ஹேல உருமய என்ற அமைப்பு, அதிபருக்கு ஒரு விசித்திரமான ஆலோசனை வழங்கி இருக்கிறது.

நார்வே நாட்டுடன் ஆன அரசியல் தொடர்பைத் துண்டிக்க வேண்டுமாம்.





• சரத் அமுனுகம

விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகார சபை திட்டங்களை நிராகரிக்க வேண்டுமாம். அத்தோடு, ராணுவம் புலிகளை எதிர்த்துத் தாக்குதல் நடத்தத் தொடங்க வேண்டுமாம்! இதை எல்லாம் வலியுறுத்தி, பத்து லட்சம் கையெழுத்துக்கள் வாங்கி அதிபரிடம் சமர்ப்பிக்கப் போகிறதாம் இந்த அமைப்பு. 'சண்டே அப்சர்வர்' இதழில், இதை முற்றிலும் நிராகரித்து, 'படு அபத்தமான ஆலோசனை' என்று சாடியிருக்கிறார் அதன் ஆசிரியர்.

சேது கால்வாய்த் திட்டத்துக்காகக் கடலைத் தோண்டும்போது, பவளப் பாறைகளைப் பெருமளவு அழிக்க நேரிடும். இந்தப் பவளப் பாறைகள் இலங்கையில் வட பகுதியிலுள்ள பல தீவுகளுக்குப் பாதுகாப்புச் சுவர்போல இருக்கின்றன. இந்தப் பாறைகளை அழிப்பதால், தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்படும் என்ற அச்சம் காணப்படுவதாக இலங்கை மக்களிடையே எழுந்திருக்கிறது.

இதை வெளிப்படுத்தும் விதமாக, 'இலங்கைக்குப் பெரும் சவாலாக சேது சமுத்திரக் கால்வாய் : கொழும்பு ஆட்சேபணையை தில்லி புறக்கணிப்பு' என்று 'தினக்குரல்' தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவில் (NEERI) அமைப்பு சாதகமான அறிக்கை நமக்குத் தந்தது போல, இலங்கையில் உள்ள என்வயர்மென்ட் ஃபவுண்டேஷன் லிமிடெட் (EFL), சுற்றுச்சூழல் பாதிப்பு ஸ்ரீலங்காவுக்கு அதிகமாக இருக்கிறபடியால், இதில் ஸ்ரீலங்காவின் கருத்தையும் இந்தியா கேட்டிருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறது.

"பெட்ரோல் விலை - டீசல் விலை உயர்ந்தாலும், விலைவாசி கூடினாலும், எங்கள் நாட்டுப் பொருளாதாரம் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. ஊழியர்களுக்குச் சம்பள உயர்வும் கொடுக்கப்பட இருக்கிறது. வேறு எந்த அரசுமே பதவி ஏற்ற இந்தக் குறுகிய காலத்தில் இத்தனை வாக்குறுதிகளை நிறைவேற்றியதில்லை!" என்று கூறுகிறார் நிதி அமைச்சர் டாக்டர் சரத் அமுனுகாம. அமைதி தொடர்ந்து நிலவுமானால், நாட்டின் பொருளாதாரம் மேம்பட வாய்ப்பு இருக்கிறது.

கொழும்பு, கண்டி போன்ற பெரு நகரங்களில் வாணிபம் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. பஜாஜ் ஆட்டோக்கள்தாம் எங்கு பார்த்தாலும் ஓடுகின்றன. பஸ்கள் பெரும்பாலும் அசோக் லேலண்டும், டாடாவும்தான். தினசரிகளில், வேலை வாய்ப்புப் பக்கங்களில் மனிதவளத்துறை, கம்ப்யூட்டர் துறைகள் சார்ந்த விளம்பரங்களை நிறையவே பார்க்க முடிந்தது.

ஆகஸ்ட் 94ல் சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்தபோது, 'ஊழலற்ற, புதிய சமுதாயத்தை உருவாக்குவேன்; வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் அமைதி திரும்ப அரசியல் ரீதியான தீர்வு காண்பேன்' என்று அப்போது அவர் அறிவித்தார். ஆனால் நடைமுறையில் அது சாத்தியமாகவில்லை.

"நாட்டின் பெரும்பான்மை மக்கள் சமாதானத்துக்கே ஆதரவாக இருந்தும், சமாதானம் தொடர்பான அழுத்தத்தை நாட்டின் தலைவர்களுக்கு வழங்கக் கூடிய பலம் மிக்க ஒரு தேசிய இயக்கம் இங்கு இல்லாதது கவலைக்குரிய விஷயம்" என்கிறார் கலாநிதி குமார் ரூபசிங்க என்னும் ஆய்வாளர்.

அப்படி ஓர் இயக்கம் தோன்றி, வன்முறை முற்றிலும் ஓய்ந்து, அமைதி தொடர்ந்து நிலவுமானால், இலங்கை மக்கள் அதிர்ஷ்டசாலிகள்தாம்!

- சாருகேசி

புகைப்படங்கள் : **யோகா**

நடக்குமென்றார் நடக்கும்!

அக்னிசர்மா பக்கம்

அக்டோபர் 20 முதல் 26 வரை

மேஷம்: எதுக்கும் உங்க பாக்கெட்டைப் பாருங்க. துணிவும் நம்பிக்கையும் சேர்ந்து கிடக்கும். அப்புறம் என்ன, தொட்டதெல்லாம் வெற்றிதான். எதிரிங்களைத் தேடாதீங்க. பாவம், அட்ரஸைத் தொலைச்சிட்டு நிக்கிறாங்க. உத்தியோகத்திலயும் உங்க விருப்பம் போலவே அனுகூலத் திருப்பம்தான். ஓட்டல், டிராவல்ஸ், ஃபர்னிச்சர் வியாபாரிகளோட பேங்க் பாலன்ஸ் ஏறிப் போயிடும். குடும்பத்தில உடன் பிறந்தவர்களால் அனுகூலங்கள் ஏற்படும். பெண்களுக்கு எண்ணம் ஈடேறும்.

ரிஷபம்: தாராளமான பண நடமாட்டம், விஐபிக்கள் ஆதரவு, திடீர்ப் பயணம், புதுமுகம் அறிமுகம்னு எல்லாமே மனசுக்கு சந்தோஷம் தர்ற நாட்கள்தான். அப்புறம் என்ன, நல்லா எஞ்சாய் பண்ணுங்க. ஆபீஸ்ல பொறுப்பு கூடினாலும், உங்களுக்கு ஆதரவும் அனுகூலமும் கூடும். எலக்ட்ரானிக்ஸ், மருத்துவம், பத்திரிகை துறைகள்ல இருக்கறவங்க மேன்மை பெறுவாங்க. ஏற்றுமதி - இறக்குமதி தொழில்ல அமோக லாபம் இறக்குமதியாகும். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். சுபகாரியங்கள் நிறைவேறும். பெண்களுக்கு உற்சாகம், விருந்து உல்லாசம்னு சந்தோஷமான வாரம்.

மிதுனம்: - கிரிஸ்டல் க்ளியர்னு சொல்வாங்களே, அந்தத் தெளிவான தெளிவு உங்க மனசில இருக்கும். எல்லாம் தெய்வபலமும் அருளும்தான். கல்வி, ஆராய்ச்சின்னு இருக்கறவங்களுக்கு சாதனை படைக்கிற நேரங்க இது. உத்தியோகத்தில உங்க கோரிக்கைகள் உடனே கவனிக்கப்படும். புது முயற்சிக்கான யோசனை ஏதும் இருந்தா துணிஞ்சு இறங்கலாம். கலைத்துறை, கம்ப்யூட்டர், ஜவுளி தொழில்கள்ல இருக்கறவங்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் எல்லாம் மாமூலாக நடந்தாலும், எதிர்பாராத செலவுகள் கொஞ்சம் காத்திருக்கு. உஷாரா இருங்க. பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மை உண்டாகும்.

கடகம்: கைக்குமில்லாம வாய்க்குமில்லாம தடுத்துகிட்

மீன ராசிக்காரரான உமா கிருஷ்ணனுக்கு (த்ரிஷாவின் அம்மா) நினைச்சதெல்லாம் நிறைவேறுமாம்!



டிருந்த வழக்கு, வியாஜ்யம் எல்லாம் சுத்தி வந்து நமஸ்காரம் பண்ணிட்டுப் போயிடும். ஒவ்வொரு திருப்பமும் உங்க விருப்பம் போலத்தான். உற்சாகம் தன்னால வந்து சேரும். ஆபீஸ்லயும் அதே அனுகூலக் காற்று எல்லாத்தையும் உங்களுக்குச் சாதகமாக்கி விடும். கோரிக்கைகள், புதிய முயற்சிகள் எல்லாம் வெற்றிகரமா ஈடேறும். காண்ட்ராக்ட்ஸ், கமிஷன், டிராவல்ஸ், ஏற்றுமதி இறக்குமதி தொழில்கள்ல அமோக லாபம் கிடைக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு மறைஞ்சு, ஒற்றுமையும் மகிழ்ச்சியும் வளரும். பெண்கள் எண்ணம் போல எல்லாம் நிறைவேறும்.

சிம்மம்: முக்கியமான, நல்ல காரியங்கள் எல்லாம் பெண்டிங்ல இருந்திச்சல்லியா? 23ம் தேதி வரை பொறுங்க. அப்புறம் எல்லாம் ஆடாம ஆசையாம, அலையாம, ரிமோட் கண்ட்ரோல்லயே செய்து முடிச்சுடலாம். எதிர்பாராத செலவுகள் கொஞ்சம் வருது, உஷாராயிருங்க. உத்தியோகத்தில பதவி உயர்வு, இடமாற்றம்னு அனுகூலமான இருப்பங்கள் ஏற்படும். ஓட்டல், லாட்ஜ், டிராவல்ஸ், ரெடிமேடு ஜவுளி, ஃபர்னிச்சர் தொழில்கள்ல இருக்கிறவங்களுக்கு லாபம் கொழிக்கும். குடும்பத்தில நிம்மதி, புதுவீடு, சொத்து சேர்க்கை, சுப காரியம் ஈடேறுதல்னு நிறைவா இருக்கும். பெண்கள் புதுசு புதுசா பொருள்கள் வாங்கி உற்சாகமாயிருப்பாங்க.



பரிகாரம்

வீட்ல தொடங்கிற சுப காரியம் நல்லபடியா நடக்கவும், நடுவில இருக்கிற தடங்கல்களை நீக்கவும், சம்பந்தப்பட்ட பெண்கள் காமாக்ஷி அம்பாளை வேண்டிக்கறதும், ஒரு வெள்ளிக்கிழமை காமாக்ஷி பூஜையோ, கோயில்ல அர்ச்சனையோ செய்யறதும் நல்ல பலனைத் தரும். செய்யற எதையும் திடமான, முழு நம்பிக்கையோட, ச்ரத்தையா செய்யுங்க.

கன்னி: அங்கே இங்கேன்னு அட்ரஸ் தேடி, 23ம் தேதிதாங்க சுக்கிரன் உங்க ஜென்ம ராசிக்கு வந்து சேர்ந்து, ஒரு அசத்து அசத்தப் போறாருங்க. கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. வழக்கு, விவகாரங்கள் எல்லாம் சொல்லாமக் கொள்ளாம காணாமப் போயிடும். உத்தியோகத்தில புதுசா ஏதும் முயற்சி பண்றதா இருந்தா கொஞ்சம் தள்ளிப் போடுங்க. மருத்துவம், கெமிக்கல்ஸ், உலோக வகை, எலக்ட்ரானிக்ஸ் வகை தொழில்கள்ல இருக்கிறவங்களுக்கு ஆதாயம் கூடும். குடும்பத்தில் சுப மங்கள காரியங்கள் மகிழ்ச்சி தரும். பெண்களுக்கு மகிழ்ச்சிகரமான வாரம்.

துலாம்: போட்டு வெச்ச திட்டமெல்லாம் கூட்ஸ் வண்டியா போயிக்கிட்டிருந்த நிலைமை மாறி, எக்ஸ்பிரஸ் வேகத்தில நிறைவேறப் போகுது. புதியவர்கள் சந்திப்பும் எதிர்பாராத பயணமும் காத்திருக்கு. ஆபீஸ்ல எல்லாப் பக்கமும் குழப்பமும் எதிர்ப்புமா இருந்த நிலை மாறிடும். அதிகாரிகள் அனுகூலமா இருப்பாங்க. ஆபரணத் தொழில், எலக்ட்ரானிக்ஸ், சட்டம், ராணுவம், காவல் துறைகள்ல இருக்கிறவங்க முன்னேற்றம் காண்பாங்க. குடும்பத்தில சந்தோஷமான சுபச் செலவுகள் காத்திருக்கு. குல தெய்வப் பிரார்த்தனை ஏதும் பாக்கியிருந்தா நிறைவேத்திடுங்க.

விருச்சிகம்:- தெய்வ காரியங்கள்ல இருக்கிற ஈடுபாடு, உங்க ஆன்ம பலத்தைக் கூட்டி அனுகூலமான திருப்பங்கள் ஏற்படுத்தும். விஐபிக்களோட ஆதரவும் சரளமான பண வசதியும் கிடைக்கும். உத்தியோகத்தில பின்னால, பக்கத்தில, நின்னு பேசி, காலை வாரினவங்க காணாமப் போயிடுவாங்க. அதிர்ஷ்ட தேவதை உங்க அட்ரஸைத் தேடி ஆபீஸுக்கு வந்து சேரப் போகுது. குடும்பத்தில குதூகலம் நிறைஞ்சிருக்கும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

இது நல்ல வாரம்				
கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	அக். 20 (ஐப்.4)	பூராடம்	ஸப்தமி	-
வியாழன்	அக். 21 (ஐப்.5)	உத்திராடம்	அஷ்டமி	திருவல்லிக்கேணி ஸ்ரீபெரும்புதூர் சிரவண ஆராதனை
வெள்ளி	அக். 22 (ஐப்.6)	திருவோணம்	நவமி	சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை
சனி	அக். 23 (ஐப்.7)	அவிட்டம்	தசமி	விஜயதசமி
ஞாயிறு	அக். 24 (ஐப்.8)	சதயம்	ஏகாதசி	சுப நாள். ஸ்ரீரங்கம் புஷ்பாங்கி ஸேவை
திங்கள்	அக். 25 (ஐப்.9)	பூரட்டாதி	துவாதசி	காஞ்சி, சிதம்பரம் ருத்ராபிஷேகம்
செவ்வாய்	அக். 26 (ஐப்.10)	உத்திரட்டாதி	திரயோதசி	படவேடு, திருவேற்காடு உற்சவம்

தனுசு: எந்தப் பக்கம் பார்த்தாலும் குழப்பம், தயக்கம்னு இருந்த உங்க சூழ்நிலை மெல்ல தெளிய ஆரம்பிக்கிற நேரங்க இது. புதிய திருப்பங்களை புத்திசாலித்தனமா பயன்படுத்திக்குங்க. தெய்வீக ஈடுபாடுதான் உங்க பக்கபலம். உத்தியோகத்திலயும் புதிய முயற்சிகள் ஏதும் இருந்தா ஆரம்பிக்கலாம். குடும்பத்திலயும் கிழக்கும் மேற்குமா இருந்தவங்க கருத்து வேறுபாடு மறைஞ்சு ஒற்றுமை ஆயிடுவாங்க. எதிர் பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். பெண் களுக்கு புதிய பொருள் சேர்க்கையால மகிழ்ச்சி கூடும்.

மகரம்: புதுப்புது அறிமுகங்கள், தாராளமான பண நடமாட்டம்னு உற்சாக வாரம்க இது. எதிர்ப்புகள் அடங்கி அட்ரஸ் இல்லாமப் போகும். உத்தியோகத்திலயும் சக ஊழியரும் அதிகாரிகளும் ஆதரவா இருப்பாங்க. புதிய முயற்சிகள் வெற்றி பெறும். தோல் பொருள், எண்ணெய் வகை, பொன், வெள்ளி, இரும்பு, வியாபாரம் மேன்மை அடையும். பெண்களுக்கு ஆதரவான, அனுகூலமான திருப்பங்கள் காத்திருக்கு.


கும்பம்: உங்க ராசிக்கான கிரக சஞ்சாரத்தில் கொஞ்சம் ட்ராபிக் ஜாம் இருக்கிறதால, கொஞ்சம் அடக்கி வாசிக்க வேண்டிய நேரங்க இது. எதுக்கும் அவசரப்பட்டு முடிவெடுக்காதீங்க. பொறுமை ரொம்ப அவசியம். சிக்கனம் அதைவிட முக்கியம். புதிய மனிதர்கள்கிட்ட ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். ஆபிஸ்லயும் இதேமாதிரி அமைதியா இருக்கறதுதான் நல்லது. புது முயற்சிகள் இப்ப வேண்டாம். குடும்பத்திலயும் எதிர்பாராத செலவுகள் இருக்கும். தயாரா இருங்க.

மீனம்: நீங்க வெச்சதுதாங்க சட்டம். இட்டமிட்டபடியே எல்லாம் நிறைவேறும். ஆனாலும் நிதானமாவே நடத்துங்க. உத்தியோகத்தில சுமுகமான சூழ்நிலை நிலவும். பண நெருக்கடி தீரும். புதிய தொழில் தொடங்க யோசனை செய்பவர்கள் தைரியமா தொடங்கலாம். கெமிக்கல்ஸ், ஃபர்னிச்சர், குடும்பத்திலயும் உறவினர், உடன்பிறந்தவர் உதவியால புதிய வீடு, சொத்து வாங்கற யோகம் அமையும். பெண்களுக்கு குழப்பமான மன நிலை தெளிவு பெறும். மகிழ்ச்சி கூடும்.

● நகை இ.மகராசன், சின்னமனூர்

? "காலை உணவு சாப்பிடும் நேரத்தில் முக்கியத் தலைவர்கள், அதிகாரிகளைச் சந்திப்பதால் பிரச்னைகளும் சந்தேகங்களும் உடனுக்குடன் தீர்ந்து விடுகின்றன" என்கிறாரே பிரதமர்?

! அவருக்குக் காலை உணவு நன்றாக ஜீரணமாகி உடம்பில் ஒட்டப் பிரார்த்திப்போம்.



• ஜாமீன் அலி

முகமது அலிக்கு ஜாமீன் கிடைத்துள்ளதே?

● மோகன், சிதம்பரம் - 1

? டெண்டுல்கர் இல்லையென்றால் இந்திய அணி மரவட்டையைப் போல் சுருண்டுவிடுகிறதே?

! இது ஒரு மாயைதான். டெண்டுல்கர் இல்லாத போட்டிகளில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். டெண்டுல்கர் ஆடியும் தோற்றிருக்கிறோம். விளையாட்டில், இரு தரப்பு ஆட்டத்தையும் ரசிக்கப் பழக வேண்டும். பெங்களூரில் ஆஸ்திரேலியாவின் அபார ஆட்டத்தை எண்ணிப் பார்த்தால், மரவட்டை போல் நம் மனம் சுருண்டு கொள்ளாது.

● ஏ.எஸ். செல்வகுமார், குடியாத்தம்

? வினோத் கன்னா, பிரகாஷ் கோயல், கன்ஷிராம், ராணா... இன்னும் பலர், முன்பு பதவியிலிருந்தபோது தங்கிய அரசு வீடுகளைக் காலி செய்யாமலே உள்ளனராமே...?

! "வெளிநாட்டு சொகுசு கார் வேண்டாம், அம்பாஸிடரே போதும்" என்று சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி திருப்பி அனுப்பினார் என்று வந்திருக்கும் செய்தியைப் படித்துச் சற்றே ஆறுதல் கொள்க! நல்லதும் நடக்கிறது நம் நாட்டில்.

● அ. ராதா, பொன்னன்திட்டு

? இன்றைய திரையுலகின் உண்மை

• நம்பிக்கைப் பிரகடனம்





• பிச்சை நாடகம்!

...பான சூப்பர் ஸ்டார் யார்...?

! நல்ல கதை!

● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? 'எனக்கு ஜோசியத்தில் நம்பிக்கை இல்லை' என முதல்வர் பி.பி.சி. பேட்டியில் தெரிவித்துள்ளாரே...?

! கரெக்ட்தானே! 'பரிகாரங்களில் நம்பிக்கை இல்லை' என்று சொல்லவில்லையே!



* பொறுத்துப் பாருங்க!

● கே.வி.நாதன், நெய்வேலி - 3

? தினமும் ஐம்பது பேரிடம் பிச்சை எடுத்தாவது மத மாற்றத்தைத் தடுப்பேன் என்று இராமகோபாலன் கூறியுள்ளது குறித்து?

! வேலை வாய்ப்பின்மையையும் அதன் விளைவான ஏழைமையையும் ஒழித்து, தீண்டாமையையும் நிராகரிக்கப் பாடுபட்டால் போதுமே... பிச்சை எடுக்கும் நாடகமெல்லாம் எதற்கு!

● எச். ஆண்டனி தமிழரசன், மும்பை - 17

? நானூறு விக்கெட் வீழ்த்தி சாதனை படைத்த அனில் கும்ப்ளே பற்றி...?



* இரட்டைப்...

! கபில்தேவை அடுத்து நானூறை எட்டியவர் என்பதால், நம் நாட்டுக்கு இரட்டிப்புப் பெருமை.

● அ. அப்துல் காதர், விளாத்திகுளம்

? ஒருவர் சுயசரிதை எழுதத் தேவைப்படும் தகுதிகள் யாவை?

! 1) எழுதினால் நான்கு பேர் படித்துப் பயன்பெறும் அளவுக்கு வாழ்க்கை அனுபவங்கள்

2) சுவைபட எழுதும் ஆற்றல்

3) தனது செயல்களையெல்லாம் நியாயப்படுத்த முயற்சி செய்யாமல் உண்மைகளை எழுதும் மனப்பக்குவம்.

● டி. முருகேசன், திருவாரூர் ❑

? 'இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் தேர்தலில் நிற்கத் தடை விதிப்பது சரியல்ல' என்கிறாரே மணி சங்கர் அய்யர்?



* பெருமை!

! அவர் சொல்வது சரிதான். இதனால் பெரிதும் பாதிக்கப்படக்கூடியவர்கள், பஞ்சாயத்து நிலையில் உள்ள பெண்கள். கஷ்டப்பட்டுத் தளைகளை உடைத்துக் கொண்டு, தயக்கத்தை உதறி அரசியலுக்கு வந்த எளியவர்கள் பலர், திடீரென்று உரிமை பறிக்கப்பட்டு ஒன்றுமில்லாமல் போகிறார்கள்.

● என். சண்முகம், திருவண்ணாமலை

? தபால்துறைக்கு 150 வயது... இதன் சாதனையாக நீங்கள் கருதுவது...?

! ஐம்பது பைசாவில் நாட்டுக்குள்ளே எந்த மூலைக்கும் தகவலைக் கொண்டு சேர்க்கும், தொடர்பை ஏற்படுத்தித் தரும் பணி.

● செய்யது அலி, திரு நெல்வேலி - 5

? ஜி.கே.வாசன் பற்றி எந்தச் செய்தியும் இல்லையே....? இப்போது அவர் எந்த நிலையில் உள்ளார்?



● மாஸ்டர் பிளாஸ்டர்!



✱ காலைக் கவலை!



✱ அம்பாசிடர் ஆறுதல்

! பொறுங்க! காங்கிரஸை நெ.1 ஆக்குகிற முயற்சியில் இறங்கியிருக்கிறதாச் சொல்லியிருக்கிறார்.

● வி.கே. ஸ்வாமி, நெய்வேலி - 3

? ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக உளவுத்துறை கூறியது தவறு என்று டோனி பிளேர் முதன்முதலாக ஒப்புக் கொண்டிருக்கிறாரே...?

! ஒப்புக் கொண்டது இருக்கட்டும். உளவு சொல்லிக் கவிழ்த்த அதிகாரிகளுக்குப் பட்டம் தந்து கௌரவிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்த அக்கிரமத்தை எங்கே போய்ச் சொல்ல!

● எம். பாஸ்கர், திண்டுக்கல்

? அரசியலில் நானாக வளர்ந்தேன். யாரும் தங்கத் தாம்பாளத்தில் தாங்கி என்னை வளர்க்கவில்லை என்று ஜெயலலிதா கூறியுள்ளது பற்றி...?

! ஹய்யோ பாவம் எம்.ஜி.ஆர்.!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்

? போலி முத்திரைத்தாள் மோசடி

ஒரு தகவல்!



ரயில்வேத் துறையில் பணிபுரியும் லதா, ஆண் அதிகாரிகளால் ஏற்பட்ட தொல்லைகளை எதிர்த்து தேசிய பெண்கள் ஆணையம் வரை சென்று தைரியமாகப் போராடி வருகிறார். இதுபோல பாதிக்கப்படும் பெண்கள் பலருக்கு எங்கு புகார் தருவது என்பது தெரியவில்லை.

18 வயதிற்குட்பட்ட பெண் ஏதாவது பாதிப்பு என்றால் 1098 என்ற எண்ணுக்குத் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். இந்த எண் ஆண்/பெண் இருவருக்கும் பொதுவானது. 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஏற்படும் பாலியல் பலாத்காரம், வரதட்சிணை, மாமியார் கொடுமை... போன்ற எது நடந்தாலும் 1091 என்ற எண்ணுக்கு டயல் செய்து தெரியப்படுத்தலாம். தேசிய பெண்கள் ஆணையத்தின் தொலைபேசி எண் 22200375.

- முத்து

வழக்கில் முகமது அலிக்கு ஜாமீன் கிடைத்துள்ளது பற்றி...?

! தமிழக அரசின் ஒத்துழையாமை அவருக்குப் பெற்றுத் தந்த பரிசு என்று ஸி.பி.ஐ. சொல்கிறது.

● கொ.மூர்த்தி, குட்டலாடம்பட்டி

? குங்குமம் இதழ் 9,00,000 பிரதிகள் விற்பனை ஆகியுள்ளது குறித்து...?

! மலிவு விலைப் பொருள்களுடன் இலவசமாக வழங்கப்படும் இதழ் ஆகி விட்டது வருந்துதற்குரியது. இது ஆரோக் கியமான வளர்ச்சி அல்ல. பத்திரிகைகள் தரத்துக்காகவே விற்பனையாகும் நிலை உருவாகும்போதுதான், தமிழன் பெருமைப்பட முடியும்.

● த.சத்தியநாராயணன், அயன்புரம்★

? பகுத்தறிவு என்பது ஆன்மிகத்தின் எதிரியா? நண்பனா?

! ஆன்மிகத்தின் பெயரால் நடக்கும் மூடப்பழக்கங்களையும் தீமைகளையும் ஒழிக்க முயல்வதால், உண்மையான பகுத்தறிவு, ஆன்மிகத்தின் உண்மையான நண்பன்தான். பகுத்தறிவு என்ற பெயரில் ஆன்மிகத்தை எதிர்க்க முற்படுகிறவர் கள்தான் அதன் எதிரிகளாகின்றனர்; பகுத்தறிவு அல்ல.

□ ரூ.100 பரிசு பெறுபவர் :
டி. முருகேசன்,
3/151, ஜி.ஆர்.டி. கார்டன் (மாடி),
திருவாரூர் - 610 001.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
த. சத்தியநாராயணன்,
13/7, கிழக்கு காலனி,
ஐ.சி.எஃப்.,
சென்னை - 600 038.



விருதுக்கு

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கோலாகலமாய் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிகழ்ச்சியில், தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு தங்கத் தாரகை விருது வழங்கப்பட்டது. விருதை வழங்கியவர், ஐ.நா. சபையின் ஆலோசனை அமைப்பான 'சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் தலைவி நத்தாலியா கிறிவுட்சா.

ஐ.நா செயலாளர் கோபி அனன், ருஷ்ய அதிபர் புதின் உட்பட பல தலைவர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவம், முதல் தடவையாக ஆசியாவைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்குக் கிடைத்துள்ளது. ''மனித உரிமைகளைக் காப்பாற்றவும், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவும் பாடுபடும் தலைவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது'' என்கிறார் மனித உரிமைப் பாதுகாப்புக் குழுவின் இயக்குனரான அல்பர்ட் கிட்சர். விருது வழங்கும் விழாவில் ''பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர பாடுபடுகிறார் ஜெயலலிதா'' என்றார் மனித உரிமை பாதுகாப்புக் குழுவின் செயலாளரான நத்தாலியா.

''முதலமைச்சருக்கு, தங்கத் தாரகை விருது வழங்கும் விழாவுக்கு நானும் சென்றிருந்தேன். சர்வதேச அமைப்பு ஒன்று நம் முதலமைச்சருக்கு விருது கொடுப்பது சாதாரணமான விஷயமா? அந்த விருதுக்கு முற்றிலும் தகுதியானவர் நம் முதல்வர். அவருக்குக் கிடைத்திருக்கும் விருதுக்காக, ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் சந்தோஷப்படலாம்'' என்கிறார் நடிகை மனோரமா.

''ஜனநாயக மரபுகளை மிதிக்கும் ஏதேச்சாதிகாரப் போக்கு கொண்ட ஜெயலலிதாவுக்கு, மனித உரிமை பாதுகாப்புக் குழு விருது வழங்கியிருப்பதை ஏற்க முடியாது. தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட பொடா சட்டத்தை, அதிகபட்ச துஷ்பிரயோகம் செய்தவருக்கு, மனித உரிமைகள் பாதுகாப்புக் குழுவின் விருது கொடுப்பது எப்படிச் சரியாகும். பத்தொன்பது மாத காலம் வைகோவை சிறையிலிட்டது, எந்த மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு என்று எனக்குத் தெரியவில்லை'' என்கிறார் காங்கிரஸ் பிரமுகர் கோபண்ணா.



மூத்த பத்திரிகையாளர் சின்னக்குத்தூசி ''ஜெயலலிதா ஆட்சியின் போது, ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்திரலேகா மீது ஆசிட் வீசி, கொல்ல முயன்றார்கள். ஆஸ்பத்திரியில் இருந்த சந்திரலேகாவை, மனிதாபிமான அடிப்படையில் சென்று பார்க்கவில்லை அப்போது முதல்வராக

* லதா

குதியானவர்தானா ஜெ.?

ருந்த ஜெயலலிதா. ஆயிரக்கணக்ான சாலைப் பணியாளர்கள், க்கள் நலப் பணியாளர்களை ீட்டுக்கு அனுப்பியவர். ஒரு சாட்டு மையில் ஒரு லட்சம் அரசு ழியர்களை டிஸ்மிஸ் செய்தவர் ஜெயலலிதா'' என்கிறார்.

'தங்கத் தாரகை' விருது கொடுக்கப்பட்ட அதேநாள், கடலூரில் மனித உரிமை ஆர்வலர்கள் மீது போலீஸின் அத்துமீறல்கள் நடந்தன. தங்கத் தாரகை விருது பெற அவருக்கு எந்தத் தகுதியுமில்லை'' என்கிறார் கோபண்ணா.

பத்திரிகையாளர் சுதாங்கனின் கருத்து வேறு மாதிரி இருக்கிறது.

"இது ஆணாதிக்க சமூகம். நம் நாட்டில் மட்டுமில்லை, உலகமெங்கும் அதே நிலைதான். 'மனித உரிமை, மனித உரிமை' என்று கூக்குரலிடுபவர்கள், இந்த சமுதாயத்தில் பெண்களுக்கு உரிய உரிமைகள் பற்றிப் பேசுகிறார்களா? அப்படிப்பட்ட சூழ்நிலையில், பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் ஏராளமான மகளிர் காவல் நிலையங்கள் அமைத்திருக்கிறாரே நமது முதலமைச்சர். இது சாதனையில்லையா? அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் மூலம் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளனவா என்பது அங்கே போய் விசாரித்தால் தெரியும்'' என்கிறார் அவர்.

ஆனால், "காமராஜர் கொண்டு வந்த மதிய உணவு திட்டத்தை, அவருக்குப்பின் வந்தவர்கள் விஸ்தரித்தது போல, கருணாநிதியின் 'அனைத்து மகளிர் காவல் திட்டத்தை' ஜெயலலிதா இன்னும் விரிவாக்கினார். இது எப்படி சாதனையாகும்?" என்று கேட்கும் சின்னக்குத்தூசி, "முன்பு அமெரிக்காவில், ஒரு தெருவுக்கு ஜெயலலிதா பெயர் சூட்டப் பட்டதாகப் பெரி



• சின்னக்குத்தூசி



• சுதாங்கன்

சாய் விளம்பரப்படுத்தினர்கள். அப்புறம்தான், ஐந்நூறு டாலர் கட்டினால் யாரும் எந்தப் பெயரையும் அந்தத் தெருவுக்குச் சூட்டிக் கொள்ளலாம் என்பது தெரிந்தது

இப்போது என்னவென்றால், ஐ.நா. சபை விருது என்கிறார்கள். அறிவித்த மூணாவது நாள் இங்கேயே வந்து கொடுத்துவிட்டுப் போகிறார்கள். இதன் பின்கதை என்னவோ?" என்று சந்தேகத்தையும் எழுப்புகிறார்.

அதோடு, "கர்நாடக அமைச்சர் நாகப்பா கடத்தப்பட்டபோது, அவரது மனைவி ஜெயலலிதாவைச் சந்தித்து,


• மனோரமா

தமது கணவரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ள முயற்சி செய்தபோது, முதல் தடவை சந்திக்க நேரமே தரவில்லை. இரண்டாவது தடவை, வாக் குறுதி ஏதும் தரவில்லை.

செரீனா மீது கஞ்சா கேஸ் போட்டார்கள். ஜெய லட்சுமி விவகாரம் சந்தி சிரிக்கிறது. தமிழ்நாட்டின் காவல்துறை யின் அமைச்சர் என்ற முறையில், இது வரை ஏதாவது வாய் திறந்து கருத்துச் சொல்லியிருக்கிறாரா ஜெயலலிதா? மனிதாபிமானம், மனித உரிமைகளை மதிப்பது இரண்டு மில்லாதவருக்கு, மனித உரிமை பாதுகாப்புக்குழு, தங்கத் தாரகை விருது தந்திருப்பது விசித்திரம்தான்!" என்பதும் சின்னக் குத்தூசியின் வாதம்.

ஆனால் சுதாங்கனோ, "ஆணும் பெண்ணும் சமம் எ[ன்று] வெறும் வாயால் சொல்லி[க்] கொண்டேயிருந்தா[ல்] போதுமா? அதைச் செய[ல்] படுத்தும் விதமாக, தாயி[ன்] பெயரை முதலெழுத்தாக[ப்] போடலாம் என்று கொண்[டு] வந்தது புரட்சி இல்லாம[ல்] வேறு என்ன? இந்த ஒ[ரு] விஷயத்துக்காக, தங்க தாரகை விருது என்ன, நோபல் பரி[சே] பெற அவர் தகுதியானவர் என்பேன்" என்று ஒரே போடாகப் போடுகிறார்.

உழைக்கும் பெண்கள் ஒரு[ங்] கிணைப்புக் குழுவின் மாநிலத் துணை அமைப்பாளர் லதா, "விருது தந்[த] அமைப்பு ஐ.நா.வின் ஆலோசனை அமைப்பு என்று சொல்லப்படுகிறது. அதன் பின்னணி குறித்து எனக்குத் தெரியாது. ஆனால் அந்த அமைப்[பி]னர் தமிழகத்தில் வாழ்ந்திருந்தா[ல்] விருது அளித்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். இங்கு உழைக்கும் பெண் வர்க்கத்தினரிடம் எந்த முன் னேற்றமும் இல்லை" என்கிறார்.

"மின் வாரியத்தில் பகுதி நேர ஊழி யராக மூவாயிரம் பெண்கள் பணி புரிகிறார்கள். இவர்கள் அத்தனை பேரும் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றோர். இவர்களின் மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? வெறும் 125 ரூபாய்!

இது மட்டுமல்ல... துப்புரவுப் பணி செய்யும் பெண்களை நைட்ஷிப்டுக்கு வரச் சொல்லி வற்புறுத்துகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, அடித்தட்டு பெண்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது. நானே பல முறை முதல்வரை நேரடியாகச் சந் தித்து பெண்கள் மேம்பாடு குறித்து வலி யுறுத்தியிருக்கிறேன். ஆனால் முழுமை யான தீர்வு கிடைத்த பாடில்லை.

இந்நிலையில் முதல்வருக்கு 'மகளிர் மேம்பாட்டுக்கான விருது' என்பது சரியல்ல!" என்று அடித்துப் பேசுகிறார்.

- எஸ். சந்திரமௌலி

கேட்டல் நன்று!


தமிழ் இலக்கியங்களை ஒலி வடிவில் கொண்டு வரும் முயற்சியில் இருக்கிறார் தொழிலதிபர் வி.கே.டி. பாலன். முதலில் ஆடியோ சிடி வடிவில் வரவிருப்பது கண்ணதாசன் இயற்றிய இயேசு காவியம்.

அறிவிப்பாளர் அப்துல் ஹமீத், கிரிக்கெட் வர்ணனையாளர் அப்துல் ஜபார் ஆகியோருடன் பாலனும் குரல் கொடுக்கப் போகிறார். தொடர்ந்து கம்பராமாயணம், மகாபாரதம் ஆகியவையும் ஆடியோ சிடியாக வருமாம்.



- சிவா

வட்டமேஜை



வாரியம் இருக்கிறது...

✉ 'மனம் வைப்பாரா முதல்வர்' என்ற தலைப்பில் திருபன்னீர்செல்வம் என்பவர், கட்டட வேலை செய்யும்போது பாதிக்கப்பட்ட விவரம் அறிந்தேன். தமிழக அரசு கட்டடத் தொழிலாளர்களுக்கென்று தனி வாரியம் ஏற்படுத்தி இருக்கிறது. இதில் ரூ.25/- மட்டும் செலுத்தி பதிவு செய்து கொள்ளலாம். இதற்கு அடையாளமாக புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ரூ.10/- மட்டும் செலுத்தி அடையாள அட்டையினை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்து கொண்ட தொழிலாளி விபத்துக்கு உள்ளானால் ரூ.1,00,000/- இழப்பீடு கிடைக்கும். மேலும் மனைவியின் பிரவசத்திற்கான செலவு, 10, 11ம் வகுப்பு படிக்கும் குழந்தைகளின் கல்வி, மகளின் திருமணம், அறுபது வயது கடந்தவர்களுக்கு ஓய்வூதியம் ஆகியவற்றிக்கும் உதவுகின்றனர். தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரியம், நுங்கம்பாக்கம் ஸ்டெர்லிங் சாலையில் இயங்கி வருகிறது.

- சு.கிருபாநிதி, சென்னை.

✉ 'அந்த ஒரு கேள்வி' போஸ்ட் கார்டு கதை, நெஞ்சை உருக வைத்தது என்று நெகிழ்கிறார் திருவாரூர், ஆர். ராமசுப்ரமணி.


✉ சுந்தர ராமசாமியை நடிகை ஷகிலாவோடு ஒப்பிட்ட சாரு நிவேதிதாவின் பேட்டி ஒரு வக்ரமான நகைச்சுவை என்று கண்டிக்கிறார் சென்னை, வி.எஸ். அனந்தராமன்.

✉ 'சாதாரணமாக எம்.ஜி.ஆரின் 'பாடி லாங்க்வேஜ்' மற்றும் மேனரிஸங்களை தன் படங்களில் வெளிப்படுத்தும் சத்யராஜ், 'மகா நடிகனில்' அதைத் தவிர்த்திருப்பதற்குக் கூறிய காரணம் அருமை' என்று பாராட்டுகிறார் ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

✉ இறைவனுக்குக் கூறப்படும் 'நமஹ' என்ற சொல்லை, நடிகைக்கு வழங்கி (மீராய நமஹ) தலைப்பிட்டிருப்பது ஏற்கும்படி இல்லை என்று கோபப்படுகிறார் சென்னை, பால.சூர்யா.

✉ ஹாராஜ் எழுதிய ஒன்மேன் ஆர்மி சிறுகதை சிறப்பாக இருந்தது என்று பாராட்டுகிறார் திருமாண்டக்கவுண்டம்பாளையம் வி. சோமசுந்தரம்.

✉ 'லால்குடி வட்டத்திலுள்ள இராமநாதபுரம் கிராமம் மட்டுமல்ல, தமிழகமெங்கும் நிலத்தடி நீர் வற்றி விட்டதுதான் காரணம் - விளைச்சல் இல்லாது போனதற்கு! சர்க்கரை



மீனா என்றால் துறைமுகம்!






'எங்க ஊரு பிள்ளையாரு'க்கு தகவல்கள் அனுப்புங்க. பிள்ளையார் அருளோட 'ஓம் கணபதி ஓம்' ஆன்மிக ஆடியோ சி.டி.யும் கிடைக்கும். அப்புறம் இன்னொரு முக்கியமான விஷயம். நம்ம 'கல்கி' இதழ் அலுவலக முகவரியில் பின்கோடு மாற்றப்பட்டிருக்கு. இனிமே சென்னை - 97க்கு பதிலா சென்னை - 32.

அதாவது 600 032. கல்கிக்கு எழுதறப்போ மறக்காம சென்னை 32 போடுங்க.

(முதல் பக்கத்திலும் இங்கும் பாவனை : மாஸ்டர் அர்ஜுன் சுவாமிநாதன்.)



ஆலை, எரிசாராய ஆலைகளைவிட தீமை தருவது, காட்டுக் கருவல் எனப்படும் வேலிகாத்தான் முட்செடி! இது நிலத்தடி நீரையும் உறிஞ்சி, காற்றிலுள்ள ஈரப்பதத்தையும் சுவாஹா செய்துவிடும். இதைப் பூண்டோடு அழிப்பதே நிவாரணம்' என்று ஆலோசனை சொல்கிறார் **அனுப்பானடி, இரா.கல்யாணசுந்தரம்.**

✉ அராஜக வன்முறைகளை உள்ளாட்சித் தேர்தலில் நடத்திக் காட்டிய அ.இ.மு.க.வின் சின்னமாக மண்டையோட்டை வைக்கலாம், என்று கார்ட்டூனில் நையாண்டி செய்திருப்பது சரியான கண்டனம் என்கிறார் **சென்னை, த.சத்தியநாராயணன்.**

✉ மாமனார்களிடம் மருமகன்கள் காட்டும் மதிப்பும் மரியாதையும் குறித்த கேள்விக்கு, தராசுவின் பதில் நல்ல ரசனையை வெளிப்படுத்தியிருந்தது என்று வியப்புடன் சொல்கிறார் **நெய்வேலி சு. ஸ்ரீகாந்த்**

✉ 'எல்லோரும் எம்.ஜி.ஆர். ஆக முடியாது' என்பதை மெகா அலசல் பட்டவர்த்தனமாகவே விளக்குகிறது' என்று 'பளிச்' கமெண்ட் அடிக்கிறார் **மேலகிருஷ்ணன்புதூர், ஆர்.கே. லிங்கேசன்.**

✉ 'பாபா பாதையில் கஜேந்திரா' கவர் ஸ்டோரி நிச்சயமாக விஜய்காந்தை சிந்திக்க வைக்கும். சொல்பவர் **பன்னப்பட்டி, த.முகம்மது அசாருதீன்.**

✉ 'துபாயில் பிரபல சந்தைக்கு 'மீனா பஜார்' என்றும், அதை அடுத்துள்ள ஆப்பக்கடைக்கு சிம்ரன் ஆப்பக்கடை என்றும் பெயர் வைத்துள்ளார்களாமே' என்று தராசு பகுதியில் கேள்வி கேட்கப்பட்டிருந்தது. 'மீனா' என்றால் அரபி மொழியில் துறைமுகம், அதாவது 'துறைமுகக் கடைவீதி' என்று பொருள். (நடிகை பெயர் அல்ல). சிம்ரன் ஆப்பக்கடை தமிழர் உணவு விடுதி என்றாலும், 'சிம்ரன்' நடிகை 'சிம்ரன்' அல்ல. உணவு விடுதி உரிமையாளரின் இளைய மகள் என்று விளக்கம் தருகிறார் **துபாய், கயத்தை சத்யா.**

✉ 'ஒரு குடும்பத்தின் கதறல்' படித்தேன். எங்கள் வீட்டில் எல்லோரது கண்களும் கலங்கின. பாவம் பிஞ்சுக் குழந்தைகள் என்று வருந்துகிறார் **சென்னை, வே. முருகேசன்.**

கல்கி வழங்கும்
சென்னை ஸ்கேன்
கல்கி ஜன்னலில் ஒரு மின்னல்!
(சென்னை பதிப்புக்கு மட்டும்)

8 பக்கங்கள்
24, அக்டோபர் 2004 இதழுடன் இலவச இணைப்பு

ஷோ-கேஸ்



வராத மழையே.. நன்றி!

அன்று சென்னை மக்கள் உற்சாகத் துள்ளலிலிருந்தனர். சேப்பாக்கில் சேவாக் மட்டையடியடித்திருந்தார். வேண்டியபடி மழையும் சொத்தாமலிருந்தது. 'விஜய் டீவியின் லெஜண்ட்ஸ்' - எஸ்.பி.பி, சித்ராவை கௌரவிக்கும் இந்நிகழ்ச்சிக்கு, அன்றைய தினம் அனைத்துமே கைகூடியிருந்தது.

தீவுத்திடலில் ஆயிரக்கணக்கான இசை ரசிகர்கள். தொகுப்பாளினி ரோகிணி அழகிய புடைவையில், 18 வயது மானாய் துள்ளலாய் மேடைக்கு வந்தார் எஸ்.பி.பி. சமீப காலமாக இவரைப் பார்ப்பது மட்டுமல்ல, பாடல்களைக் கேட்பதும் அரிதாகிவிட்டதால் நீண்ட ஆச்சர்யத்தில் ரசிகர்களின் கரகோஷம் பிளக்க, அவரும், 'இது ஒரு பொன் மாலைப் பொழுது' என்று மிகச் சரியான பாடலுடன் தொடங்கினார். ரம்மியமான சூழல் அது. 'ரெக்கார்டிங்கை விட மேடையில் மிகச் சிரத்தையாகப் பாடுபவர்' என்றொரு முறை இளையராஜா சொன்னது, அன்று வெட்ட வெளிச்சம். கிட்டத்தட்ட முப்பதைந்தாயிரம் பாடல்கள் பாடி, ஆறு தேசிய விருதுகள் வாங்கி இருந்தும் எஸ்பிபியின் மேடைப் பாடல்களில்தான் என்னவொரு சிரத்தை, என்னவொரு அர்ப்பணிப்பு!

பதினைந்து வருட தவத்திற்குப் பிறகு பெண் குழந்தையை பெற்றெடுத்திருக்கும் சித்ரா அதே தாய்மை உணர்வில் திளைத்துப் பாட இருவரும் இணைந்து தீவுத் திடலில் தேனாறு பாய விட்டனர்.

நடுநடுவே பாப் ஷாலினியும் தேவனும் இன்றைய ஹிட்களை ஆடியபடி பாட, கூடுதல் களைக்கு அல்போன்ஸாவும் சங்கவியும் இங்கும் கவர்ச்சி விருந்து படைத்தனர். கொள்ளுத் தாத்தா, எள்ளுப் பேரன் என்று கூட்டம் கூட்டமாக வந்தவர்களுக்கு அல்போன்ஸாவின் ஒரு நடனம் அனாவசியமாகவே இருந்திருக்கும்.

மேடையிலிருந்த இசைக் கலைஞர்கள், கோரஸ் பாடுபவர்கள் என அத்தனை பேருக்கும் பலமாய் கைத்தட்ட சொன்னார் எஸ்.பி.பி. அடடா, அவர்கள் மனம் எவ்வளவு நிறைந்திருக்கும்! சித்ரா தனக்கு தமிழில் முதல் தேசிய விருது வாங்கித் தந்த 'பாடறியேன் படிப்பறியேன்' பாடி, 'மரிமரி நின்னே'வில் வந்து நிற்கும்பொழுது வழக்கம்போல் இங்கும் உற்சாகக் கைத்தட்டல். 'தேனே தென்பாண்டி மீனே' - எஸ்.பி.பி உருகியதில் மூன்று வயதுக் குழந்தை கூட கண் கொட்டாமல் அப் பாடலில் மூழ்கிப் போனது. சமீபகால தமிழ் சினிமாவின் இரைச்சலிலிருந்து பெருமளவு மீண்ட திருப்தியில், இரவு 10 மணிக்கு மேல் லேசான மழை தொடர்ந்தபோதும் 'மெட்டி ஒலி', இரவு உணவு அனைத்தும் துறந்திருந்தனர் சென்னை ரசிகர்கள்.

கதம்பமாய் தங்களின் மிகச் சிறந்த பாடல்களின் பல்லவியை மட்டும் பாடி, இன்னும் ஏராளமான பாடல்களைக் கேட்ட திருப்தியை உண்டாக்கினார்கள். நிகழ்ச்சி நள்ளிரவில் முடிந்தபொழுதும், தெளிவாய் நம் மனதில் எழுந்த கேள்வி - தேன்மதுரப் பாடல்களின் காலம் எம்.எஸ்.வி, இளையராஜாவோடு முடிந்து போய்விட்டதா?

ச.ந.கண்ணன்



ஸ்போக்கன் இங்கிலீஷ்- ஃபாஸ்ட் ஃபுட் அல்ல!

நம் செம்மொழி மக்களுக்கு எத்தனைக் காலம் போனாலும், 'நல்லா' புல்லா'ன்னு இங்கிலீஷில் பேசணும்கற மோகம் மட்டும் போகாது. நடைமுறையிலும் இன்டர்வியூ, வேலை, கால் சென்டர்கள் என எல்லாத்துக்கும் இந்த ஸ்போக்கன் இங்கிலீஷ் தேவையாயிருக்கே!

இதில் சென்னையில் மிகப் பிரபலமான 'விவேகானந்தா' இன்ஸ்டிட்யூட் முதல்வர் ராஜகோபாலுடன் உரையாடினோம். (தமிழ்லதாங்க).

கே: இப்படி நாக்குல தேனைத் தடவிக்கிட்டு இங்கிலீஷ் சொல்லித் தர உங்களுக்கு கத்துக் கொடுத்தது யாருன்னு முதல்ல சொல்லுங்க.

ப: (புன்னகையுடன் யோசிக்கிறார்) இதுக்கு முக்கியக் காரணம், சின்ன வயசுல இங்கிலீஷ்ல பேசணும்னு எனக்கிருந்த ஆர்வம் தான்னு சொல்லணும். அதேபோல 24 வருஷ அனுபவத்துல, பல தரப்பட்ட மக்கள்கிட்டயும் பழகி, அவங்ககிட்ட எப்படிப் பேசினா அவங்களை ஈர்க்க முடியும்னு தெரிஞ்சுக்கிட்டதும்தான் காரணம்.

கே: இங்கிலீஷ் பேசக் கத்துக்க உங்ககிட்ட வருபவர்களின் நோக்கம் மாறியிருக்குன்னு நினைக்கறீங்களா?

ப: நிச்சயமா மாறியிருக்கு. முன்பெல்லாம் career improvement-க்காக எங்கிட்ட வருவாங்க. ஆனா இப்போ Career-ஐ துவக்குவதற்கே எங்கிட்ட வர வேண்டிய நிலை வந்தாச்சு. அதேபோல குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தர முடியலேன்னு எங்கிட்ட நிறையப் பெண்கள் வந்தாங்க. ஆனா இப்போ இவங்களோட சதவீதமும் குறைஞ்சிட்டே வருது. இதுவும் ஒரு நல்ல அறிகுறிதானே!

கே: விவேகானந்தாவின் ஸ்போக்கன் இங்கிலீஷிற்கும், மற்ற ஹைடெக் ஸ்போக்கன் இங்கிலீஷ் நிறுவனங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி...

ப: மேலோட்டமாகப் பார்த்தால் கட்டணம்தான். அதுவும் எங்களுடையதுதான் குறைவு. அதேசமயம் அவர்களுடையதை 'ஹைடெக்' என ஒப்புக் கொள்ள இயலாது. இங்கிலீஷ் பேச வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு, ஹோட்டலில் ஐஸ் கிரீம் எப்படிச் சாப்பிடுவது, பீஸா எப்படிச் சாப்பிடுவது என சொல்லிக் கொடுத்து பணம் பிடுங்குவதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. எங்களால் என்ன முடியுமோ அதனை மட்டும் அதற்குரிய கட்டணத்தில் கற்றுத் தருகிறோம்.

கே: ஒரே வாரத்தில் ஆங்கிலம் பேச வைக்கிறோம். இல்லாவிடில் பணம் வாபஸ் என்பது போன்ற தடாலடி அறிவிப்புகள் உங்களை பீதியூட்டுவதுதானே...?

ப: (பெரிதாகச் சிரிக்கிறார்) ஸ்போக்கன் இங்கிலீஷிற்குக் குறுகிய வழிமுறை (shortcut method) என்பதெல்லாம் உதவாதுங்கறது எங்களோட நம்பிக்கை. இங்கிலீஷ்ங்கறது ஃபாஸ்ட் ஃபுட் சாப்பிடறது மாதிரி இல்ல. அதனால ஒழுங்கா இங்கிலீஷ் பேச வைக்க அவங்களால முடியாது - எங்களால மட்டுமே முடியும்னு இடமா நாங்க நம்பறதால, எங்களை நீங்கள் சொன்ன எவரும் பீதியூட்டவோ, பயமுறுத்தவோ முடியாது.

கே: நுனி நாக்கு ஆங்கிலத்தை ஊக்குவிப்பதுதான் உங்களது நோக்கமா?

ப: அது ஒரு சிலரின் நோக்கமாக இருக்கலாம். ஆனால் எங்கள் நோக்கம், முறையான இலக்கணத்துடன் சரளமாக, உபயோகமாக ஆங்கிலம் பேச வைப்பதுதான். அதேசமயம் தவறான நுனி நாக்கு ஆங்கிலம் ஆபத்தில்தான் போய் முடியுமே யன்றி, எவ்வகையிலும் நன்மையில் முடியாது. வேண்டுமானால் ஆங்கிலத்தில் பேசுவதையே கௌரவமாக நினைப்பவர்களுக்கு உதவியாக இருக்கலாம்.

கே: அது என்ன புதுசா விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்டிற்கு 'வீட்டா'ன்னு விளம்பரம் செய்றீங்க?

ப: எல்லாத்துக்கும் போலிகள் வருதில்ல. அதுமாதிரி எங்களுக்கும் டூப்ளிகேட்டுகள் வர ஆரம்பிச்சுட்டாங்க. எங்க பேருக்கு முன்னாடியோ - பின்னாடியோ எதையாவது சேர்த்துகிட்டு, புதுசா இன்ஸ்டிட்யூட் ஆரம்பிச்சுட்டாங்க. இந்த ஆபத்தைத் தடுக்கவே 'Vivekananda English Training Academy'ஐ தேசிய அளவில் பர்மிட் வாங்கி ஆரம்பிச்சிருக்கோம். இதன் மூலம் போலிகள் வராம சட்டப் பாதுகாப்பு கிடைச்சிருக்கு. இனிமே விவேகானந்தா புதுப் பெயரோடு புது யுக்தியோடு சிறப்பாக சேவை செய்யத் தயாராகிவிட்டது.

கே: அப்போ நல்லா சம்பாதிக்கறீங்கன்னு சொல்லுங்க.

ப: (கடகடவெனச் சிரிக்கிறார்) இல்லைன்னு சொல்லலையே. இதுல சம்பாதிக்கறத இதுலயேதான் போட்டு சர்வைஸ் பண்ணிட்டிருக்கோம். உலகம் முழுவதும் பயணிக்கப் போகிறோம்னு சொன்னது, பேங்க் லோன் கிடைக்கும்கற நம்பிக்கையில்தான்" என்று புன்னகை மாறாமல் பதிலளித்து விடை கொடுத்தார் ராஜகோபால்.

முத்துக்குமார்

'வெள்ளைக்காரர்கள் எங்கும் போய்விடவில்லை சென்னையில் தான் இருக்கிறார்கள்' என்று வேடிக்கையாக ஒருமுறை குறிப்பிட்டார் பிகோ ஐயர். அந்த அளவுக்கு ஆங்கிலம் சென்னையில் கொடி கட்டிப் பறக்கிறது என்பது இவருடைய நம்பிக்கை. ஆனால் இங்கு பேசப்படும் ஆங்கிலத்தை இவர் ஆங்கிலம் என்று ஒப்புக் கொள்ள மாட்டார். "இங்லியன்" அல்லது "இண்ட்லீஷ்" என்று கிண்டலாகக் குறிப்பிடுவது வழக்கம்.

பிகோவின் பெற்றோர்கள் இந்தியர்கள் என்ற போதிலும், இவர் பிறந்தது இங்கிலாந்தில். காலில் சக்கரத்தை மாட்டிக் கொண்டு பறப்பது என்பார்களே அது போல, மெய்யாகவே வானத்தில் பறந்து கொண்டிருப்பவர் பிகோ. இவர் தரையில் இறங்கி நடந்து போகும் நேரம் குறைச்சல். டைம் பத்திரிகைக்காக பல சுவையான பயணக் கட்டுரைகளை இவர் எழுதியிருக்கிறார். 'ஒரு புத்தத் துறவியும் ஒரு பெண்ணும்', 'வீடியோவும் இரவும்' போன்றவை இவரது மிகச் சிறந்த படைப்புகள். ஒருமுறை இவர் எழுதி வைத்த கட்டுரைகள் வீட்டோடு சேர்ந்து தீப்பற்றி எரிந்து விட, மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வந்து எழுதியிருக்கிறார்.

தோரோ, எமர்சன், க்ரஹாம் க்ரீன் போன்றோரின் கவித்துவமான மொழி ஆற்றலால் கவரப்பட்டு, பின்பு தமக்கென ஒரு தனி நடையை வகுத்துக் கொண்டவர் பிகோ. இவர் தீவிரமாகக் காதலிக்கும் ஒரே பெண் ஜப்பான். மும்பையைப் பற்றி எழுதினாலும் சரி, திபெத்தைப் பற்றி எழுதினாலும் சரி, ஜப்பான் எப்படியாவது உள்ளே நுழைந்துவிடும். ஜப்பான் மீது இவர் கொண்டுள்ள காதல் 'ஒரு புத்தத் துறவியும் ஒரு பெண்ணும்' எனும் புத்தகத்தின் ஒவ்வொரு வரியிலும் பளிச்சிடுவதைக் காணலாம்.

ஒன்றும் புரியாத குட்டிக் குட்டி சந்துகளில் நுழைந்து திடீரென்று காணாமல் போய்விடுவதைப் பற்றி நிறைய எழுதியிருக்கிறார். ஜப்பானியத் தெருக்கள் அவர்களது எழுத்துகளைப் போலவே மிகவும் 'சுலபமாக' புரிந்து கொள்ள கூடியவை என்பார். ஒருமுறை இவரது ஜப்பானிய சிநேகிதி இவரை 6.10க்கு ரயில் நிலையத்துக்கு அழைத்திருக்கிறார். இவர் தட்டுத் தடுமாறி வந்து சேர்ந்தபொழுது 6.12 ஆகி விட்டிருந்தது. 'நீண்ட நேரமாக' காத்துக் கொண்டிருந்த சிநேகிதி, இவர் வருவதற்குள் கிளம்பி விட்டிருந்தாராம்.

ஜப்பானுக்கு அடுத்தது இவருக்குக் கிண்டல் செய்வது மிகவும் பிடிக்கும். நாம் அதிகம் நினைத்துப் பார்த்திராத 'கமாவைப்' பற்றி மிகுந்த பாசத்துடன் ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருக்கிறார் இவர்.



பிகோவின் படைப்புகளிலிருந்து அழுத்தமான வாக்கியங்கள் நிறைய சேகரிக்க முடியும். இவற்றைப் போல, 'எது உடனடியாகப் புரிவதில்லையோ அதை நாம் காதலிக்கத் தொடங்கி விடுகிறோம்'. 'எந்த வழியாகப் போனாலும் நான் என் வீட்டிற்குத்தான் போகிறேன்.'

சில சமயம் வார்த்தைகளை முன் பின் மாற்றி அமைத்து, சில புதிய வெளிச்சங்களை இவர் உருவாக்குவார். இது இவருக்கு மிகவும் பிடித்தமானது. உதாரணத்திற்கு ஒன்று - சுதந்திரமே அந்நியமாக மாறிப் போன இடத்தில், அந்நியம் சுதந்திரத்தின் அடையாளமாக மாறி விடுகிறது.

இவருக்குப் பிடித்த ஒரு குட்டி ஜப்பானிய ஹைக்கூ.

எனது பிச்சைப் பாத்திரம்
சில இலைகளையும் ஏற்றுக்
கொள்கிறது.

மருதன்



ஜப்பான் என் காதலி!

ஃபோக்கஸ்



ஒரு தெருவின் கதை!

கோவை மண்டலத்தில் உள்ள ஒரு சிற்றூர் இரு எம்.பி. தொகுதிகளில் பிரிந்து கிடப்பதால், தேர்தல் விளம்பரம் செய்வதில் ஏற்பட்ட குளறுபடிகள் குறித்து, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது வந்த செய்திகளைப் படித்து அசமிழ்ந்த 'அன்பு சென்னை மக்களே! இதோ உங்கள் முதுகினையும் சரிபார்த்துக் கொள்ளச் சொல்கிறது ஆழ்வார் திருநகரில் உள்ள புன்னைவயிரு தெருவொன்று.

சென்னையை அடுத்த வளசரவாக்கம் பஞ்சாயத்து (தற்போது மூன்றாம் நிலை நகராட்சி) ஆழ்வார் திருநகர் அவென்யூவில் துவங்குகிறது. இந்த அவென்யூவில் உள்ள இரண்டாவது தெருவுக்கு மட்டும் 'இரட்டைத் தலைவலி'. புரியவில்லையா - இந்தத் தெருவின் கிழக்குப் பகுதியானது சென்னை மாநகராட்சியின் அதிகார வரம்பிலும், மேற்குப் பகுதியானது வளசரவாக்கம் மூன்றாம் நிலை நகராட்சியின் கீழும் வருகிறது. ஆஹா - இதுவல்லவோ குழப்பம் என்கிறீர்களா? அதுசரி - தனக்கு வந்தால் தானே தெரியும் தலைவலியும் திருகுவலியும்!

"இதன் காரணமாக உங்களுக்குக் கிடைக்கும் இரட்டைச் சலுகைகளைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்" என்று கேட்டதுதான் தாமதம். அடுக்காத குறையாக ஆக்ரோஷத்துடன் பேசத் துவங்கிவிட்டனர்.

"பஞ்சாயத்துக் குப்பை வாரி மேற்கு பக்கம் மட்டும் வருவாங்க (!) கிழக்குப் பக்கத்தைப் பத்திக் கேட்டா, "அது கார்ப்பரேஷன் ஏரியா சார்"னு ஒத்தை வரியில முடிச்சுடுவாங்க. அதுவும் நியாயம்தானேன்னு கார்ப்பரேஷன் காரங்ககிட்ட கேட்டா, என்ன பதில் சொல்லுவாங்கன்னு நாங்க ஒரு தடவை சொல்ல வேண்டியதில்லை. இதை வச்சி ஒரு சினிமாவே எடுக்கலாம்" என சோகமாய்ப் பேசுகிறார், கிழக்குப் பகுதி வாசி ஒருவர்.

இந்தத் தெருவுக்கு வளசரவாக்கம் பஞ்சாயத்து சார்பாக, 'முன்பு ஒரு காலத்துல' ரோடு போட்டார்கள் என்றும் அதன்பிறகு இன்றுவரை இரு தரப்பினருமே இந்த ரோட்டினைப் பற்றி கவலைப்பட்டதே இல்லை என்றும் வருந்துகின்றனர் இப்பகுதி மக்கள். "நாங்கள்தான் ஒருமுறை ரோடு போட்டு விட்டோமே - அடுத்த முறைக்கு மாநகராட்சியிடம் கேட்க வேண்டியதுதானே!" என்று பஞ்சாயத்து அதிகாரிகள் 'சூப்பர்' பதிலைத் தருகிறார்களாம். இந்த விஷயத்தை மாநகராட்சியிடம் கொண்டு சென்றால், "முதலில் ரோடு போட்டது அவர்கள் - எனவே இனி அதனைப் பராமரிப்பதும், புதுப்பிப்பதும் அவர்கள் பொறுப்பு" என்று 'சுப்ரீம்' பதிலை அளித்து தட்டிக் கழித்து விடுகிறார்களாம்.

அதுமட்டுமின்றி, தேவையற்ற ஆக்ரமிப்புகளுக்கு பெயர் பெற்ற பகுதியாக இப்பகுதி விளங்குவதாகவும், அவர்களைத் தட்டிக் கேட்க இருவருமே முன்வருவதில்லை என்றும் மனம் புகைந்து புலம்புகின்றனர். இது தொடர்பாக மாநகராட்சிக்கும், பஞ்சாயத்துக்கும் பலமுறை பன்மொழிகளில் வரைபடத்தோடு கடிதமெழுதியும் இதுவரை இரு தரப்பினருமே அசைந்து கொடுக்கவில்லை என்பது, அப்பகுதியைப் பார்த்தவுடனேயே தெரிந்து கொள்ளலாம். இன்னொரு முக்கியமான விஷயம், இந்தத் தெருவின் மேற்குப் பகுதியைவிட கிழக்குப் பகுதி தாழ்வாக இருக்கின்றது. இதன் காரணமாக கிழக்குப்பகுதியில் உள்ள கார்ப்பரேஷன் ஏரியாவாசிகளுக்கு மழைக் காலத்தில் தண்ணீர் தேங்குவதால் அதிக அளவில் இடையூறுகள் ஏற்படுவதாகவும் வருந்துகின்றனர்.

இந்த அளவிற்கு குழப்பத்தின் மறுபிறப்பாக உள்ள இந்தத் தெருவிற்கு, விடிவு ஏற்படுமோ என்பதைவிட, யார் விடிவுக்கு உதவ இருக்கிறார்கள் என்பதுதான் நமக்குள்ள குழப்பம்.

இரா.முத்துக்குமார்

ராஜன்

கிசுகிசுக்கள் ஓய்வதில்லை!



தமிழ் சினிமாவையும் அதன் கிசு கிசுவையும் எவராலும் பிரிக்க முடியாது. பத்திரிகைகளால் உருவாகிறதா அல்லது நடிகர் நடிகையர் சந்திப்பு காதலில் முடிந்து போகிறதா... இப்படிப் பல சுவாரஸ்ய காரணங்கள் ஒரு கிசுகிசுவுக்கு வித்தாகின்றன.

சமீபகாலமாக கோலிவுட்டில் வலம் வரும் சில பசுமையான கிசுகிசுக்களை திரும்பப் பார்க்கலாம்.

ஸ்ரீகாந்த் - ஸ்நேகா :

"மச்சான் நீங்க ரெண்டு பேரும் மேட் ஃபார் ஈச் அதர்" என்கிற வசனத்தை, தம் நண்பரிடம் எதிர்கொள்வார் ஸ்ரீகாந்த், 'ஏப்ரல் மாதத்தில்' படத்தில். இப்படிப் படத்தில் மட்டுமல்ல, ஊரே கண் வைத்த ஜோடிதான் ஸ்ரீகாந்த் - ஸ்னேகா. 'ஏ.மா' ஷூட்டிங்கின் பொழுது ஸ்னேகாவுக்கும் ஸ்ரீகாந்திற்கும் தொடர்ச்சியாக படப்பிடிப்புகளில் விபத்து ஏற்பட, ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நலம் விசாரித்துக் கொண்டது காதலாக காற்றில் உருமாறிப் போனது. இவர்களை வைத்து பத்திரிகைகளில்தான் எத்தனை விதமாகக் கவர் ஸ்டோரிகள்! இவையனைத்தும் இவர்களது அடுத்தடுத்த படங்களின் பப்ளிசிட்டிக்குக் கை கொடுத்தாலும், மனதளவில் இருவருமே பாதிப்புக்குள்ளாயினர். இன்றைய நிலவரப்படி சக ஆர்டிஸ்ட், ஃப்ரெண்ட்ஸ் என்கிற வரை முறையில் இருப்பதாக இருவரும் தொடர்ந்து கூறித்தான் வருகிறார்கள்.

சூர்யா - ஜோதிகா :

சூர்யா, ஜோதிகா இருவரும் எந்தப் பேட்டிகளுக்கு ஒப்புக் கொண்டாலும், இறுதியாக அவர்களிடம் கேட்கப்படுவது அவர்களது காதலைப் பற்றித்தான். "ஒவ்வொருவரும் செய்திகளால் அப்பா நிறைய முறை கவலைப்பட்டிருக்கிறார்" என்று சூர்யா ஒருமுறை பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். இந்த ஒரு காரணத்துக்காகவே, ஜோதிகா பெரும்பாலும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு, தமிழில் பேசும் நிருபர்களுக்குப் பேட்டியே தருவதில்லை. "ஜோ'ன்னு மழை பெஞ்சா, உங்களுக்குப் பிடிக்கும்தானே?" என்று சூர்யாவைப் பார்த்து விவேக்கும் மேடையில் இன்டலாக்கப் பழகிவிட்டார். 'காக்க காக்க'வின் அதிரடி வெற்றிக்குப் பிறகு 'மாயாவி'யில் இருவரும் இணைகின்றனர். "நான் கட்டிக்கப் போற பொண்ணு யாருன்னு ஊருக்கே தெரியுமே" என்று சமீபத்தில் ஹின்ட் கொடுத்திருக்கிறார் சூர்யா... அதை நம்பித்தான் பார்ப்போமே...

ஐஸ்வர்யா (?)

ரஜினியின் மூத்த மகள் என்கிற ஒரே தகுதியைவிட, ஐஸ்வர்யாவிற்கும் சினிமாவுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஆனால் 'ஆஸ்ரமம்' ஸ்கூலில் சிம்பு படித்ததாலும், தனுஷின் அம்மா, அக்காக்களோடு நெருங்கிப் பழகியதாலும், இன்றைய தேதியில் தமிழ் சினிமா ஹீரோயின்களைவிட அதிகமாக பத்திரிகைகளின் தலைப்புகளில் இடம் பிடித்திருக்கிறார். சிம்புவுடன் காதல் + மோதல், தனுஷுடன் திருமணம்... என மானாவாரியாக விதவிதமான செய்திகள். இதற்கு தனுஷ், சிம்பு இருவர் தரப்பிலிருந்தும் பதில் கிடைத்துவிட்டாலும், வைரப் புள்ளியான ஐவிடம் சிறு அதிர்வும் தென்படவில்லை.

இப்படித்தான் முன்பு அஜித் - ஷாலினி, ராஜகுமாரன் - தேவயானி, என கிசுகிசுக்களில் வலம் வந்தவர்களெல்லாம், ஒரு நாள் உண்மையாகிப் போனார்கள். 'அந்த நாளும் வந்திடாதோ' என்ற ஆவலுடன் நாம் ரசிகர்களும் சினிமா கிசுகிசுக்களைத் தொடர்ந்து படித்து வருகின்றனர். நாளை... இதிலுள்ள சுவாரஸ்யம் வேறெதில் உண்டு!

ச.ந.கண்ணன்



பாக்ஸ்டாக்

ஒரு காலத்தில் இந்தியாவிலேயே அதிக சம்பளம் வாங்கும் நடிகராக இருந்தவர் சிரஞ்சீவி. இன்றைய தேதியில் மகேஷ்பாபு, ஜூனியர் என்.டி.ஆர் இவர்களோடு இன்னமும் போட்டியிட்டு, தன் முன்னிலையைத் தக்க வைத்துக் கொண்டிருப்பவர். இவரின் புதுப் படமான சங்கர்தாதா எம்.பி.பி.எஸ் (அதாங்க. நம்ம வசூல் ரீமேக், சென்னையில் சென்ற வெள்ளியன்று சத்யம் மற்றும் தேவிபாலாவில் ரிலீஸானது. சென்னையில் தெலுங்குவாழ் மக்கள் மிக அதிகம் என்பதால், தங்களது சூப்பர் ஸ்டாரின் படத்தை முதல்நாளே பார்க்க பலரும் முண்டியடித்துக் கொண்டு திரையரங்குகளை துவம்சம் செய்ய, போலீஸ் வந்து கூட்டத்தைச் சரி செய்ய வேண்டியதாயிற்று. இந்தக் காட்சிகளையெல்லாம் பார்க்கும் போது, பெங்களூர், மைசூரிலுள்ள தெலுங்கு பேசுபவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள். ஏழு வாரம் கழித்தே இதர மொழிப் படங்கள் ரிலீஸாக வேண்டும் என்கிற முஷரப் ஸ்டைல் சட்டத்தினால், தங்களது அபிலாஷைகளைத் துறக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு.

எல்லாம். ரெஷ்மாவின் பேத்தியான 'குத்து' ரம்யா (!) (என்ன ஒரு அடைமொழி?) கன்னட சினிமாவைவிட தமிழ் சினிமாவில் ஸ்கோப் அதிகம் என்று சென்னையில் பலமாக டேரா போட்டிருக்கிறாராம். (இவர் படமும் கர்நாடகாவில் 7 வாரம் கழித்துதான் ரிலீஸாகுமா?)

செந்தில்



மதி

ஆடுகளம்

"தமிழ்நாட்டுக்கு மதிப்பே இல்லை!"

மாடர்ன் பெண்களுக்கு மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் பேர் வாங்கி பல சாதனைகளை நிகழ்த்தி வரும் எத்திராஜ் கல்லூரியில்தான் பி.ஏ. டூரிஸம் படிக்கிறார் அனில். பேட்மிட்டன் விளையாட்டிலும் தேசிய ஜூனியர் அளவில் 2ம் இடம். இறகுப்பந்தை துள்ளிப் பறந்து அடிப்பதில் கெட்டிக்காரரான இவர், தினமும் அரக்கோணத்திலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறார் ஏன்?

"நீ ஒரு ஸ்போர்ட்ஸ் வுமன். ஏன் சென்னைக்கே வந்துடலாமேன்னு நிறையப் பேர் கேக்குறாங்க. இங்கே ப்ராக்டிஸ் பண்றது ரொம்ப அதிக செலவாகும். ஐம்பதாயிரம் கட்டி மெம்பராகி, மாதம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கட்டணும். இதெல்லாம் கட்டுப்படியாகாதுன்னுதான் லாயரான எங்கப்பா அரக்கோணத்துலேயே பேட்மிட்டன் கோர்ட் கட்டிக் கொடுத்திருக்காரு. என்கூட நேஷனல் ப்ளேயரான என் அண்ணாவும், இன்னும் சில திறமையானவர்களும் அங்கேயே ப்ராக்டிஸ் பண்றோம். நான் மட்டுமில்ல, நேஷனல் லெவல்ல தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தர்ற பல ப்ளேயர்ஸும் அவங்கவங்க ஊர்லதான் ப்ராக்டிஸ் பண்றாங்க. காரணம், சென்னையில சரியான கோச்சிங், கேம்ப் போன்ற எந்த வசதியுமே இல்லை.

இதனால கேரளாவுலே ரெகுலரா நடக்கிற கேம்பில் கலந்துகிட்டு, எங்களை படிப்படியா இம்ப்ரூவ் பண்றோம். இங்கிலாந்துல சாம்பியன்ஷிப் வாங்கின கோபிசந்த் சென்னையில இருந்தவர்தான். இங்கே எந்த வசதி வாய்ப்பும் இல்லாததால ஆந்திராவுக்குப் போய், பாருங்க... என்னமா முன்னேறிட்டார். கர்னாடகா, அஸ்ஸாம், கேரளாவிலெல்லாம் தினமும் ப்ராக்டீஸும், ஃபிட்னஸ் ட்ரெயினிங் பண்றதுக்கான வாய்ப்புகளும் இருக்கிறதால, நேஷனல் லெவல்ல நடக்கிற போட்டிகளின் போது இந்த மாநிலத்திலிருந்து யார் ஆட வந்தாலும் அவரு வாங்க. பெரிய மதிப்பு கொடுப்பாங்க. ஆனா தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் தனிப்பட்ட சில வீரர்களுக்குத்தான் மதிப்பு. மற்றபடி இதர மாநிலங்களுக்கு இருக்கிற பூரண கும்ப மரியாதை தமிழ்நாட்டுக்குச் சுத்தமா கிடையாது. அப்பா எங்களுக்காக இது வரைக்கும் ஏழு லட்சம் வரைக்கும் செலவு பண்ணியிருப்பாரு. எங்களுக்கு அரசாங்கமோ, ஸ்பான்ஸர்லோ யாரும் பெரிசா உதவாம போனாலும், வர்ற ஒலிம்பிக்ஸ்ல நம்ம நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை தேடித் தர்றதுதாங்க என் லட்சியமா வைச்சிருக்கேன்" என்று சவால் விடுகிறார்.

செந்தமிழ் நாட்டில் திறமைகளுக்கு என்றும் பஞ்சமில்லை. ஊக்கத்திற்குத்தான், மருந்துக்கும் ஆள் கிடையாது போலிருக்கிறது.

📷 விஜயன் ✍ செந்தில்



ச்சோ ச்வீட் கொலு!

'ஒரு நாட்டுல ஒரு குட்டி ராஜா' என்று ஆரம்பித்து கதை சொல்லும் பாட்டியையோ, தாத்தாவையோ இப்பொழுதெல்லாம் பார்க்க முடியவில்லை. பெற்றோர்களிடம் கேட்டால் 'டி.வி. பார்த்துக்கோயேன்!' என்று சொல்லி ஒதுங்கி விடுகிறார்கள். பாவம், குழந்தைகள் என்ன செய்வார்கள்?



இதை உணர்ந்துதானோ என்னவோ, சைதாப்பேட்டை கோர்ட் பின்புறமுள்ள பிம்பா ஆர்ட் கேலரியில் நவராத்திரி கொலு வைத்திருக்கும் தீபிகா, வேடிக்கை பார்க்க வந்திருந்த குழந்தைகளுக்கு அழகாக கதை சொல்லிக் கொண்டிருந்தார்.

'இதோ இதுதான் கிருஷ்ணரோட குசேன் தலையணை'. 'இது தான் அவர் அரண்மனை வாத்து' 'இது தான் குசேலரின் அவல்' என்று ஒவ்வொரு பொம்மைக்கும் உதாரணமாய் ஒவ்வொரு கதை சொன்னார்.

"இது உண்மையான குசேலரா? இது நிஜமான அரண்மனையா? கிருஷ்ணர் எந்தக் கலர் வாத்து வளர்த்தார்? ராதை, பார்பீ டால் போல் இருப்பாரா?" என்று சாக்ரடீஸ் குழந்தைகள் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மத்துக் காண்டிலை எடுத்துக் காண்பிக்காமல் தீபிகாவும் ஒவ்வொன்றிற்கும் சளைக்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். குட்டிக் குழந்தைகளோடு சேர்ந்து பல வளர்ந்த குழந்தைகளும் தரையில் முட்டிக் கால் போட்டுக் கொண்டு, கண்களை விரித்து, கதையை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒன்றரை மாதம் உழைத்து இந்த கொலு அமைப்பை உருவாக்கியிருக்கிறார் தீபிகா. குட்டி அரண்மனை, குட்டி பொம்மைகள், குட்டி ஆலமரம் என்று நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட வித்தியாசமான கொலுவாக இது அமைந்திருக்கிறது. நீண்ட கால





நண்பர்களைப் போல எல்லோரையும் வரவேற்று, பொம்மைகள் காண்பித்து, கதை சொல்லி, வெற்றிலை பாக்கும் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். என்ன உங்களுக்கும் கதை கேட்க வேண்டும் போல் இருக்கிறதா? ச்சோ ச்வீட்!

📷 முகில் ✍ மருதன்

'நியூ'ஸ்



மார்க்கெட்டுக்கு புதிதாக வரும் பொருள்களை உடனே உடனே எங்களுக்கு அறிமுகப்படுத்தலாமே என்று தொடர்ந்து கடிதங்கள் வருகின்றன. அப்படியே ஆகட்டும்.

டால்டா, இந்தியாவின் பாரம்பரியமிக்க ப்ராண்டு. நம் சமையலறையோடு பல்லாண்டு காலமாய் குடித்தனம் நடத்தி வரும் டால்டா, தற்பொழுது ஐந்து வித்தியாசமான ருசிகளில் டால்டா ஆயிலை வழங்குகிறது. வட இந்திய மக்கள் விரும்பும் ரீஃபைன்டு சோயாபீன் ஆயில், ரீஃபைன்டு கிரவுண்ட்நட் ஆயில், சுத்திகரிக்கப்பட்ட சன்ஃப்ளவர் ஆயில் மற்றும் நம் தென்னிந்தியர்கள் விரும்பும் நல்லெண்ணெய், ரைஸ் ப்ரான் ஆயில் போன்றவற்றை புதிதாக மார்க்கெட்டில் களம் இறக்கியுள்ளனர். நமக்கு இத்தனையாண்டுக் காலம் பழக்கமுள்ள அதே மஞ்சள் பேக்குகளில்தான் இவையனைத்தும் கிடைக்கின்றன.

கொடியில் துவளி காயப்போடுவது மாதிரி, கடைகளில் கலர் கலராக தொங்கும் ஷாம்புகளில் முதன்மையாக விளங்குவது பேன்டீன். தற்பொழுது புதிய பேன்டீன் ஷாம்பூ, 10 விசேஷ குணங்களின் மூலம் கூந்தலை மேலும் பொலிவாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாம். தற்பொழுது மார்க்கெட்டிலுள்ள பழைய பேன்டீன் ஷாம்புகள் நீக்கப்பட்டு இப்புதிய வகையே புழக்கத்தில் விடப்படுமாம். மும்பையில் பிரபல பாலிவுட் நட்சத்திரங்களுக்கு தலைவாரி விடும் ஹேர் டிசைனர்களும் "இது நிஜ ஷாம்பூ. உங்கள் கூந்தல் பூவாய் மணக்கும், மென்மையாயிருக்கும்" என்கின்றனர்.



📷 ஷிவ் ✍ எழில்

சிங் சாங் சீனா!



சமீபத்தில் சிங் சாங் சீனாவிற்குச் சென்று திரும்பியிருக்கும் முன்னாள் மாவட்ட ஆட்சியர் பீ.எம். பெல்லியப்பா, பிரிட்டிஷ் லைப்ரரியில் தமது சுவையான பயண அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

யாங்சி நதிக்கரையில் உள்ள அணைக்கட்டை சுற்றிப் பார்த்த இவர், சீனர்களின் அபார தொழில் நுட்பத் திறனை வியந்து பாராட்டினார். இதோ ரமணா பட ஸ்டைலில் சில புள்ளி விவரங்கள். இந்த அணையைக் கட்டி முடிப்பதற்கான உத்தேச மதிப்பு, 25 பில்லியன் டாலர்கள். அணைக்கட்டு கட்டுவதற்காக பல பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் எண்ணிக்கை 1 மில்லியன். 6700 கி.மீ. நீளத்திற்கு தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும்.

சீனச் சுவரை அந்நாட்டு மக்கள் பொறுப்போடு காப்பாற்றுகிறார்களாம். விண்வெளியிலிருந்து பார்த்தால் சீனப் பெருஞ்சுவர் தெரியும் என்று நேற்று வரை சொல்லி வந்தார்கள். ஆனால் இது ஒரு 'சிங் சாங்' தகவல் என்று கண்டு பிடிக்கப்பட்டதும், சீனப் பாடப் புத்தகங்களிலிருந்து உடனடியாக இந்த குறிப்பை அகற்றிவிட்டார்கள் அதிகாரிகள்.

பீஜிங்கில் மொத்தம் 85,000 டாக்ஸிகள் ஓடுகின்றன. இவை எந்த தப்புத் தண்டாவும் செய்யாததால், யாரும் இவற்றிற்கு சூடு போடவில்லை. ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போவதற்கும் அங்கிருந்து புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வருவதற்கும் பெல்லியப்பாவிடமிருந்து ஒரே மாதிரி தான் கட்டணம் வசூலித்தார்களாம். "மொழியோ, ஊரோ தெரியாத என்னை, சுலபமாக ஏமாற்றியிருக்கலாம். ஆனால் யாரும் அப்படிச் செய்யவில்லை" என்று பெருமையாகக் குறிப்பிட்டார். இதே ஒரு சீன ஆள் நம்ம பேட்டைக்கு வந்து விட்டால் மெட்ராஸிலிருந்து சென்னைக்குக் கொண்டு போறேன் என்று சொல்லி 150 ரூபாய் கறந்து விட்டிருப்பார்கள்.

முன்பெல்லாம் சீனாவில் "நாம் இரு சிங், நமக்கு ஒரு சாங்" என்று கட்டாயச் சட்டம்தான் இருந்து வந்தது. இரண்டாவது குழந்தைக்கு அரசாங்கத்தின் எந்த சலுகைகளும் கிடைக்காது. இப்பொழுது இந்த நிலை மாறி வருகிறதாம். தனிமையில் வாடும் குழந்தைகள் பலர் பெருகியிருப்பதுதான் இதற்குக் காரணம்" என்றார் பெல்லியப்பா.

"நீராவி இன்ஜினைத் தவிர மற்ற எல்லா அசைவும் பொருள்களையும் சீனர்கள் சாப்பிட்டு விடுவார்களாமே?" என்ற கேள்விக்கு ஏராளமாகப் புன்னகை செய்தார். "உண்மைதான். சுவைதான் இங்கு பிரதானம். எது சுவையாக இருந்தாலும் அதைப் பிடித்து சாப்பிட்டு விடுவார்கள்" என்றார். 1864ல் திறக்கப்பட்ட ஓட்டல் ஒன்றில் பெகிங் டக் ரோஸ்டைச் சுவைத்து சாப்பிட்டாராம். உட்வாட்ஸ் க்ரைப் வாட்டர் விளம்பரம்போல "நான் குழந்தையா இருக்கச்சே இதைதான் சாப்பிட்டேன்" என்று சொல்லி, தங்களது குழந்தைகளுக்கு பாம்பு சூப்பை ஃபீடிங் பாட்டிலில் ஊட்டி வளர்க்கும் சீனத் தாய்மார்கள் இங்கு அதிகம் என்கிறது ஒரு தகவல். உவ்வே...

பெல்லியப்பாவுக்கு சுற்றிக் காட்ட, நியமிக்கப்பட்ட சீனப் பெண்கள், நமது தமிழ்ப்படக் கதாநாயகிகள் தமிழ் பேசுவது போல கொஞ்சிக் கொஞ்சி உடைந்த ஆங்கிலத்தில் இவரிடம் பேசினார்களாம்.

தமது உரையின் முடிவில், சீனாவிலிருந்து வாங்கி வந்த இசை குறுந்தகட்டைக் காண்பித்தார் பெல்லியப்பா. அதன் பெயர் ஏறக்குறைய இப்படித்தான் இருக்கும் என்று யூகிக்கலாம். "சீனாதானா சிங்சாங்."

கங்கா

இந்தப் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு, இந்தளவுக் குறுகலான வாயுடைய, அதுவும் நிரம்பி வழியும் கிணறுகூட நமது சிங்காரச் சென்னையில் இருக்கிறதே என்று உங்கள் மனம் ஆச்சர்யத்தில் மூழ்கினால்... மன்னிக்கவும்... இது கிணறே அல்ல. சென்னை மெட்ரோ வாட்டருக்காகப் பூமிக்கு அடியில் புதைக்கப்பட்ட குழாய்களுக்கான நிலத்திற்கு மேலிருக்கும் வால்வு தான் இது. இந்த வால்வின் மூடியைத் திறந்துவிட்டுத் தண்ணீரை எடுத்துக் கொள்ளும் இக் காட்சியினை, காலை நேரங்களில் வடபழனி, சாலிகிராமம், விருகம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு ஏரியாக்களில் அடிக்கடி காணலாம்.

இப்போதெல்லாம் சென்னையில் உள்ள பெரும்பாலான குடியிருப்புப் பகுதிகளுக்கு, ஒரு வாரத்துக்கு ஒருமுறைதான் தண்ணீரானது விநியோகிக்கப்படுகிறது. இது குறித்து அரசு அதிகாரிகளிடமும், அரசியல்வாதிகளிடமும், மீடியாக்கள் மூலமும் பன்முறை போராடித் தோற்றுப்போன விரக்தியில், மக்கள் தண்ணீருக்காக எந்த முடிவுக்கும் செல்வார்கள் என்பதற்கு உதாரணம்தான் இக்காட்சி. "இவ்வாறு தண்ணீர் எடுப்பது அடிப்படையில் சட்டத்திற்குப் புறம்பானது. அப்படியிருக்க, நீங்கள் இந்த முறையில் தண்ணீர் எடுப்பது தவறில்லையா?" என்று தண்ணீர் எடுத்துக் கொண்டவர்களிடம் கேட்டதற்கு, "நாங்க எடுக்கறது தவறுன்னா, அவங்க நிறையும் தண்ணி விடாம இருக்கறது தவறு இல்லையா? இந்தத் தண்ணிக்குக் காசு கொடுக்கிறது நாங்க தானே. அதனால எங்க தண்ணியே நாங்க எடுத்தா தப்பில்ல - அப்படியும் தப்புன்னு யாரும் சொன்னா, இதை நிறுத்த, ஒழுங்கா தண்ணி விடச் சொல்லுங்க" என்று தில்லாகப் பேசுகின்றனர் இப்பகுதி மக்கள்.



திருட்டுத் தண்ணீர்!

"வால்வு மூடி திறப்பதற்கு எளிதா இருக்குற இடங்கள்ல மட்டும் பொதுமக்கள் இந்தத் தவற்றைச் செய்றாங்க. அது மட்டுமில்லாம இது அடிக்கடி நடக்குற சம்பவமும் கிடையாது. இருந்தாலும் இதைத் தடுக்க கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கணும்" என்கிறார் ஒரு பொறுப்பான அரசியல்வாதி (நடவடிக்கையை யார் மேல எடுக்கறது?)

இது தொடர்பாக ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரிடம் கேட்டபோது, அந்தத் தண்ணீரானது சுத்தமானது அல்ல என்றும், அதை முறை தவறி எடுப்பதால் உடலுக்குத் தீங்கு என்றும், இதைத் தடுக்க குடிநீர் வாரியத்திற்கு உடனடியாகத் தகவல் கொடுத்து விடுவதாகவும் சாமர்த்தியமாக பதிலளித்தார்.

இந்தத் தவறுக்குக் காரணம் தண்ணீர்த் தட்டுப்பாடா, பொதுமக்களின் பொறுப்பின்மையா, துறை சார்ந்த பணியாளர்களின் அலட்சியமா? இதுதான் நம்ம கேள்வி!

ராஜன் முராரி



பூமராங்

☒ 'உக்ராணி' கட்டுரை கீர்த்தனா ஒரு தெய்வ அதிசயம்தான் என்ற பிரமிப்பை ஏற்படுத்தி விட்டது. அக் குழந்தை பிரேயின் எப்டிடியூடிப்ட் ஆனாலும்னு சொல்வது வெகு பொருத்தமே!

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

☒ ஆக்ஸ்ஃபோர்டு கட்டுரை அருமையாக உள்ளது. டாக்கீஸ் டாக் - தூப்பர். கீப் இட் அப்.

தேனாம்பேட்டை, குரு


☒ பல்லைக் கூச தூசை கட்டுரை - பயனுள்ள கட்டுரை. 'சீமா ஜென்னின் பேட்டி அசத்தலான பேட்டி.

மில்லியோக்கம், சந்யா

உங்கள் கருத்துக்களை chennaiscan@kalkiweekly.com ல் தெரிவிக்கலாம்.

"ரோசலீனா... ரோசலீனா..."

இன்றைக்கு என்னதான் நவநாகரிகமாக உடையுடுத்தவும் அழகு படுத்திக் கொள்ளவும் பழகியிருந்தாலும், மங்கையர்க்கு முகத்தில் உள்ள பருக்களும், கரும்புள்ளிகளும் மிகப் பெரிய தலைவலியாகத்தான் இருக்கிறது. அத்தகையோரை நோக்கி, ''கவலைப்படாதே பெண்ணே! இதோ நானிருக்கிறேன்'' என்று நேசக்கரம் நீட்டுகிறது டாக்டர் பானுமதியின் சன்ரைஸ் ஹெர்பல் கிளினிக். இதற்காக கடுமையாக முயற்சி செய்து, மலைப் பிரதேசங்களிலிருந்து மூலிகைகளை வரவழைத்து ஹெர்பல் ஆயில், ஹெர்பல் பேக் போன்றவற்றை பல்வேறு வெரைட்டிகளில் தயாரித்துத் தந்து வருகிறது இந்நிறுவனம்.




அதன் பெயர் ரோசலினா ஹெர்பல் பேக். உடல் குண்டாகிக் கொண்டே போகிறதே என வருந்துபவர்கள் சன் ரைஸின் மூலிகை வேபத்தைப் பயன்படுத்தினால் ஒரு மாதத்தில் குறைந்தது ஐந்து கிலோ வரை எடை குறைக்க முடியுமாம்.

முகவரி : **சன்ரைஸ் ஹெர்பல் கிளினிக், 7/2, சதாசிவம் ஃபிளாட்ஸ், மன்னார் தெரு, (திநகர் பேருந்து நிலையம் எதிரில், சென்னை - 17 போன்: 52127875. 9444338713**

பெங்கால் புடைவைகளை பெங்கால் போய்தான் வாங்க வேண்டும் என்றில்லை. தி.நகரிலுள்ள சாருலதாவில் அட்டகாசமாய் பல வண்ணங்களில் அணி வகுத்து நிற்கின்றன பெங்கால் ஸ்பெஷல் புடைவைகள். நவராத்திரிக்காக பல ஸ்பெஷல் டிசைன்களை இவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். காட்டன், சில்க், எம்ப்ராய்டரி இவை தவிர முழுக்க முழுக்க கைகளால் வரையப்பட்ட 'காந்தா வொர்க்' சிறப்புப் புடைவைகளும் இங்கே கிடைக்கும். ஒவ்வொரு புடைவையிலும் ஒவ்வொரு வர்ண ஓவியம். கொல்கத்தா ப்ளவுஸ்களும் இங்கே கிடைக்கும். அது மட்டுமா? நகைகளை பாலிஷ் செய்வது போல புடைவைகளையும் இங்கே பாலிஷ் போட்டுத் தருகிறார்கள்.

10, ராஜபாதர் தெரு,
ரத்னா பேன் ஹவுஸ் காம்ப்ளெக்ஸ்,
பாண்டி பஜார், தி.நகர்,
சென்னை - 17. தொலைபேசி : 28154972




சேலை கட்டுபவர்கள் கவனத்திற்கு...

சென்னையில் உள்ள 'பிட்டி'யான பொதுக் கூட்ட அரங்கமொன்றில் ஆறு மாதத்துக்கு நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதற்குக் காரணம், சமீபகாலமாக இங்குள்ள பெரும்பாலான அரங்கங்களில் செம்மொழித் தலைவருக்கு பாராட்டு விழா நடத்தப்படுவது 'பெரிய' இடத்துக்கு பிடிக்கவில்லை என்றும், இதுபோன்ற விழாக்களுக்கு இனியும் அனுமதியளித்தால் என்னவாகும் என்பதையும் உணர்த்தவே இதுபோன்ற அதிரடி நடவடிக்கைகள் என்றும் பேச்சு அடிபடுகிறது.

கூட்டணிக்கு ஆள் சேர்ப்பு படலம் கனஜோராக நடந்து கொண்டிருக்கிறதல்லவா! இதிலும் வழக்கம்போல் இரு கோஷ்டியினருக்கும் கடுமையான போட்டி நடந்து வருகிறதாம். குறிப்பாக வட சென்னையைச் சார்ந்த வாசன் ஆதரவாளர், லட்சம் உறுப்பினர் அட்டைகளை தம் சொந்தக் காசைக் கொடுத்து வாங்கி வைத்து இருப்பதாகவும், இதற்குப் போட்டியாக எதிரணியின் சார்பாக தென் சென்னையைச் சேர்ந்த மங்கை மாலன், பெரிய அளவில் முதலீடு செய்ய இருப்பதாகவும் ஒரு தகவல் கசிந்துள்ளது. இதுவே மிகப் பெரிய முறைகேடு என்றும், இது தொடர்பாக டெல்லிக்கு புகார் கொடுப்போம் என்கிறது மூன்றாம் தரப்பு.

(அடடா! அடங்க மாட்டேங்கறாங்களே?)



உக்ரைன் நாட்டு விருது தொடர்பாக, எதிர்த் தரப்பு கடுமையான ஆராய்ச்சியில் இறங்கி இணையத்தள முகவரியுடன் தொடர்ந்து கிண்டலடித்து வருவது சம்பந்தப்பட்டவர்களை கடுமையான கோபத்துக்கு ஆளாக்கியுள்ளதாம். இதில் சுவாரஸ்யம் என்ன தெரியுமா? கோபம் எதிர்கட்சிகள் மீது இல்லையாம். தனக்கு ஆதரவாக இதுவரையும் பெரிய அளவில் குரலெழுப்பாத கூட்டணிக் கட்சியினர்மீது தானாம். அதில் அதிக நெருப்புப் பார்வையால் நோக்கப்பட்டவர் சமீபத்தில் விருது ஒன்றை வாங்கியவர்தானாம்.

எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்து விஷயத்தில் சமீபகாலமாக மிகவும் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார் ஏ.சி. சண்முகம். இதில் ஏதும் புதுக் கணக்கு இருக்கிறதோ என சந்தேகப்பட்ட மேலிடத்தால் அவருக்கு நெருக்கமானவர்களை விட்டே தீவிரக் கண்காணிப்பு ஒரு பக்கமாகவும், எச்சரிக்கை மறு பக்கமாகவும் தரப்பட்டு வருகிறதாம்.

காங்கிரஸ்காரர்களின் சைக்கிள் பேரணி ஓவர் ஹைப்பில் முடிந்துவிட்டது. அக்கட்சியினரையே கிண்டலுக்கு ஆளாகியிருக்கிறதாம். 'கோஷ்டிக்கு ஒரு நாளுன்னு பார்த்தாலும், குறைந்தபட்சம் சென்னையில் மட்டும் முப்பது நாள் நடத்திருக்கணும்'னு நக்கலடித்து வருகிறார்களாம்.

(வெறும் முப்பதே முப்பது கோஷ்டிகள்தானா இருக்கு?)

பெயர் வாங்கித் தந்த வழக்கொன்றில் விடுவிக்கப்பட்ட கிருஷ்ணசாமிக்கு எதிராக, அடுத்த வழக்கு சூடுபிடிக்கத் துவங்கிவிட்டதாகத் தெரிகிறது. இவ்விஷயத்தில் தமக்கு ஆதரவாகக் களமிறங்குமாறு விரைவில் சென்னையில் உள்ள முக்கியத் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கேட்க உள்ளாராம். அதே போன்று டெல்லி தலைவர்கள் ஒரு சிலரிடமும் ஆதரவு கேட்டு வருகிறாராம் டாக்டர்.

(சுப்ரமணியசாமியின் ஃபோன் நம்பர் தெரியுமா?)

கலை



பொலிட் பீரோ

டியர் வாசகர்களே!
உங்களின் காதல் கற்பனை
'லப்-டப்' லவ்
லெட்டர்ஸ்-ஆக
எங்களை வந்து முத்தமிட்டுக்
கொண்டிருக்கிறது. அடுத்த
இதழ் முதல் அழகிய அணி
வகுப்பு ஆரம்பம்.

ஒட்டகத்தைக் கட்டிக்கோ! மாதவனைப் பாத்துக்கோ!

"மாதவன் ஒரு ரேடியோ வொர்க்ஷாப்பில் லெக்சர் கொடுக்க வரப் போறாரு. ஒரு சீட் இருக்கு வரியா?" என்றார் ஷிவானி. கையிலிருந்த ஐஸ்க்ரீம் கப்பை அப்படியே கடாசிவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடினேன். சரியான ஜொள்ளு என்று நினைக்க வேண்டாம். எனக்கு லெக்சர்னா ரொம்பப் பிடிக்கும். (பிரிக்கவே வேண்டாம். அப்படியே சாப்பிடுவேன்!)



ப்ரொபஸர் மேடி, அழுல் பேபி புன்னகையோடு (வாவ்) என்னைப் பார்த்து ஸ்பெஷலா ஒரு 'ஹாய்' சொன்னார். 'நான் உங்க ஃபேன். ஆட்டோகிராப் கிடைக்குமா?' "ப்ளீஸ்" என்றார். சரி போனா போகட்டும் என்று போட்டுக் கொடுத்தேன். (சரி, சரி, ரொம்ப முறைக்காதீங்க)

"சினிமாவுக்கு எப்படி வந்தீங்க மேடி? எங்களுக்கு நடிக்கிறதுக்கு கொஞ்சம் டிப்ஸ் கொடுங்க மேடி, ப்ளீஸ் மேடி" என்று சினிமாக் கனவுகளோடு வந்திருந்த மாணவர்கள் காலேஜில் கேட்காத



டவுட்டையெல்லாம் மொத்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ரொம்ப காஷுவலா அரட்டை அடிக்கிற மாதிரி பதில் கொடுத்தார். மேடி... ம்ம்ம்... இது போல ஒரு ப்ரொபஸர் மட்டும் எனக்கு வந்திருந்தார்னா, எல்லா சப்ஜெக்ட்லயும் உங்க லஜ்ஜாவதி சென்டம் வாங்கியிருப்பா. இட்ஸ் ஓகே. மேடி அப்டிக்கா போனதும் இப்டிக்கா வந்த ஒருத்தர்.

ஸ்போர்டை எடுத்து வைத்துக் கொண்டு "டொய்ங் டொய்ங்", 'டொட்ட டொய்ங்' என்று டொய்ங்கத் தொடங்கினார். கிட்டத்தட்ட கப்புறு ரேஞ்சுக்கு இசை ஞானம் வளர்ந்தவுடன், இது போதும் சிறிது வயிற்றுக்கும் ஈயலாம் என்று GRT க்ராண்ட் டேஸிற்குப் பறந்தேன்.



பாலைவனம், ஒட்டகங்கள், தலைப்பாகை மனிதர்கள் இவை மூன்றும் கிடையாது. மற்றபடி ராஜஸ்தானை இழுத்துப் பிடித்து நிறுத்தியிருந்தார்கள். எல்லாம் நவராத்திரிக்காக.

இந்திப் பட டைட்டில்ஸ் போல் விதவிதமாய் உணவு வகைகள். 'தில் ஜாலி', 'கத்தா மீத்தா சேவ்', 'தில் குஷார் காடி, மிர்ச் கா அச்சார்' எல்லாமே அச்சா அச்சாதான். ஒய்யாரமாக நெய்யில் மிதந்தபடி தலையை மட்டும் வெளியே நீட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன சில ரசகுல்லாக்கள்.

"ஹாய் ஜிலேபி, இத்தனை நாளா என்னை விட்டுட்டு எங்கே போயிருந்தே?" என்று செல்லக் கோபத்துடன் சில ராஜஸ்தானியர்கள் அவற்றோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

தங்களது 'தில்வாலாக்களோடு' வந்திருந்த சிலர், ஜிலேபியைக் கடித்துக் கொண்டே, அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர். சென்னைவாசிகளுக்கோ, 'அட இதென்ன புதுசா' என்று தெரிந்து கொள்ளும் ஆவல்.

சாப்பிட்டு முடித்து பீடா போட்டுக் கொண்ட பின், வந்திருந்தவர்கள் அவரவர் ஒட்டகங்களில் ஏறி, ஸாரி... வாகனங்களில் ஏறி பயணிக்கத் தொடங்கினார்கள். நானும்தான்.

லக்கி கேர்ஸ் லஜ்ஜாவதி



காதலிஸம்

தன் காதலை வெளியிட என் தோழி கையாண்ட முறையைக் கேட்டால் அசந்து விடுவீர்கள். நாங்கள் சென்னை ஏ.ஜி. ஆபீஸில் பணிக்குச் சேர்ந்த புதுசு. நாற்பது நாட்கள் பயிற்சி வகுப்பு. என் தோழி சக ஊழியர் மீதான தன் காதலை வெளிப்படுத்த இயலாமல் தவித்த ஒரே சிக்கல், ஜாதி. ஒரு சனிக்கிழமையன்று பேசுவதற்காக கொடுக்கப்பட்ட தலைப்பு 'ஜாதிகள் ஒழியட்டும்' என் தோழியின் மனம் கவர்ந்தவர் விரைவாகப் பேசிவிட்டு, "ஜாதிகள் உண்மையிலேயே ஒழிவது இன்றைய இளைஞர்கள் கையில்தான் உள்ளது. அவர்கள் எதிர்ப்புகளுக்குப் பயப்படாமல் கலப்பு மணம் செய்து கொள்ள முன் வர வேண்டும்..." என்று முடித்தார். யாரும் எதிர்பாராத வகையில் 'சட்'டென எழுந்த என் தோழி, "நண்பர் கூறிய யோசனை உண்மையிலேயே அவர் உள்ளத்திலிருந்துதான் வந்தது என்றால், அவரே முன் உதாரணமாகத் திகழ்வாரா? எல்லாவிதத்திலும் அவருக்கு சமமாக உள்ள வேறு சாதிப் பெண்ணான என்னை மணக்க அவர் தயாரா?" என்று கேட்டு விட்டதும் எல்லோரும் திகைத்து விட்டோம்.

(பின்னர் என்ன நடந்தது என்கிறீர்களா? அவர் ஏற்கெனவே மணமானவராம். என் தோழி வாழ்க்கையையே வெறுத்துவிட்டாள்)

- சாலிகிராமம் சத்யஸ்ரீ

ஃபோக்கஸ் பிரச்னைகள், காலேஜ் புரோகிராம்ஸ், டேஸ்ட், காம்ஸ், உச்சாணி, ஸ்பெஷல் விழாக்கள் என சென்னை ஸ்கேனுக்கு பொருத்தமான விஷயங்களை எங்க போஸ்ட் பாக்ஸ், இன்பாக்ஸ், ஃபோன் ரிசீவர் என எதுக்கும் அனுப்பலாம். லஜ்ஜாவதியோடு எங்க டீமும் ரெடி. உங்கள் கற்பனை காதல் கடிதங்களை 'லப்-டப் லவ் லெட்டர்' என்று தலைப்பிட்டு அனுப்புங்கள்.

முகவரி,
சென்னை ஸ்கேன்,
47NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 032.
போன் : 22345622, 23, 24
E-mail : chennaiscan@kalkiweekly.com

ஹாய் சென்னை..!

தூள் க்ளிக்!



டிஜிட்டல் சண்முகம்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05* Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 *
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 24.10.2004

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358/ 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

